24 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

நதி 24 | பாலம் 07 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 01, 2014

# நிபுணர்களின் துணையுடன் உயர் ஆணையாளர் விரிவான விசாரணை நடத்தலாம்!

இலங்கை மீது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவின் முன்னெடுப்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேறியது. ஐ.நா.வின் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் பொருத்தமான நிபுணர்களின் துணையுடன் இலங்கையில் விரிவான விசாரணைகளை நடத்த இத்தீர்மானம் வழியமைத்துள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், மெஸிடோனியா, மொரீஷியஸ், மொன்டேநேக்ரோ ஆகிய நாடுகள் முன்னின்று கொண்டுவந்த தீர்மானத்திற்கு 47 உறுப்பு நாடுகளில் 23 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. 12 நாடுகள் இலங்கையை ஆதரித்து தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. இந்தியா உள்ளிட்ட மற்ற 12 நாடுகளும் வாக்கெடுப்பிலிருந்து ஒதுங்கிகொண்டன.



வாக்கெடுப்புக்கு முன்னதாக தீர்மானத்தை முன்வைக்கும் நாடுகள் சார்பில் பேசிய அமெரிக்கா, இலங்கை மீதான விசாரணையை மனித உரிமைகள் உயர் ஆணையாளர் ஏற்கவேண்டும் என்ற தீர்மானத்தின் கோரிக்கையை முன்மொழிந்தார். இரண்டு தரப்பினராலும் புரியப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில், ஐ.நா.வின் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் பொருத்தமான நிபுணர்களின் துணையுடன் விரிவான விசாரணைகளை நடத்தவேண்டும் என்று இந்தத் தீர்மானம் கோருகிறது" என்றார் அமெரிக்கப் பிரதிநிதி. இலங்கையில் தற்போது நிலவும் மனித உரிமைகளின் நிலவரம் பற்றியும் தொடர்ந்து கண்காணித்து, மதிப்பிட்டு, அறிக்கை சமர்ப்பிக்குமாறும் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளரின் அலுவலகத்தை இந்தத் தீர்மானம் கோரியுள்ளது.

## அமெரிக்காவின் திருத்தப்பட்ட பிரேரணை

அமெரிக்க மனித உரிமை சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் திருத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையில் உள்ள சில விடயங்கள். இப்பிரேரணையில் 12 பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் 10ஆவது மிகவும் முக்கியம் வாய்ந்தது.

10. மனித உரிமை சபையின் உயர் ஆணையாளர் இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒரு நம்பத்தகுந்த விசாரணைதேவை என தெரிவித்த பரிந்துரையை கருத்தில் கொண்டு மனித உரிமை சபையின் ஆணையாளர் அலுவலகத்தை பின்வரும் மூன்று விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறது.

(a) இலங்கையில் நடைபெறும் மனித உரிமை சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை கண்காணிப்பதுடன் (Monitor) இலங்கை அரசு மனித உரிமையை மதிப்பளிக்க எடுக்கும் நாடுதழுவிய நிகழ்வுகளை மதிப்பீடு செய்தல் (Assess Progress)

(b) மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட நிபுணர்களின் உதவியுடன் இலங்கை அரசின் LLRC ஆணைக்குழு விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அதே காலப்பகுதியில் இருதரப்பாலும் செய்யப்பட்டதாக கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள், குற்றச்செயல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் பற்றி விரிவான விசாரணை ஒன்றை (Comprehensive Investigation) நடத்தி இச்செயல்களுக்கு பொறுப்பாக இருந்தவர்களை பொறுப்புக் கூறுமுகமாக (Ensuring Accountability) கண்டறிதல்.

(c) இவ்விடயங்கள் தொடர்பாக மனித உரிமை சபையின் உயர் ஆணையரது அலுவலகம் ஒரு வாய்மூல அறிக்கையை மனித உரிமை சபையின் 27ஆவது மாநாட்டிலும் (செப்ரெம்பர் 2014) எழுத்து மூலமான அறிக்கையை மனித உரிமை சபையின் 28ஆவது மாநாட்டிலும் (மார்ச் 2015) சமர்ப்பித்தல்.

11. மனித உரிமை சபையின் உயர் ஆணையாளரது அலுவலகத்தையும் அவருக்கு உதவும் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட நிபுணர்களையும் மேற்கூறிய விடயங்களை நடைமுறைப்படுத்த இலங்கை அரசிற்கு போதிய அளவு தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குமாறும் ஊக்குவிக்கிறது.

12. இலங்கை அரசை மனித உரிமை சபையின் உயர் ஆணையாளர் அலுவலகம் இந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

## அமெரிக்கப் பிரேரணை 11 அதிகப் படியான வாக்குகளால் வெற்றி!

மூன்று சுற்று வாக்கெடுப்பு

தொடர்ச்சி 02ஆம் பக்கம்



Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி

TOYOTA MARKVILLE
905.294.8100

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd.
Company#10214

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

THE TRUSTED MORTGAGE SPECIALISTS
"I Work for you Not for the Bank"
BonaFide
Some Terms & Conditions May Apply
•I will arange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate of 1% per month.

Thayalan Goblakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com

# நிபுணர்களின்....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

நடைபெற்றது. அதன் பின்னர் பிரேரணைக்கு ஆதரவாக 23 நாடுகள், எதிராக 12 நாடுகள், நடுநிலையாக 12 நாடுகள் என வாக்குகள் கிடைத்ததுடன், இலங்கை மீதான பிரேரணை வெற்றியடைந்துள்ளது. தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த 23 நாடுகள் - ஆர்ஜென்ரினா, பெனின், ஒஸ்ரியா, பொஸ்சுவானா, பிரேசில், சிலி, கோஸ்திரிக்கா, கொத்து டிவ்வோர், செக் குடியரசு, எஸ்தோனியா, பிரான்ஸ், ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, மெக்சிக்கோ, மொன்டேநேக்ரோ, பெரு, தென்கொரியா, ரூமேனியா, சியாரோலியோன், மனிடோனியா, இங்கிலாந்து, அமெரிக்கா.

ஐ.நா. மனித உரிமைப்பேரவை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஊடாக இலங்கைக்கு மிகத் தெளிவான செய்தி வழங்கப்பட்டுள்ளது என அமெரிக்கா அறிவித்துள்ளது. நித்தியமான சமாதானம், சௌ-பாக்கியத்தை ஏற்படுத்த வேண்டிய காலம் மலர்ந்துள்ளது என்ற செய்தி இலங்கைக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார். நீதியை நிலை நாட்டுதல், குற்றச் செயல்கள் தொடர்பில் பொறுப்பு கூறுதல், நல்லாட்சியை ஏற்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்ள இலங்கைக்கு இன்னமும் காலம் கடந்துவிடவில்லை. மனித உரிமை பேணல், ஜனநாயக ஆட்சி




எதிராக வாக்களித்த 12 நாடுகள் - அல்ஜீரியா, பாகிஸ்தான், ரஷ்யா, சவூதி அரேபியா, சீனா, கொங்கோ, கென்யா, மாலைதீவு, ஐக்கிய அரபு இராச்சியம், கியூபா, வெனிசூலா, வியட்நாம்.

நடுநிலைவகித்த 12 நாடுகள் - இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், தென் ஆபிரிக்கா, கஸ்கஸ்தான், குவைத், மொராக்கோ, நமீபியா, பிலிப்பைன்ஸ், புர்கினா பாசோ, காபோன், எதியோப்பியா.

தீர்மானத்தின் ஊடாக மிகத் தெளிவான செய்தி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது - அமெரிக்கா

போன்றவற்றுக்கு சர்வதேச சமூகம் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என்பது இந்த தீர்மானம் மூலம் வெளிப்பட்டுள்ளது. சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான அழுத்தங்கள் குறித்து அமெரிக்கா கண்காணித்து வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மானம் வெற்றி, பெருமிதமாக உள்ளது – பிரிட்டன்

இலங்கையில் நடந்த இறுதிக்கட்ட போரின் போது மனித உரிமை மீறலில் ஈடுபட்ட இலங்கை மீது சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் தீர்மானம் ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத் தில் நிறைவேறியது. இதை இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் வரவேற்றுள்ளார்.

மேலும், மனித உரிமை மீறல்கள் குறித்த சர்வதேச விசாரணைக்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க ஐ.நா. மனித உரிமை ஆணையம் முடிவு செய்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற இத்தனை வருடங்களில் உண்மையில் என்ன நடந்தது என்பதை தெரிந்து கொள்ள வேண்டிய இலங்கை மக்களுக்கு இது ஒரு வெற்றி. இலங்கை அரசு போர் குற்ற விசாரணை மீதான தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியதன் விளைவாகவே இந்த தீர்மானம் நிறைவேறியுள்ளது. அதிபர் ராஜபக்ச சர்வதேச விசாரணை எனும் இந்த புதிய வாய்ப்பை பயன்படுத்தி இலங்கையின் கடந்த கால பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பார் என நம்புகிறேன். இந்த தீர்மானத்தின் வெற்றிக்கு பிரிட்டனின் பங்களிப்பு குறித்து பெருமிதமாக உள்ளது என்றார்.






## இந்தியா ஏமாற்றிவிட்டது - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மனித உரிமைகள் நிலவரங்கள் குறித்து அமெரிக்கா தலைமையிலான நாடுகள் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை ஆதரித்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இந்த தீர்மானம் தொடர்பில் இந்தியா எடுத்த நிலைப்பாடு தமிழ் மக்களுக்கு ஒரு பெரிய ஏமாற்றம் என்று கூறியுள்ளது. இந்த தீர்மானம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் விவாதிக்கப்பட்ட போது அங்கு சமூகமளித்திருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஐ.நா. ஆணையர் இலங்கை நிலவரம் குறித்து விசாரிப்பார் என்று கூறும் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தமது கட்சி வரவேற்பதுடன், அப்படியான ஒரு விசாரணை ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் இலங்கையில் நடத்தப்படுமிடத்து, அதற்கு தமது அமைப்பு பூரண ஆதரவை வழங்கும் என்றும் கூறியுள்ளார். இருந்தபோதிலும், இந்த தீர்மானத்துக்கான வாக்களிப்பில் இருந்து இந்தியா விலகி இருந்தமை, அதற்காக அதன் தூதுவர் கூறிய காரணங்கள், மற்றும் போதுமான நிதி இல்லை என்பதை காரணம் காட்டி அந்த தீர்மானத்தை பின் போடவும், சர்வதேச விசாரணையை தடுக்கவும் பாகிஸ்தான் கொண்டுவந்த எதிர்ப்புகள் ஆகியவற்றுக்கு இந்தியா ஆதரவு வழங்கியமை ஆகியவை குறித்து இலங்கை தமிழ் மக்கள் ஏமாற்றம் அடைந்திருப்பதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார். அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்காது நடுநிலையாக செயற்பட்டதன் மூலம் இந்தியா தமிழர்களை ஏமாற்றிவிட்டதாகத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளிற்கு நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார். பிரேரணை மீதான வாக்கெடுப்பு முடிவடைந்த நிலையில் இந்திய தொலைக்காட்சி ஒன்றிற்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## இலங்கை இந்தத் தீர்மானத்தை ஒட்டுமொத்தமாக நிராகரித்துள்ளது.

“இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அபாயகரமான முன்னுதாரணமாக அது அமைந்து விடும். அதாவது இந்த ஆணையத்தின் நடைமுறைகளை மீறி குறுக்கு வழிகளில் தங்களின் வேலைகளை முன்னெடுத்துக் கொள்வதற்கு சில நாடுகளுக்கு வழிகிடைத்துவிடும்” என்றார் ஜெனீவா மனித உரிமைகள் பேரவைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ரவிநாத ஆரியசிங்க.

தீர்மானத்தில் பொருத்தமான நிபுணர்கள் தொடர்பில் கூறப்படுகின்ற ஏற்பாடு தெளிவின்றி இருப்பதாகக் கூறிய இலங்கைப் பிரதிநிதி, அதன்மூலம் மூன்றாவது தரப்பு சக்திகள் இலங்கையின் விவகாரத்தில் நுழைந்து விடுவதற்கும் கதவுகள் திறக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார். ஐ.நா. மனித

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM™

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜய்பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** Can Media Publishing Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை ‘விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்’ ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# மனிதஉரிமை ஆணையகத்தின் விசாரணைப் பொறிமுறை எவ்வாறு அமையப் போகின்றது?

உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாக மிகவும் பரபரப்பாக அவதானிக்கப்பட்ட, ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை பேரவையின் 25வது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் அமெரிக்கா முன்வைத்த பிரேரணை நிறைவேற்றப்பட்டு விட்டது. மார்ச் 27ம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின் இறுதி வடிவம் 11 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றது. பிரேரணைக்கு ஆதரவாக 23 வாக்குகளும் எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 12 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. இந்தியா, தென் ஆபிரிக்கா ஜப்பான் மற்றும் இந்தோனேஷியா உள்ளிட்ட 12 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. ரஷ்யா, கியூபா, வெனிசுவேலா, சீனா, மாலைத்தீவு உள்ளிட்ட 12 நாடுகள் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன. இதனிடையே, இப்பிரேரணை தொடர்பான இந்தியாவின் வகிபாகத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட முந்தைய இரண்டு தீர்மானங்களின் போதும் அவற்றிற்கு ஆதரவாக வாக்களித்த இந்தியா, இம்முறை வாக்களிக்காமல் விலகியிருந்தமை பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி யிருந்தாலும் இந்தியாவின் நிலைப்பாட்டை புரிந்து கொள்ளக் கூடியதாகவே உள்ளது.

அதாவது, கடந்த தீர்மானங்கள் விவாத்திற்கு உட்படுத்தப் பட்ட போது அவற்றின் தீவிரத் தன்மையை தளர்த்தும் காரி யத்தை இந்தியாவே செய்தது. அவ்வாறு தளர்த்தப்பட்ட தீர்மானத்தையே இந்தியா ஆதரித்தது. இம்முறை இந்தியா விற்கு அது முடியாமல் போயுள்ளது. அதன் காரணமாகவே இந்தியா விலகி நிற்க வேண்டி வந்தது. இந்தப் பிரேரணையில் என்ன முக்கியமாக அம்சம் என்பதை சுருக்கமாக சொல்வதானால், இலங்கையில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்தும் அதிகாரம் ஐ.நா மனிதஉரிமை ஆணையகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதுதான். அதாவது, போரின் போது இரண்டு தரப்பினராலும் புரியப்பட்ட பாரதூரமான மனிதஉரிமை மீறல்கள், துஸ்பிரயோகங்கள் மற்றும் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில், ஐ.நாவின் மனித உரிமைகள் உயர் ஆணையர் பொருத்தமான நிபுணர்களின் துணையுடன் விரிவான விசாரணைகளை நடத்தவேண்டும் என்று இந்தத் தீர்மானம் கோருகிறது.

இலங்கையில் தற்போது நிலவும் மனிதஉரிமைகளின் நிலவரம் பற்றியும் தொடர்ந்து கண்காணித்து, மதிப்பிட்டு, அறிக்கை சமர்ப்பிக்குமாறும் ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையரின் அலுவலகத்தை இந்தத் தீர்மானம் கேட்டுக் கொண்டுள்ளது. அமெரிக்க பிரேரணை வெளியிடப்படுவதற்கு முன்னதாக ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதற்கு சார்பானதாகவே அமெரிக்க பிரேரணை அமைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. 'இலங்கை விவகாரத்தில் சர்வதேச விசாரணை அவசியமானது என்பதுடன் சாத்தியமானதாகவும் உள்ளது. உள்நாட்டு விசாரணைச் செயற்பாடு தோல்வி யடைந்துள்ள நிலையில் சர்வதேச விசாரணை ஆரோக்கிய மான வகிபாகத்தை வகிக்க முடியும். இலங்கையில் சுயாதீன சர்வதேச விசாரணை பொறிமுறையை நிறுவுமாறு இந்தப் பேரவைக்கு நாங்கள் பரிந்துரைக்கின்றோம். புதிய சாட்சிகள் சர்வதேச பொறிமுறையின் முன்னால் வருவதற்கு எதிர்பார்க் கின்றன. பொறுப்புக் கூறலையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக ஐ.நா. மனித உரிமைப் பேரவை அலுவலகம் வழங்குவதற்கு முன்வந்த தொழில்நுட்ப உதவிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் சாதமாக பதிலளிக்கவில்லை.

தற்போது இடம்பெற்றுவரும் மனித உரிமை காப்பாளர்கள் மீதான கெடுபிடிகள் குறித்து நாங்கள் அதிருப்தி யடைந்துள்ளோம். இந்தப் பேரவையின் அமர்வு நடைபெறும் போது கூட இரண்டு அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களின் விடுதலையை நாங்கள் வரவேற்கின்றோம். எனினும், அவர்கள் மீதான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடுகள் குறித்து கரிசனை கொண்டுள்ளோம். யுத்தம் முடிவடைந்து ஐந்து வருடங்கள் முடிவடையப்



போகின்ற நிலையில் இரண்டு தரப்பினராலும் மேற்கொள்ளப் பட்ட மீறல்கள் மற்றும் அதனால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து மனிதஉரிமை பேரவை மீளவும் சிந்திக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் துயரங்களை ஆராயாமையானது அரசாங்கத்தின் நல்லிணக்க செயற்பாடுகளை குறைத்து மதிப்பிட வைக்கின்றது. அண்மைய ஆண்டுகளில் அரசாங்கம் கடந்தகால மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய பல உள்நாட்டு பொறி முறைகளை முன்னெடுத்தது. எனினும், அவை பாதிக்கப் பட்டவர்களையோ சாட்சியாளர்களையோ ஆர்வம் கொள்ளச் செய்யவில்லை. எனவே, இலங்கை விவகாரத்தில் சர்வதேச விசாரணை அவசியமானது என்பதுடன் சாத்தியமானதாகவும் உள்ளது. உள்நாட்டு விசாரணை செயற்பாடு தோல்வி யடைந்துள்ள நிலையில் சர்வதேச விசாரணை ஆரோக்கிய மான வகிபாகத்தை வகிக்க முடியும்' இவ்வாறு ஜெனிவா வில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை குறித்த விவாதத்தின் போது ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளை உரையாற்றியிருந்தார். அவரது அறிக்கையினையும், கருத்துக்களையும் இலங்கை அரசு உடனடியாகவே நிராகரித்தது. இது போன்று கேட்டுக் கொள்ளும் அதிகாரம் அவருக்கு இல்லை என்றும், இலங்கை அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமே தவிர அதற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது என்றும் ஐ.நா.சபைக்கான இலங்கை தூதர் ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்திருந்தார்.

இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள அமெரிக்க பிரேரணையினை யும் இலங்கை அரசு நிராகரித்துள்ளது. இது இலங்கையின் இறைமையை மீறும் நடவடிக்கை எனவும் சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ வெளிப்படையாகவே தெரிவி த்து விட்டார். இலங்கைக்கு ஆதரவளிக்கும் சில நாடுகளும் இலங்கை மீதான இந்தப் பிரேரணை சரியான வழிமுறை இல்லை என விமர்சித்து வருகின்றன. இந்தப் பிரேரணை தவறானது அல்லவெனவும், இலங்கைக்கு சாதகமானதே எனவும் அமெரிக்கா கருத்து வெளியிடுகின்றது. மனிதஉரிமை பேரவையினால் முன்னெடுக்கப்படும் விசாரணைக்கு முழுமை யாக ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கை அரசாங்கத்தை அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது. "ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை இலங்கைக்கு எதிரானது என்று வெளியிடப்படும் கருத்து முற்றிலும் தவறானது. இது, இலங்கையின் ஜனநாயகம் மற்றும் இறைமையை அபிவிருத்தி செய்வதற்கான தீர்மானமாகும்" என அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் மிச்செல் ஜே. சிசன் தெரிவிக்கின்றார். "இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், துன்புறுத்தல்கள், வன்முறைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். இலங்கை அரசு உட்பட அதனுடன் தொடர்புடைய மேலும் சில குழுக்கள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். காரணம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் நாம் தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது" என்றும் அமெரிக்கத் தூதுவர் தெரிவிக்கின்றார்.

**- விகிர்தன் -**

இவ்வேளையில், இலங்கையிலுள்ள சில ஆய்வாளர்களின் கருத்துக்களையும் இங்கு உற்று நோக்கலாம். இலங்கையில் யுத்தத்தின் போது இரு தரப்பினராலும் புரியப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்த ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை குழுவொன்றை அமைப்பார் எனவும், குறித்த விசாரணைக்கு எந்த வகையிலும் ஒத்துழைப்பு வழங்கப்பட மாட்டாதென இலங்கை திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில், நவநீதம்பிள்ளை ஒரு தரப்பு விசாரணைகளை நடத்தலாம் எனவும் இலங்கையின் முன்னாள் இராஜதந்திரி கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார். ஆனாலும் தெளிவான நிலைப்பாடு எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நிறைவேற்றப்பட்ட பிரேரணை பாரிய வலுவுடையது அல்லவெனினும், எதிர்காலத்தில் ஐ.நா பாதுகாப்பு சபையில் அது சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளதென இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பிரதிபா மகாநாமஹேவா குறிப்பிடுகின்றார். பாதுகாப்பு சபையில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால் இலங்கை மீதான நிராகரிப்பு அல்லது பொருளாதாரத் தடை இவற்றில் ஏதேனும் ஒன்று சாத்தியமுடைய வாய்ப்புள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்போது இறுதியாக எழுந்துள்ள கேள்வி- அல்லது எதிர்பார்ப்பு என்னவெனில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் அடுத்ததாக எடுக்கப்போகும் நகர்வு என்ன?, அவரால் உருவாக்கப்படவிருக்கும் பொறிமுறை எவ்வாறானதாக அமையப்போகிறது என்பது தான். முழுவதுமான விசாரணையை ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் பொறுப்பேற்குமா அல்லது உள்நாட்டு விசாரணையை ஆணையகம் அவதானிக்கும் விதமான பொறிமுறை ஒன்று அமைக்கப்படுமா? சர்வதேச விசாரணையை புறக்கணிப்பதாக தெரிவிக்கும் இலங்கை அரசாங்கம் இவ்வாறான பொறிமுறைக்குள் இணைந்து கொள்ளுமா?

இவற்றையெல்லாம் பொறுதிருந்துதான் பார்க்க வேண்டும்.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# பேதங்கள் பாராததே தொண்டுள்ளம்

உங்களைக் காட்டிலும் இன்னொன்றுக்கு முக்கியத்துவம் தரும் எண்ணம் உங்களுக்கு இருந்தால், நீங்கள் தன்னார்வத் தொண்டராக மலர வாய்ப்பிருக்கிறது. உங்களைப் பற்றி அளவுக்கதிகமான அபிப்பிராயங்கள் உங்களுக்கிருந்தால் உங்களால் ஒரு தொண்டராக முடியாது. எனவே நீங்கள் ஒரு தொண்டரா? இல்லையா? என்பது எதைக் காட்டுகிறது தெரியுமா? நீங்கள் வாழ்க்கையின் இயல்புக்கு உட்பட்டவரா? எதிரானவரா? என்பதைத்தான்!

எனவே நீங்கள் ஒரு நல்ல தொண்டராக உருவாக வேண்டுமென்றால், உங்களுக்கு விருப்பமில்லாத இடங்களில், உங்களுக்கு விருப்பமில்லாத வேலைகளைச் செய்ய நீங்கள் பணிக்கப்பட வேண்டும். உங்களால் சகிக்க முடியாத மனிதர்களுடன் நீங்கள் சேர்ந்து செயல்படும் சூழல் உருவாக்கப்பட வேண்டும். பிடிக்காத விடயங்கள் என்பதே உங்கள் வாழ்வில் இல்லாமல் போனால் நீங்கள் ஒரு தொண்டர். நாம் அத்தனைக்கும் ஆசைப்படு என்பவர்கள். நமக்குப் பிடிக்காத விடயங்கள் என்பதே கிடையாது.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

இது வேண்டும், இது வேண்டாம் என்று கருதத் தொடங்கினால், நீங்கள் போராட்டங்களைச் சந்திப்பீர்கள். எப்போதெல்லாம் பேதம் பாராட்டுகிறீர்களோ, அப்போதெல்லாம் போராட்டங்களும், பிளவுகளும் நிறைந்த உலகை உருவாக்குகிறீர்கள்.

படைப்பு, பிரித்தறிய முடியாதது. படைக்கப்பட்ட எல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்பிலேயே இருக்கிறது என்பதை நவீன விஞ்ஞானம் ஐயத்திற்கு இடமின்றி இன்று நிரூபித்துள்ளது. உங்கள் மனதில் உருவாகும் பேதங்களின் அடிப்படையில் விருப்பு-வெறுப்பு, அன்பு-பகையுணர்வு என்று நீங்கள் பிளவுபடுத்திக் கொண்டே போனால் நீங்கள் படைப்புக்கும் படைத்தவருக்கும் எதிராக இயங்குவதாய் பொருள்.

மாமரங்கள் சுவையான கனிகளை விளைவிக்கின்றன. அவற்றின் வேர்களோ அசுத்தமான தண்ணீரைக்கூட உறிஞ்சுகின்றன. இங்கு அசுத்தத்தை உறிஞ்சி அருமையான மணமும், அபாரமான சுவையும் உருவாகின்றனவே, இவற்றை எவ்வாறு பிரித்தறிவீர்கள்? இரண்டையும் கையாளும் முறையைத்தான் நீங்கள் அறிய வேண்டுமே தவிர, அசுத்தம், உணவு இரண்டையும் நீங்கள் பிரித்தாளக் கூடாது.

தர்க்க அறிவைத் தவறாகப் பயன்படுத்துவதன் விளைவு இது. பகுத்துப் பார்ப்பதற்காகப் பயன்படும் தர்க்க அறிவை, பிரித்துப் பார்ப்பதற்காகப் பயன்படுத்தியதால் விருப்பு-வெறுப்புகள் தோன்றின.


ஒரு தொண்டர், எப்போதும் சொர்க்கத்திலேயே இருப்பவர். ஏனென்றால், தான் செய்வதில் முழு உடன்பாட்டுடன், மனமொன்றிச் செய்கிறார். விருப்பமில்லாமல் எதைச் செய்தாலும் அது நரகம். விரும்பிச் செய்யும் எதுவும் சொர்க்கம். எனவே ஒரு தொண்டருக்குரிய மனப்பான்மை உங்களிடம் உருவாகாத பட்சத்தில், வாழ்வின் துன்பங்கள் உங்களைத் துரத்தும் அல்லது துன்பங்கள் குறித்த அச்சங்கள் உங்களைத் துரத்தும்.

சிலர் வாழ்வில் வெற்றிகரமாக வளரத் தொடங்கி விட்டால், ஆழமான விருப்பு-வெறுப்புகளை உருவாக்கிக் கொள்வது தான் தங்களின் ஆளுமைக்கு அடையாளம் என்று நினைக்கிறார்கள். விருப்பு வெறுப்பு களால் உங்கள் ஆளுமை உருவாகலாம். ஆனால் உங்கள் இருப்பு உணரப்படா மலேயே போய் விடும். ஒரு தொண்டருக்கு தன் ஆளுமையைத் தூக்கிச் சுமக்க அவசியமில்லை. அவரின் அற்புதமான இருப்பு உணரப்படும்.

அதனால்தான் வெற்றிகரமாகவும், வளமாகவும் வாழும் யாரும், வாழ்வில் சிறு தொந்தரவு ஏற்பட்டால் கூட நிலை குலைந்து விடுகிறார்கள். வாழ்வை மனம் போலப் பிரித்துப் பார்ப்பவர்களுக்கு படைப்பும், படைத்தவனும் எதிராகவே இயங்கும். அவர்கள் வாழ்வில் அருள் இருக்காது.

முழு விருப்புணர்வுடன் இருப்பதே தொண்டின் தன்மை. அப்போதுதான் அருள் உங்களைத் தொடும். இல்லையென்றால், பாத்திரத்திலேயே உள்ள கரண்டி, உணவின் சுவையை உணராததுபோல் வாழ்வை உணராமலேயே வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.

எவ்வளவு தொண்டு செய்கிறீர்கள் என்பதை விட, தொண்டுக்கு எவ்வளவு தூரம் தயாராக இருக்கிறீர்கள் என்பதே முக்கியம். ஈஷாவில் அதற்கான வழிமுறைகள் பலவற்றை உருவாக்குகிறோம். ஒவ்வொரு புதன்கிழமையும் மதிய உணவைத் துறந்து அதற்காகும் செலவை ஈஷா வித்யா பள்ளிக் குழந்தைகளுக்கு ஒதுக்குவது என்கிற திட்டம் கூட அத்தகையதுதான்.



**சத்குரு வாசுதேவ்**

எதிர்காலத்தில் தொண்டு நெறியின் தனித் தன்மை வெளிப்படும் விதமாய் ஈஷாவில் எத்தனையோ திட்டங்கள் உருவாகவுள்ளன. பேதமறியாத தொண்டுள்ளம் கொண்டவர்கள் தேவை.


## ஆன்மிகச் சிந்தனை

**- சற்குரு**

அவ்வப்போது பலரும் நான் ஏன் பிறந்தேன், எனது வாழ்க்கைக்கு என்ன நோக்கம் இருக்கின்றது என்று கேட்கின்றனர். நான் கேட்கிறேன். உங்கள் வாழ்க்கைக்கு ஒரு நோக்கமும் இல்லாமல் இருந்தால் தான் என்ன? முதலில் உங்களுக்குள் இந்த கேள்வி எழுவதற்குக் காரணமே, நீங்கள் இன்னமும் வாழ்க்கையின் பேரானந்தத்தை ருசிக்கவில்லை என்பதே! எனவேதான் வாழ்க்கை அனுபவங்களுக்கு அர்த்தம் தேடுகிறீர்கள், மனிதனாக இருக்கும் மகத்துவத்தை நீங்கள் இன்னும் அறியவில்லை. உங்கள் ஒவ்வொரு அனுபவமும் ஆனந்தத்தில் திளைத்தால் இப்படி கேட்கமாட்டீர்கள். இந்த தன்மையைக் கடக்காமல் வாழ்க்கைக்கு அர்த்தம் தேடும்போது எல்லாவித தவறான முடிவுகளுக்கும் தான் வருவீர்கள். தற்போதைய உங்கள் வாழ்க்கை அனுபவங்களை துன்பங்கள் என்று முத்திரை குத்துவீர்கள். பிறகு அவற்றை கடவுள் உங்களுக்கு வைக்கும் பரீட்சை என்று நினைப்பீர்கள். கடைசியாக, இதில் நான் தேர்ச்சி பெற்றாக வேண்டும் என்று முடிவெடுப்பீர்கள். ஆக எல்லாதவறான முடிவுகளுக்கு வருவீர்கள்.

உங்கள் வாழ்க்கைப் பாதை எப்போதோ ஒரு கணம் வெற்றி, எப்போதோ ஒருது கணம் இன்பம், எப்போதோ ஒரு கணம் மகிழ்ச்சி என்று போகிறது. இதையெல்லாம் கழித்துப் பார்த்தால், காலையில் எழுகிறீர்கள், சமைக்கிறீர்கள், வயிற்றுக்கு அள்ளிப் போடுகிறீர்கள், அலுவலகம் செல்கிறீர்கள். வீட்டிற்கு சோர்வுடன் திரும்புகிறீர்கள், மீண்டும் காலையில்.... இப்படித்தான் உங்கள் வாழ்க்கை போகிறது.

இருப்பே பேரானந்தமாக இருந்தால், நோக்கத்தைப் பற்றி யாருக்கு என்ன கவலை? துன்பமான மனிதர்கள் தான் ஒன்று சேர்ந்து தத்துவங்கள், மதங்கள், சமூகங்கள் என்று உருவாக்கி வாழ்க்கைக்கு எல்லாவித நோக்கங்களையும் கண்டுபிடித்துள்ளார்கள். உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் உங்களுக்குள் பேரானந்தத்துடன் வெடிக்கும் போது, ஏன், எதற்காக என்னும் கேள்வி எப்படி வரமுடியும்? இந்த நிலையின் தான் உங்களுக்கு யோகா உதவுகிறது. யோகா என்னும் விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி உங்கள் எல்லைகளைத் தகர்த்து முன்னேறும் போது வெறுமனே வாழ்வதே பேரானந்தம் தான், யோக விஞ்ஞானத்தை நீங்கள் முறையாகப் பயன்படுத்த நாங்கள் எப்போதும் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம்.






- லைன் ஒப் கிரெடிட் எடுக்க,
- கடன்களை ஒன்றுபடுத்தி எல்லா பேமேன்டையும் ஒரே பேமேண்டாக மாற்ற,
- ரீபைனான்ஸ் செய்ய,
- முதலாவது, 2 வது மற்றும் 3வது மோட்கேஜ் எடுக்க,
- பாங்க்ரப்சி செய்தோருக்கான மோட்கேஜ் எடுக்க,
- பவர் ஒப் சேல் பிரச்சினையை தடுக்க,
- வீடு வாங்க அல்லது விற்க மற்றும் உங்கள் வீட்டினை அல்லது பேஸ்மென்ட்டை வாடகைக்கு விட,
- மற்றும் எதுவாக இருந்தாலும்

3 Yrs Fixed Rate : 2.59 %

5 Yrs Variable Rate : 2.35 %

** OAC

உங்களின் சரியான தெரிவு

# மோட்கேஜ் கிளினிக்



தயா (PK) கந்தையா BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001083
**Cell : 416-716-8707**



ஜெ (Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Mortgage Development Manager / Agent
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

CENTUM™ Rapid Mortgages Inc.
LIC # 10156

80 Nashdene Road, Suite # 211
Toronto, ON. M1V 5E4.
416-816-9011 / 416-644-3555 /416-259-2002

rapid realty inc.

# நிபுணர்களின்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

உரிமைப் பேரவை தீர்மானத்தை நிராகரிப்ப தாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அமெரிக்க ஆதரவு தீர்மானத்தை நிராகரிக்கின்றேன். தீர்மானத் திற்கு பதிலாக அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த தீர்மானம் நல்லிணக்கத்தை காயப்படுத்தும் வகையில் அமையும். இந்த தீர்மானம் நல்லிணக்கத்திற்கு வழியமைக்காது. எனினும், நான் இந்த தீர்மானத்தினால் கலங்கப் போவதில்லை. ஆரம்பிக்கப்பட்ட நல்லிணக்க முயற்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

## 24 நாடுகளை வசியப்படுத்த முடிந்தது!- இலங்கை அரசாங்கம் பெருமிதம்

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான யோசனையின் போது வாக்கெடுப்பு முடிவுகள் குறித்து இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. குறுஞ்செய்தி மூலம் அரச தகவல் திணைக்களம் வெளியிட்ட செய்தியில்




"யோசனைக்கு 23 நாடுகள் வாக்களித்தன. எதிராகவும் வாக்களிக்காமலும் 24 நாடுகள் இருந்தன. எனவே எதிராக மற்றும் வாக்களிக்காமல் இருந்த நாடுகள் இலங்கை வழங்கிய விளங்கங்களில் நம்பிக்கை கொண்ட நாடுகளாகும்." என்று அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. ஜெனீவாவில் 47 உறுப்பு நாடுகள் உள்ளன. இதில் 23 நாடுகள் அமெரிக்க பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன. 12 நாடுகள் எதிராகவும் இந்தியா உட்பட்ட 12 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்காமலும் இருந்தன.

## அமெரிக்க பிரேரணை இலங்கையின் இறையாண்மையை மீறியுள்ளது! - வாக்களிக்காமைக்கு இந்தியா விளக்கம்

இம்முறை ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பில் ஆரம்பம் முதலே காத்துவந்த மௌனத்தை இந்தியா இறுதிநாளில் கலைத்தது. வரம்பு கடந்த அதிகாரத்துடன் கூடிய வெளிநாட்டு விசாரணை பொறிமுறைகளை அமைப்பது என்பது, 2006ல் இந்த மனித உரிமைகள் ஆணையம் உருவாகக் காரணமாக இருந்த பொதுச்சபை தீர்மானத்தின்படி, பேச்சுவார்த்தை மற்றும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு என்கின்ற இந்த ஆணையத்தின் தேவையை பிரதிபலிப்பதாக அமையவில்லை. அதனால் வாக்கெடுப்பிலிருந்து ஒதுங்கிக் கொள்கிறோம் என்றார் இந்தியப் பிரதிநிதி. இலங்கையின் இறையாண்மையை பாதிக்கும் வகையில் அமைந்ததன் காரணமாகவே அமெரிக்காவின் பிரேரணைக்கு இந்தியா ஆதரவளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் செயிட் அக்பர்தீன் இதனைத் தெரிவித்துள்ளார். அமெரிக்காவினால் தாக்கல் செய்யப்பட்ட சிறிலங்காவுக்கு எதிரான பிரேரணை 11 மேலதிக வாக்குகளை நிறைவேற்றப்பட்ட போதும், அதற்கு இந்தியா ஆதரவளித்திருக்கவில்லை. இது தொடர்பில் டெல்லியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய அக்பர்தீன், இந்த பிரேரணை இலங்கையின் இறைமையை மீறும் வகையில் இருப்பதாக தெரிவித்தார். அத்துடன் இந்த பிரேரணையால் எந்தவித பயனும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைக்கு ஆதரவாக பாகிஸ்தானினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் தோல்வியடைந்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஆரம்பம் முதலே இலங்கைக்காக முன்னின்று குரல் கொடுத்துவந்த பாகிஸ்தான் இறுதிநாளிலும் அந்தப் பணியைச் செய்தது. இலங்கை மீது இந்த தீர்மானத்தைக் கொண்டு வருகின்ற நாடுகளின் சொந்த மனித உரிமை விவகாரங்களைப் பார்த்தால் அவர்களுக்கு இலங்கை மீது பொறுப்பு சுமத்த முடியாது. அந்த நாடுகள் இங்கு மற்றவர்களின் பிரச்சனைகளில் நீதிபதிகளாக இருக்க முடியாது என்றார் பாகிஸ்தானிய பிரதிநிதி. வாக்கெடுப்பு நிலைக்கு சபை வந்தபோது, இலங்கை தொடர்பில் விசாரணை நடத்த மனித உரிமைகள் ஆணையத்திடம் போதுமான நிதிவளம் இல்லை என்று பாகிஸ்தான் வாதிட்டது. ஆனால், ஆணையத்தின் பொதுவான பட்ஜெட்டிலிருந்து இதற்கான நிதி ஒதுக்க வழிசெய்யப்படும் என்றும் நிதி விவகாரத்துக்குப் பொறுப்பான அதிகாரி சுட்டிக்காட்டினார். ஆனாலும் இலங்கை மீதான தீர்மானத்தை தாமதப்படுத்தும் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என்ற பாகிஸ்தானின் வாதம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு பெரும்பான்மை வாக்குகளால் நிராகரிக்கப்பட்டது.

இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தப்படுவதற்கு வழிசெய்யக்கூடிய தீர்மானத்தின் 10-வது பிரிவை நீக்க வேண்டும் என்று கோரிய இலங்கைக்கு ஆதரவான கோரிக்கையும் வாக்கெடுப்பின் மூலம் தோற்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நடுநிலமை வகிப்பேன் எனக் கூறிய இந்தியா, பாகிஸ்தானுடன் இணைந்து அமெரிக்கப் பிரேரணையின் பத்தாவது பிரிவை நீக்க வாக்களித்தது. ஆனாலும் அந்தப் பிரேரணை படு தோல்வியடைந்துள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் தீர்மானத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடாது என வலியுறுத்தி பாகிஸ்தான் தீர்மானம் சமர்ப்பித்திருந்தது. தீர்மானத்திற்கு எதிராக 23 நாடுகள் வாக்களித்ததுடன் ஆதரவாக 14 நாடுகள் மட்டுமே வாக்களித்திருந்தன. பத்து நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.




# முரண்பாடான...

07ஆம் பக்கத்தொடர்ச்சி



இதனால் ரஸ்யா மீது ஏற்படுத்திய பொருளாதார கட்டுப்பாடு கனடிய பொருளாதாரத்தில் ஆகக் குறைந்தது சிறிய தாக்கத்தையாவது ஏற்படுத்தலாம். இருந்து போதிலும் தென் கொரியாவுடன் ஏற்படுத்தப்பட்ட திறந்த பொருளாதார கொள்கை கனடாவிற்கு சாதகமாகக் காணப்படலாம்(?)

அண்மையில் Canadian Real Estate Board இன் அறிக்கைகளின் பிரகாரம் 2014 இல் விற்பனை குறையலாம் எனத் தெரிய வருகின்றது. எனினும் CMHC இன் எதிர்வு கூறலின்படி விற்பனை குறையாது என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

முன்னிற்கு பின் முரணான எதிர்வு கூறல்கள் வருகின்ற போதிலும் இவ்வருடம் தனி வீடுகள் அல்லது சேர்ந்த வீடுகளின் (Low Rise) விலையிலும், விற்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்படலாம் என எதிர்பார்க்கலாம். இதற்கு முக்கிய காரணமாக போதியளவு வீடுகள் சந்தையில் இல்லாததே. நிலம் பற்றாக்குறையால் உயரங்குறைந்த வீடுகள் கட்டப்படும் எண்ணிக்கை குறைந்துள்ளது.

மார்ச் 2014 இன் கடைசி வாரத்தில் முக்கிய வங்கிகள் தமது ஐந்து வருட அடமானக் கடனை 3% இற்கு கீழே குறைத்துள்ளன.

இளவேனில் மாதங்களில் இந்நிலைமை மாறுமா? காலநிலைதான் இன்னும் மாறவில்லை. சந்தைக்கு வரும் ஆதனத்தின் எண்ணிக்கையிலாவது மாற்றம் வருமா? எதிர்பார்ப்போம்.

# முரண்பாடான ஆதன சம்மந்தமான எதிர்வுகூறல்கள்

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் - 412

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் பனிப்பொழிவு அதிகமாகி மக்களை வீட்டிற்குள்ளே அடைபட்டிருக்க வைத்திருந்த போதிலும் ஆதன வியாபாரம் எதிர்பார்க்காத வகையில் மிகவும் ஆரோக்கியமாக காணப்பட்டது. எதிர்பார்க்காதது நடந்தது. பல வீடுகளை ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் போட்டி போட்டு வாங்கினார்கள். எனக்கு தெரிந்தளவில் சில வீடுகளிற்கு 20 இற்கு மேற்பட்டவர்கள் பெப்ரவரி 2014 இல் போட்டி போட்டதனைக் காணக்கூடியதாக இருந்தது. இதனால் கேட்ட விலைக்கு மேலாக விற்கப்பட்ட பல வீடுகளைக் காணக்கூடியதாக இருந்தது. இந்நிலைமை மார்ச் மாதத்தின் கடைசிக்கிழமைவரை அதாவது 2014 ஆம் ஆண்டின் முதல் கால்பகுதியின் கடைசிக் காலம் வரை நடைபெற்றது. இந்த நிலைப்பாட்டினாலும், ஏற்கனவே எடுக்கப்பட்ட வீடுவாங்குவதற்கு எதிராக எடுக்கப்பட்ட இறுக்கமான ஏற்பாடுகளினாலும் இதே போட்டி நிலைமைகள் இரண்டாவது காலாண்டிலும் எதிர்பார்க்கலாமா? அல்லது இளவேனிற்காலத்தில் ஆதன வியாபாரம் மந்த கதியில் தொடரலாமா? இப்பொழுது இந்த கேள்வி பலரிடம் தோன்றியுள்ளது.

2006 இல் ஏற்பட்ட அமெரிக்க பொருளாதார வீழ்ச்சியின் சூழ்நிலை கனடிய பொருளாதாரத்தில் ஏற்பட இருந்த பாதிப்பை மிகவும் சிறப்பாகவும், தைரியமாகவும், வெற்றி கரமாகவும் கையாண்டவர்கள் முன்னாள் கனடிய மத்திய வங்கி ஆளுனர் திரு. மார்க். கார்ணி மற்றும் மத்திய நிதி அமைச்சர் திரு. ஜிம் பிளெஹெற்றி. ஏற்கனவே கனடாவிலிருந்து இங்கிலாந்தின் மத்திய வங்கியிற்கு திரு. மார்க் கார்ணி ஆளுனராக சென்று விட்டார். மார்ச் 2014 இல் திரு. ஜிம் பிளெஹெற்றியும் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இவ்வாறான மாற்றம் கனடிய பொருளாதாரத்தை குறிப்பாக கனடிய ஆதன வியாபாரத்தில் எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதனை எதிர்காலம் தான் கூறவேண்டும். கடந்த பல வருடங்களாக கனடிய ஆதன வியாபாரம் மேல் நோக்கியே காணப்பட்டது. இந்நிலை இவ்வருடம் தொடருமா? ஆனால் 2014 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களும் மிகவும் ஆரோக்கியமாகவும் விலை அதிகரிப்பிலுமே காணப்பட்டது.



அடுக்குமாடி கட்டிட வியாபாரத்தில் ஏற்பட்ட மந்த நிலையினால் புதிய அடுக்குமாடி வரவுகள் கடந்த வருடத்திலிருந்து குறைந்திருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் 10 இற்கு உட்பட்ட புதிய அடுக்குமாடி மனைக் கட்டிடத் தொகுதிகளே விற்பனைக்கு வந்துள்ளன. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இவை மிகக் குறைவானதே. இதேநிலைமை இரண்டாவது காலாண்டிலும் தொடருமா? அவ்வாறு தான் தோன்றுகின்றது. ஏற்கனவே சந்தைக்கு கொண்டுவரப்பட்ட மனைகளை விற்பதிலேயே கட்டிட நிறுவனங்கள் முனைவதனைக் காணக்கூடியதாக உள்ளது. 2013/2014/2015களில் அதிகமான அடுக்குமாடி மனைகளின் நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட்டு வாங்கியவர் களிற்கு (Buyers) கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் Revenue Canada இன் இறுக்கமான நிலை, ஏற்கனவே பல தடவை வீடு, மனை வாங்கி விற்றவர்களை களைப்படையச் செய்துள்ளது. அண்மையில் உக்கிரெயினில் ஏற்பட்ட அரசியல் நிலைமை,

தொடர்ச்சி 06ஆம் பக்கம்


**HomeLife/GTA Realty Inc.Brokerage***

*Independently Owned & Operated



"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

***Raja Mahendran,*** P.Eng.

*Broker / Owner*

**5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969**

**CONVENIENCE &GROCERY**
**FOR SALE IN SCARBOROUGH**

- Unbelievable Price
- Convenient Location
- Lotto (649)
- Close to future walk-in clinic
- One of the best location in Scarborough
- Movie / CD / DVD Rental / Sale (Exclusive)
- 10 years Business in the same location.
- Busy Plaza
- TTC at the steps
- Tickets
- Key Cutting



***For more Information: 416.315.9397***

# அச்சமும் பதற்றமும் தொடரும் வாழ்க்கை!

## தாயக மடல்

- வன்னியிலிருந்து ஆதித்தன் -

போர் முடிவடைந்ததன் பின்னர், அதாவது போர் முடிவுற்று ஐந்து வருடங்களாகின்ற நிலையில், மீண்டும் ஒரு பதற்ற நிலை தமிழ் பிரதேசங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தேடுதல்கள், சோதனைகள், சுற்றி வளைப்புக்கள், கைதுகள் என நிலைமைகள் மோசமடைந்து வருகின்றன. போரின் இழப்புக்களிலிருந்து மீண்டெழ முடியாத நிலையில் மக்கள் இன்னமும் தவித்துக் கொண்டிருக்கும் வேளையில், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் நடவடிக்கைகளை இலங்கை அரசும், அதன் பாதுகாப்புத் தரப்பினரும் மேற்கொண்டு வருகின்றனர். அரசாங்கத்திற்கெதிரான விமர்சனங்கள், ஆர்ப்பாட்டங்கள், கண்டனப் பேரணிகள் என்பன தெற்கில் சிங்களப் பகுதிகளிலும் நடைபெற்றுக்கொண்டுதானிருக்கின்றன. ஆனால், தமிழ் பகுதிகளில் இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்ற போது அதற்கு புலிச்சாயம் பூசப்படுகின்றது.

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் அரசியல் ரீதியாக, அரசாங்கத்தை எதிர்க்கும் போராட்டங்கள் நடைபெறுவதில்லை. தமிழ் மக்கள் தங்களின் அடிப்படையான பிரச்சினைகளை முன்வைத்தே கவனயீர்ப்பு போராட்டங்களை மேற்கொள்கின்றனர். தங்கள் சொந்த வாழ்விடங்களுக்குச் செல்வதற்காகவும், தங்கள் காணிகள் அபகரிக்கப்படுவதற்கு எதிராகவும், காணாமல் போனவர்களின் உறவினர்கள் தங்கள் உறவுகளை மீட்டுத் தருமாறும் கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களை மேற்கொள்கின்றனர். அரசாங்கம் இவற்றிற்கு சரியான வழிமுறைகளை மேற்கொள்ளாத விடத்து அதனை சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடம் முறையிட வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்றது. தமிழ் மக்கள் இவ்வாறு தங்களின் அடிப்படையான பிரச்சினைகளை முன்வைத்து போராடுகின்ற போது. அதனை தடுப்பதற்கு பலவேறு வழிமுறைகளை பாதுகாப்பு தரப்பினர் கையாள்கின்றனர்.

போராட்ட நிகழ்வுகளில் புலிக் கொடியுடன், முகத்தை மறைத்துகொண்டு வந்து மறைவது, நேரடியாகவே போராட்ட நிகழ்வுகளுக்கு செல்வோரை அச்சுறுத்துவது. வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தமிழ் பிரதேசங்களுக்கு வருகை தந்து மக்களின் பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்களை பெறுவதற்கு தடை விதிப்பது போன்ற பல்வேறு அச்சுறுத்தல்கள் போர் முடிவுற்ற தன் பின்னான கால கட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக, இப்போது தோற்றுவிக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் இன்னும் மோசமானதொரு கட்டத்தை அடைந்துள்ளது. விடுதலைப் புலிகள் மீளுருவாக்கம் பெறுகின்றனர் எனக் கூறிக்கொண்டு தற்போது பாரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கிளிநொச்சி தருமபுரத்தில் கடந்த 13-03-2014 அன்று இடம்பெற்ற சம்பவத்தின் பின்னர் படிப்படியாக மோசமடைந்து வருகின்ற நிலைமையினை காணமுடிகின்றது.



புலி உறுப்பினர் ஒருவரை தேடிச் சென்ற சமயம் அவர் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பியோடி விட்டதாக தெரிவிக்கும் பாதுகாப்புத் தரப்பினர் குறித்த நபருக்கு அடைக்கலம் கொடுத்ததாகக் கூறி ஜெயக்குமாரி என்ற பெண்ணையும் அவரது மகளான 13 வயது சிறுமியையும் கைது செய்தனர். இப்போது ஜெயக்குமாரி பூஸா முகாமிற்குள்ளிருக்கின்றார். சிறுமி விபூசிகா கிளிநொச்சி சிறுவர் இல்லமொன்றில் வைக்கப்பட்டுள்ளார்.

வன்னிப் பகுதிகளிலும் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளிலும் சுற்றிவளைப்புகள், தேடுதல் நடவடிக்கைகள் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதுகாப்புத் தரப்பினரால் தேடப்படும் நபர்களது சுவரொட்டிகள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பட்டிதொட்டி எங்கும் ஒட்டப்பட்டுள்ளன. குறித்த நபர்களை விடவும், விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்த வேறு சில நபர்களும் தேடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புதிய தலைவர் என பாதுகாப்பு தரப்பினரால் கூறப்படும் கோபியின் தாயாரான 83 வயதான திருமதி ராசமலர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு பயங்கரவாத புலனாய்வு பிரிவின் தலைமையகத்தில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மேலும் சந்தேகநபர் ஒருவரைத் தேடுவதாக, விடுதலைப் புலிகளின் முன்னாள் வான்புலி வானோடி ஒருவரின் படத்தை சிறிலங்கா பொலிஸ்துறை வெளியிட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தேவியன் என்று அழைக்கப்பட்ட, இந்த முன்னாள் போராளி, பயங்கரவாத புலனாய்வுத் துறையினரின் விசாரணைக்காக தேடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடமாடுவதாகவும், கொழும்புக்கு வந்து செல்லவும் வாய்ப்புகள் உள்ளதாகவும் பொலிஸ் கூறியுள்ளது. இவர் பற்றிய தகவல் அளிப்பவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா சன்மானமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். வட்டுக்கோட்டையில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரும் விசாரணைகளுக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். இதேவேளை, வடபகுதியில் மேலும் சில இளைஞர்கள் தேடப்பட்டு வருவதாக பொலிஸார் கூறுகின்றனர். வன்னியில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் கந்தனாலயன் என்றழைக்கப்படும் மாணிக்க காந்தன் என்ற முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டிருந்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக, விடுதலைப்புலிகள் மீளுருவாக்கம் பெறுவதாகக் கூறிக்கொண்டு தொடர்ச்சியான நடவடிக்கைகள் தமிழ் பிரதேசங்களில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் நீண்டகாலத்திற்கு இடம்பெறப் போவதாகவே தெரிகின்றது. யாழ். இராணுவ கட்டளைத்தளபதி உதய பெரேரா வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடம் விடுதலைப் புலிகள் மீண்டும் வடக்கில் மீள் இணைகின்றார்கள் என்றும், இதை முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவது தனது கடமை என்றும், இதனால் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகின்றது என்றும் கூறியிருக்கின்றார்.

இலங்கையில் மீண்டும் விடுதலைப் புலிகளுக்கு உயிர் கொடுக்க, வெளிநாடுகளில் உள்ள பிரிவினைவாதிகள் முனைந்திருப்பதைத் தடுப்பதற்காகவே தேடுதல் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்று அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரட்நாயக்க தெரிவித்துள்ளார். தேசிய பாதுகாப்பிற்கு நாட்டில் முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது எனவும், தேசிய பாதுகாப்பிற்கு அடுத்ததாகவே ஏனைய விடயங்கள் கவனத்தைப் பெறுகின்றன என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், "வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டுள்ளது போல் தெரிகின்றது. பழைய நாட்களை எமக்குணர்த்தும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பது வெளிப்படையாகவே தெரியவந்துள்ளது. அன்று நடந்தவற்றை என்றும் நடைமுறைப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட இருக்கின்றன" என்று தெரிவித்துள்ளார்.

இன்று தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் வன்முறை போராட்டங்களை முற்றாகவே வெறுக்கின்றனர். அதனால், மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டம் தோன்றுவதற்கு தமிழ் பிரதேசங்களில் எந்த வாய்ப்பும் இல்லை. இதனை சில சிங்களத் தலைவர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். அரசில் அங்கம் வகிக்கும் ஒரு அமைச்சரான வாசுதேவ நாணயக்கார இதனை வெளிப்படையாக தெரிவித்தும் இருக்கின்றார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வடக்கில் மீளவும் தலைதூக்குகின்றனர் என்று இராணுவம் வெளியிட்டுள்ள கருத்துக்களில் எந்தவித உண்மையும் இல்லை என வாசுதேவ நாணயக்கார கூறுகின்றார்.

தொடர்ச்சி 24ஆம் பக்கம்

AERO COURIER
Fast & Secure World Wide Service
உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது......
கொழும்பு-திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னார்-வவுனியா
கிளிநொச்சி-யாழ்ப்பாணம் கண்டி மற்றும் இந்தியா-ஐரோப்பிய
நாடுகள் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகளை
பாதுகாப்பாக அனுப்ப வேண்டுமா? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!
Tel: 416.292.0444
5635 Finch Ave East Unit 2&3
Toronto On.M1B 5K9

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com



Sell your home **faster** and more **money**

**Markham/Finch**




3+3 Bedrooms, 2 W Rooms
Newer Roof, Newer Windows, Huge Backyard W/Big Deck,

**Bayly/Pick Beach Rd**




4 Bedrooms, 3 W Rooms
Main Floor Laundry,Open Concept From Living To Eat In Kitchen

**Markham Rd/Steeles Ave.**




3 Bedrooms, 3 W Rooms
Finished Basement W/Thermally Insalated Cork Floors

**Salem/Taunton**




4 Bedrooms, 3 W Rooms
Professionally Landscaped Front And Backyard! Amazing Wide Ravine Lot!

**Main St Stouffville/10th Line**




4 Bedrooms, 4 W Rooms
Brand Newer Stainless Steel Kitchen Appliances, Professionally Painted

**Bur Oak/ Markham**




4 Bedrooms, 3 W Rooms
Convenient Main Floor Laundry, Move In Condition,Great Location

**16th Ave/Donald Cousens Pkwy**




4+1 Bedrooms, 4 W Rooms
Mirrored Closets, Gas Fireplace, Pot Lights, Breakfast Area,

**Neilson/Staines**




4+1 Bedrooms, 4 W Rooms
Finished Bsmt W 1 Bedroom, & Entertainment Room

**Salem/Taunton**




4 Bedrooms, 4 W Rooms
9Ft Ceilings, Pot Lights, Hardwood Floors And Shutters Throughout

**E Of Mccowan / 16th Ave**




4+1 Bedrooms, 4 W Rooms
Professionally Finished Basement With Bathroom, Oak Staircase

**Brimley/Highglen**




4+1 Bedrooms, 5 W Rooms
Prof Frshd Bsmt With Ensuite Bdrm,New Rf(2011

**9th Line/14th Ave**




4 Bedrooms, 4 W Rooms
Potlights,Double Door Entry ,Huge Family Room And Kitchen

**9th Line/14th Ave**





4 Bedrooms, 3 W Rooms
Pot Lights,Crown Moulding,Upgraded Light Fixtures&Shade-O-Matic Shutters

**Castlemore/Alfred Paterson**




4 Bedrooms, 4 W Rooms
Pot Lights, French Door, Semi Stone Front, Marble Fire Place

**Aurora Road East Of Mccown Rd**




5 Bedrooms, 6 W Rooms
Architecture Are Showcased In The Home, Situated On A Panoramic Size Cul-De-Sac

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent

**Your home sold in 30 days or we buy it**

RE/MAX

**Elaguppillai Srinathan (Mike) B.Sc**
Sales Representative/Builder
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@yahoo.com



#1 RE/MAX

KZG 647-200-5833

**Ph1-7800 Woodbine Ave**
**Markham, ON L3R 2N7**
**Office: 905-470-9800**
**Fax: 905-470-7770**

I can also assist your Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# வாகன தரிப்புகளில் ரொறொன்ரோ நகரின் புதிய சட்டங்கள்

## கனடிய தகவல் தொடர் 216

*NEW PARKING LAWS - TORONTO*

இதுவரை காலமும் தங்கள் வாகனம் நிறுத்திய இடத்திலிருந்து திடீரென காண-மால் போய்விட்டால் என்ன நடந்தது? என்ற கேள்விக்குறி இருவகையில் எழுந்திருக்கும்!

**ஒன்றில் திருட்டு போயிருக்க வேண்டும்.** (இவ்வாறு திருட்டு போயிருந்தால் முதலில் பொலிசாருக்கும் பின்னர் தங்கள் காப்புறுதி கம்பனிக்கும் அறிவித்தல் வேண்டும்)

**இல்லையேல் சட்டவிரோதம் என்ற காரணங்களுக்காக அதிகாரத்திற்குரிய வர்களினால் கட்டி இழுத்து எடுத்துச் சென்றிருப்பார்கள்.**
இவ்வாறு அதிகாரத்திற்குரியவர்களினால் கட்டி இழுத்து சென்றிருந்தால் அதற்கு இரு காணங்கள் மட்டுமேயிருக்கும்.

1. தப்பான இடத்தில் வாகனம் தரித்து இருந்தால் கட்டி இழுத்துச் செல்லலாம்.

2. ஏற்கனவே இந்த வாகனம் ஏதாவது கடன் ஈடுகளிலிருந்து அது கொடுத்து தீர்க்கப்படா மலிருந்தால் சட்டரீதியான பறிமுதல் ஆணை வழங்கி, திடீரென வந்து கட்டி இழுத்துச்செல்லலாம்.

**சட்டரீதியான காரணங்களுக்காக வாகனம் அதிகாரத்திற்குரியவர் களினால் ரொறொன்ரோவில் கட்டி இழுக்கப்பட்டது என்ற சந்தேகம் இத்தகைய நிலைகள் உருவாகும் போது எழுந்திருந்தால் அழைத்து விசாரிக்க வேண்டிய இடம்.**

***Toronto police service communication center*** தொலைபேசி - ***(416)808.222***
(வாகனம் ஒன்று நின்ற இடத்தில் திடீர் என காணாமல் போனால், அது சட்டரீதியான பறிமுதலா? அல்லது திருட்டா? என்பதனை காலம் தாழ்த்தாது இந்த தகவல் மையத் திற்கு அழைத்து முடிவு பண்ணிவிடலாம்)

இவை தவிர தற்போது கடந்த ஜனவரி 23, 2014 நள்ளிரவிலிருந்து தங்கள் வாகனம் திடீரென்று சட்டரீதியாக வந்து கட்டி இழுத்து செல்லப்படிருக்கலாம். எதற்காக என்று தெரியுமா?

**அதாவது தொடர்ச்சியாக மூன்று வாகன தரிப்பு தண்டனை ரிக்கற் பணம் செலுத்தாது விட்டால் திடீரென்று வாகனம் காணாமல் போகலாம். இது மாத்திரமல்ல ரொறொன்ரோ நகரசபை மேலும் சில புதிய தண்டனை சட்டங்களை உருவாக்கியுள்ளது.**

ரொறொன்ரோ நகரசபை உறுப்பினர் திரு. டென்ஸில் மின்னன் வொங் (Mr. Denzil Minnan Wong) பின்வரும் நான்கு புதிய வாகனதரிப்பு சட்டங்களை ரொறொன்ரோ நகர தொலைகாட்சிகள் மூலம் அறிவித்திருந்தார்.

1. Towing habitual parking ticket offenders when found parked illegally.
**தொடர்ச்சியாக வாகன தரிப்பு தண்டனை ரிக்கற் வாங்கும் வாகனங்களின் பறிமுதல்.**



ஒரே குறிப்பிட்ட இலக்கத் தகடு வாகனத்திற்கு மூன்று முறை வாகன தரிப்பு ரிக்கற் வழங்கப்பட்டு அங்கு குறிப்பிட்ட காலத்தினுள் தண்டனை ரிக்கற் பணமும் செலுத்தப்படவில்லை. நீதிமன்றத்திற்கும் மனு செய்யவில்லை. இந்த நிலைமை ஏற்பட்டால், இறுதி ரிற்கற் வழங்கி 120 நாட்களின் பின்பு எந்த கட்டத்திலும், எந்த இடத்தில் வைத்தும் அந்த குறிப்பிட்ட இலக்கத்தகடு வாகனம் பறிமுதல் ஆகலாம். இந்த சட்டம் ஜனவரி 23, 2014 நள்ளிரவு 12:07 மணியிலிருந்து அமல்படுத்தப்பட்டிருந் தாலும் நகரசபை பெப்ரவரி 05, 2014 வரை இதனை நடைமுறைப்படுத்தாது ஒரு 'மன்னிப்புக் காலம்' இதற்கிடையில் கட்டணம் செலுத்தாதவர்கள் உடனடியாக செலுத்தி விடுங்கள் எனக்கோரி வழங்கியிருந்தனர்.

நகரசபையினர் தங்கள் வாகனங்களை சட்டரீதியாக பறிமுதல் செய்து விட்டால், அதனை திருப்பி எடுக்க வேண்டுமானால்? முதலில் செலுத்தாத தண்டனை பணத்தினை, மேலதிக குற்றவியல் பணத்துடன் (Additional late penalty) செலுத்திவிட்டு வாகனத்தினை மீளப் பெறலாம். கட்டி இழுத்துக்கொண்டு போன செலவு (Towing Charges) $200 டொலர், மேலதிமாக அதனை பாதுகாப்பாக வைத்திருக்கும் செலவு ஒரு நாளுக்கு $80 டொலர் செலுத்தியே மீளப் பெறவேண்டும்.

ரொறொன்ரோ நகர சபையின் சட்டவிரோத வாகன தரிப்பு தண்டனை ரிக்கற்றினை நிர்வகிக்கும் மனேஜர் திரு. அந்தோனி பாபிரிவு (Mr. Anthony Fabrizi) இது பற்றி தெரிவிக்கும்போது ரொறொன்ரோ நகரில் வருடம் ஒன்றுக்கு சுமார் 1,40,000 ரிக்கற்றுகள் தண்டனைப் பணம் செலுத்தாது உதாசீனம் செய்யப்படுகின்றது எனவும் சராசரியாக 1,15,000 வாகனங்களின் உரிமையாளர்கள் மொத்தமாக 11.5 மில்லியன் டொலர் தண்டனைப் பணம் கட்டாத காரணத்தினால் இதுவரை நகர-சபைக்கு வந்து சேராத பணமாக உள்ளது என தெரிவித்திருந்தார்.

2. Increased fixed fines for unlawful stopping, standing and parking on rush hour rout curb side
(வாகன நெருக்கடி நேரங்களில், நெருக்கடி வீதியோரமாக **வாகனங்கள் தரித்தல், நிறுத்துதல்**)

பொதுவாக இந்தச் சட்டம் நெருக்கடிகள் மிகுந்த ரொறொன்ரோ நகரின் (Rush areas in down town) வீதியோரங்களில் காலை 7-10 மணி வரை, மாலை 3-7 மணி வரையும் திங்களிலிருந்து வெள்ளிக்கிழமை வரை வாகனங்கள் நிறுத்தவோ அல்லது தரிக்கவோ கூடாது என்ற வீதி ஒழுங்கு சைகைகள் காணப்படும். இந்த இடங்களில் கோப்பி வாங்குவதற்கு அவசரமாக நிறுத்தி விட்டு ஓடி வருபவரும் ஏனையோரை ஏற்று வதற்கு காத்து நிற்பது என்பது பொது மக்களுக்கு சிரமமாக இருப்பதால் இதுவரை $60 டொலர் தண்டனை பணமே இத்தகைய குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டது. ஆனால் தற்போது இது $150 டொலராக அதிகரிக்கப் பட்டதுடன் நீதிமன்றத்திற்கு சென்று குற்றத்தினை ஏற்றுக் கொண்டாலும் எந்த சந்தர்ப்பத்திலும் தண்டனை தொகை குறைக்கப்படவும் மாட்டாது என்பது இரண்டாவது இறுக்கமான சட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது.

**காலவதியாகி புதுப்பிக்கப்படாத வாகன இலக்கத் தகடுகளுக்கு தண்டனை**
***TICKETING FOR EXPIRED LICENSE PLATE VALIDATION STICKERS***

ஒரு வருடத்திற்கு ஒருமுறை அல்லது இரு வருடத்திற்கு ஒருமுறை எங்கள் வாகன உரிமை பத்திரங்களை புதுப்பித்து, அதன் அடையாளத்தினை இலக்க தகட்டில் ஒட்டி விடுகின்றோம். இதனை மேற்கொள்ளும் போது,
1. வலிமையான காப்புறுதி ஒப்பந்தம் இருக்க வேண்டும்.
2. வாகனம் எவ்வளவு தூரம் ஏற்கனவே ஓடி விட்டது என்ற தகவல் வழங்க வேண்டும் (Odometer reading)
3. வாகனம் சூழல் சுற்றாடலை மாசுபடுத்து கின்றதா? என்ற பரிசோதனை
(Emission test drive certificate)
4. வாகனப்பரிசோதனை பத்திரம்
(Inspection certificate)

போன்றவை இல்லாவிட்டால் உரிமைப் பத்திரம் புதுப்பிக்கமுடியாது. பொலிசார் வீதியில் கண்டுபிடித்தால் $110 டொலர் தண்டனை ரிக்கற் வழங்குவார்கள். ஆனால் புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் என எதுவும் இந்த குற்றத்திற்கு உருவாகாது. ஆனால் இந்த இப்போது ரொறொன்ரோ நகர சபையினர் இத்தகைய புதுப்பிக்கப்படாத



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# காலத்தோடு வளரும் கணினிகள் - 42

அன்பான வாசகர்களே!

கடந்த பல இதழ்களில் மைக்கிரோ சொவ்ற் ஒபீஸ் (Microsoft Office) மென்பொருட்கள் பற்றி செயன்முறைக் குறிப்புக்களுடன் ஓரளவு விரிவாக இந்தத் தொடர்கட்டுரையில் எழுதி வந்தேன். இப்பொழுது முதல் ஏனைய பயன்பாட்டு மென்பொருட்கள் பற்றிய பொது அறிவை விருத்தி செய்யும் நோக்கில் சுருக்கமான குறிப்புக்களைத் தரலாம் என நினைக்கின்றேன். சொற்பரிமாற்றம் (Word Processing) என்ற பயன்பாட்டிற்கு மைக்கிரோசொவ்ற் வேட் (Microsoft Word) என்ற மென்பொருள் இருப்பது போலாக, அல்லது விரிதாள் (Spreadsheet) பயன்பாட்டிற்கு மைக்கிரோ சொவ்ற் எக்சல் என்ற மென்பொருள் இருப்பது போலாக ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் பல மென் பொருட்கள் உள்ளன. நாம் இங்கு ஐபிஎம் (IBM) குடும்பக் கணினிக்குரிய மென்பொருட் கள் பற்றியே பேசி வருகின்றோம். நாங்கள் குறிப்பிடும் பல மென்பொருட்களை அப்பிள் (Apple) குடும்பக் கணினிகளிலும் பாவிக்கக்கூடிய வசதிகள் உள்ளன.

நாங்கள் எடுக்கும் படங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நிறைய மென்பொருட்கள் கணினிச் சந்தையில் உள்ளன. இவற்றில் சில மிகவும் இலகுவானதாகவும், யாராலும் இலகுவில் பயன்படுத்தக் கூடியனவையாகவும் உள்ளன. ஒரு படத்தை கமராவில் எடுத்த பின்பு படத்தில் பல்வேறு மாற்றங்களைச் செய்த பின்னர் ஒரு கோவையாகச் சேமித்து வைக்கவோ அல்லது அச்சுப்பதிவு செய்து கொள்ளவோ முடியும். ஒரு படத்தில் உள்ள இருட்டான பகுதிகளை வெளிச்சமாக்கவோ அல்லது படத்தில் பாரிய மாற்றங்களைச் செய்து கொள்ளவோ இந்த மென் பொருட்களைப் பயன்படுத்தலாம். ஒரு படத்தின் பின் புறத்தில் உள்ள காட்சிகளை மாற்றியமைக்க முடியும். படத்தில் உள்ளவர்கள் அணிந்திருக்கும் ஆடைகளின் நிறங்களை மாற்றியமைக்க முடியும். பலர் குழுவாக நின்று எடுத்த படத்தில் இல்லாத ஒருவரைப் புகுத்த முடியும். படப்பிடிப்பாளர் கள் படம் பிடித்து இவ்வாறான மென்பொருட்கள் மூலம் படங்களை மேலும் மெருகூட்டி வழங்குகின்றார்கள். படப்பிடிப்புத் துறையில் உள்ளவர்களும் இவற்றில் நாட்டம் உடைய சாதாரண மக்களும் இத்தகைய மென்பொருட்களைப் பாவித்து வருகின்றார் கள். எந்தப் பயிற்சியும் இன்றிப் பாவிக்கக் கூடிய இலகுவான மென்பொருட்க ளும், இத்துறையில் உள்ளவர்களுக்காகப் பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட கடின-மான மென்பொருட்களும் உள்ளன.

Photo Studio என்ற பெயரில் ஒரு மென்பொருள் உள்ளது. இந்த மென் பொருளை ArcStudio என்ற நிறுவனம் உருவாக்கியுள்ளது. ஐபிஎம் குடும்பக் கணினிகளுக்கும், அப்பிள் குடும்பக் கணினி களுக்குமென தனித்தனியான மென்பொருள் வடிவங்களில் விற்பனையாகின்றது. இது Portrait, Panorama Maker என இரண்டு பாகங்களைக் கொண்டது. Portrait என்பது படங்களில் மாற்றங்களைச் செய்வதற்கான வசதிகளைக் கொண்டது. Panorama என்பது படங்களையும், காட்சிகளையும் கொண்டு Panorama தோற்றத்தை உருவாக்கும் வசதி கொண்டது. இது போன்ற பல மென்பொருட்கள் நாளுக்கு நாள் புதிது புதிதாக வந்த வண்ணம் இருக்கின்றன. PortraitPro என்ற பெயரில் இங்கிலாந்தில் உள்ள Anthropics Technology Ltd இனால் ஒரு மென்பொருள் விற்பனை செய்யப்படு கின்றது. படங்களை அழகூட்டும் வசதிகளை முக்கியமாகக் கொண்டு இந்த மென்பொருள் விளங்குகின்றது. இதே நிறுவனத்தால் Smart Photo Editor என்ற பெயரிலும் ஒரு மென்பொருள் விற்பனை செய்யப்பட்டது. இவ்வாறான மென்பொருட்கள் குறைந்த விலைக்கு கிடைப்பதோடு மிகவும் இலகுவானதாகவும் காணப்படுகின்றன.

படங்களில் மாற்றங்களைச் செய்வதற்கான நிறைய இணையத்தளங்களும் செயற்படு கின்றன. Pixlr.com, fontorflexr.com, ipiccy.com, befunky.com, ribbet.com, phixr.com, fotor.com, lunapic.com, photocat.com, picmonkey.com, aviary.com, picmagick.com போன்ற பல இணையத் தளங்களில் படங்களைப் பதிவேற்றி மாற்றங்களைச் செய்து அழகூட்டி விட்டுத் திரும்பவும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கமராவில் உள்ள படங்களைத் தவிர படப்பிரதிகளாக இருப்பின் அவற்றை வருடுதல் (Scanning) செய்து கணினியில் பல மாற்றங்களைச் செய்து கொள்ளவும் முடியும். கமராவில் எடுத்த படங்களை நேரடியாக அச்சுப்பதிவு செய்யாது அவற்றில் உள்ள குறைபாடுகளை நீக்கி அழுகு படுத்திய பின்னர் அச்சுப்பதிவு செய்வது நல்லது. கணினியைப் பாவித்து நல்ல பொழுது போக்கு விடயங்களைச் செய்ய விரும்புபவர்களுக்கு படங்களில் மாற்றங்களைச் செய்வது ஒரு நல்ல பொழுதுபோக்கு விடயமாக இருக்கலாம். கணினி பற்றிய ஆரம்ப அறிவை நிறையவே பெற்று விட்ட வாசகர்களாகிய நீங்களும் இந்தப் பொழுதுபோக்குக் காரியத்தில் ஈடுபடலாம். இவ்வாறான பொழுதுபோக்கு விடயங்கள் மனதிற்கு நிறைந்த மகிழ்ச்சியைத் தரவல்லவை.




படக்கோவைகள் (Picture or Image Files) TIF, JPG, PNG, GIF போன்ற வடிவங்களில் சேமிக்கப்படுகின்றன. புகைப்படக் கருவிகளும், இணையத்தளங்களும் அதிகமாக JPG வடிவத்தை பயன்படுத்துகின்றன. இந்த வடிவத்தில் கோவையின் அளவு மிகவும் சுருக்கப்படுவதே அதற்கான காரணமாகும். இதனால் கோவையின் அளவு சிறிதாக இருக்கும். ஆனால் இதனால் படத்தின் தரம் குறைவதற்கும் வாய்ப்பு உண்டு. TIF வடிவம் அதிக தரம் கொண்ட வடிவமாக உள்ளது. இதனால் வியாபார ரீதியில் இந்த வடிவத்தை அதிகம் பயன்படுத்துவார்கள். GIF இணையத் தளப்பாவனைக்குப் பயன்படுகின்ற ஒரு வடிவமாக உள்ளது. PNG பாவனையில் மற்றைய வடிவங்களை விட பிந்தியே வந்துள்ளது. இது GIF ற்கு ஒரு மாற்றீடாக வெளிவந்த வடிவமாகக் கருதப்படுகின்றது. இது JPG,TIF ற்கு அடுத்தபடியாக அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி.

வணக்கம். தொடரும்...



- அகணி -
authorakani@yahoo.com

**AUM WELLNESS CLINIC IN**

**Healing Massage, Suffering From Pain?**

**Get Relief From:**

| | | |
|---|---|---|
| முதுகுவலி | கழுத்துவலி | தோள்பட்டைவலி |
| முழங்கால் வலிகள் | தீராததலைவலி | நரம்புப்பிடிப்பு |
| நீரிழிவு | தூக்கமின்மை | கொலஸ்ரோல் |
| உடல் எடை குறைத்தல் | இரத்த ஓட்டத்தை | சீராக்குதல் |

**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

Dr. Lata

Based on Appointment



**Cell: 416.890.9217 Office: 647.304.6046**
**5215 Finch Ave. E. #220, Toronto, ON**

TBC Toronto Business College



SECOND CAREER

WHO IS ELEGIBLE?

- RECEIVING EI
- LAID OFF AFTER 2005
- RECEIVED MATERNITY / PARENTAL DURING LAST FIVE YEARS
- WORKING LESS THAN 20 HOURS PER WEEK

Those qualify will receive free funding upto $28000 to cover the following

- Living Expense
- Daycare
- Tuition Fees
- Books
- Transportation

DIPLOMA PROGRAMS

Accounting & Payroll (35 weeks)

Business Administration (26 Weeks)

Computerized Accounting (26 weeks)

Medical Office Adminstrator (32 weeks)

Personal Support Worker (26 weeks)

TAKE ONE COURSE AND GET ANOTHER ONE FOR FREE

WORD, EXCEL, POWER POINT, ACCESS

QUICKBOOKS LEVEL 1 & 2

SIMPLY ACCOUNTING LEVEL 1 & 2

ACCPAC G/L, A/P & A/R

next food handler certification - April 13th

416 - 291 - 5155

4465 Sheppard Ave. East # 208

( Sheppard & Brimley) Scarborough

www.tbcollege.com info@tbcollege.com

Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005

# வாகன...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

வாகனங்களுக்கும் $40 டொலர் தண்டனை ரிக்கற் வழங்க ஆரம்பித்து விட்டனர். ஏனெனில் ஓடாத வாகனங்களை வீதியோரமாக நிறுத்துவதனை குறைப்பதற்காக இதனை நகரசபையினரும் தண்டிக்க தொடங்கிவிட்டனர்.

வாகன தரிப்பு குற்றங்களில் தண்டனை ரிக்கற்களுக்குரிய கட்டணங்கள் செலுத்தப் படவில்லையானால் இதுவரை காலமும் பொதுவாக என்ன நடந்து வந்தது?

1. முதலில் கால அவகாசம் கொடுத்து ஒரு அறிவிப்புக் கடிதத்தில் வரும் இந்த கால அவகாசத்தினுள் தண்டனைப்பணம் செலுத்த வேண்டும் அல்லது நீதிமன்றம் செல்ல வேண்டும்.
(Notice of impending conviction)



2. இரண்டாவதாக குறிப்பிட்ட காலத்தினுள் தண்டனைப் பணத்தினை செலுத்தி விடு என்ற உத்தரவு.
(Notice of fine & due date)

3. மீண்டும் உரிமைப்பத்திரம் புதுப்பிக்கப் போகும் போது புதுப்பிக்க அனுமதிக்க மாட்டார்கள். இறுதியாக செலுத்த வேண்டிய கட்டணத்துள் $20 டொலர் மேலதிகமாக செலுத்தியே புதுப்பிக்க வேண்டும். (Plate Denial)

4. பணம் வசூலிக்கும் நிறுவனத்திடம் கையளிப்பு. இரு வருடங்களுக்கு மேலாக சுமார் $300 டொலருக்கு மேலாக தண்டனை பணம் செலுத்தவில்லையானால், நகரசபை பணம் வசூலிக்கும் நிறுவனத்திடம் கையளித்து விடும். அவர்கள் துரத்தி கொண்டிருப்பார்கள்
(Action by collection agency)

5. நீதிமன்றத்தின் மூலம் அறவிடுதல். அனேகமாக $2000 டொலருக்கு மேல் தண்டனை பணம் செலுத்தப்படவில்லையானால் நீதிமன்றம் மூலமும் அறவிடப்படலாம்.

நகரசபையினருக்கு சட்டவிரோத வாகன தரிப்பு தண்டனைப் பணம் வசூலில் ஒவ்வொரு வருடமும் 80 மில்லியன் டொலர் வருமானம் கிடைப்பது வழமை என அவர்களின் புள்ளிவிபரங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போது புதிய சட்டத்தின் மூலம் மேலும் இவை தப்பாது அதிகரிக்கப்படப்போகிறது என்பது உண்மையாக்கப்பட்டுள்ளது. இந்த புதிய சட்டம் 2012 ஆம் ஆண்டு, நகரசபையினால் தீர்மானமாக்கப்பட்டபோதும், ஒன்ராரியோ சட்டமா அதிபதியின் அங்கீகாரம் மற்றும் பிராந்திய நீதித்துறையின் அங்கீகாரத்திற்காகவே சற்று காலம் கடந்து அமலுக்கு வந்துள்ளது.

# ஒரு...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

வேதனை, துன்பம் எல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. ஒன்று வரும்போது மற்றவையெல்லாம் வந்துவிடும். அவை அழைக்கப்படாமலேயே வந்து சேரும். குழப்பம் சந்தேகத்தைக் கொண்டுவரும். அது வேதனை, துன்பம், அவலநிலை ஆகியவற்றை ஏற்படுத்தும். அவற்றுள் ஒன்றல்ல, எல்லாமே ஒருமித்து வரும்.உயிருடன் இருங்கள். நீங்கள் நீங்களாகவே இருங்கள். நீங்கள் என்றென்றும் இங்கு இருக்கப் போகிறீர்களா? நீங்கள் 70 வருடங்கள் உயிர்வாழ்ந்தால் அது 25,550 நாட்கள் மட்டுமே. நீங்கள் 100 வருடங்கள் உயிர் வாழ்வதாயின் அது 36,500 நாட்கள் மட்டுமேயாகும். அது அவ்வளவு அதிகம் அல்ல. மக்களில் அனேகமானோர் இறப்பைப்பற்றிச் சிந்திப்பார்கள். அதனால் அவர்கள் இந்த வாழ்வைத் தவற விடுகிறார்கள். அது ஒரு சோகமா? அது உண்மையிலேயே சோகமானதுதான். நீங்கள் வாழ்வினால் வசியப்பட வேண்டுமே அல்லாமல் மரணத்தினால் அல்ல. இந்த வாழ்வில் நடக்கும் அற்புதத்தையிட்டு ஆனந்தப்பட வேண்டும். ஒவ்வொரு நாளும்.

கேள்வி: அநேக மக்கள் களிப்படைவதை விரும்புகிறார்கள் அல்லவா?

பிறேம் ராவத்: நீங்கள் அந்தத் தாளத்தைக் கேட்கவில்லையா? உங்களின் உள்ளே இசைக்கப்படும் அந்தத் தாளம். அப்படியில்லையெனில் நீங்கள் களிப்பூட்டப்படவில்லை. எப்பொழுது நீங்கள் உள்ளே இருக்கும் அந்த அழகினைக் கேட்கிறீர்களோ அப்போது அந்தக் களிப்பு அமைதியென அழைக்கப்படும். நீங்கள் அமைதியில் இருக்கும் பொழுது நீங்கள் உண்மையாகவே உயிர் வாழ்கிறீர்கள்.

# ஓர் எளிமையான வாழ்த்து

## *A simple Greeting*

உலகெங்கும் உள்ள பார்வையாளர்களிடம் உரையாற்றும்போது உயிருடன் உள்ள ஒவ்வொருவருக்கும் அமைதி மற்றும் நிறைவின் அனுபவம் கிடைக்கக் கூடியதாக உள்ளது எனக் கூறும் பிறேம் ராவத், உலகெங்கும் பொதுவாகப் பாவனையில் உள்ளதொரு வாழ்த்துத் தொடர்பாக ஆழமான, தாற்பரியத்துடன் கூடிய முக்கியமான வினாவொன்றிற்கு விடை தேவையெனக் கூறுகின்றார். நாம் எங்கே போனாலும், நண்பரொருவரைக் காணும் போதும் நாம் கூறும் முதல் விடயம் என்ன? நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? என்பதுதான்.

அந்தக் கேள்விக்கான உண்மையான பதில் வேறு எதையோ அறிந்துகொள்வதில்தான் உள்ளது என அவர் கூறுகிறார். முதலில் அவர் விதந்துரைப்பது என்னவென்றால் “நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள் என்பதை விட்டு நீங்கள் யார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்”. ஏனெனில் இந்தக் கேள்வி அதிகளவில் கேட்கப்படுகின்றது - அதற்கான எமது பதில் என்ன? என அவர் கேட்கின்றார். “நன்றாக இருக்கிறோம்.” வேறு வழியில்லை. அப்படிக் கூறியதால் நீங்கள் மிகவும் உண்மையானவர் என எண்ணலாம். ஆனால் அது உண்மையல்ல. ஏனெனில் நீங்கள் நன்றாக இல்லாத போதும் நீங்கள் ‘ஓ நான் நன்றாக இருக்கிறேன்’ என்பீர்கள். என்னைப் பொறுத்தவரை உங்களின் முன்னுரிமை நீங்கள் யார் என்பதை அறிந்துகொள்வதே யாகும். அப்போதுதான் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்ற கேள்விக்கு உங்களால் விடை கூறமுடியும்.

மனிதர்களாகிய நாம் யார்? நாம் அமைதியிலிருக்க வேண்டிய பாத்திரங்கள். நாம் மலரும் விதைகளாக இருக்கவேண்டும் என பிறேம் ராவத் கூறுகின்றார். ஆனால் உங்களையே நீங்கள் அறியாத வரை அங்கு அமைதி இருக்க முடியாது. அமைதி ஆரம்பிப்பது உலகிலிருந்தல்ல. ஆனால் உங்களிலிருந்து தான் ஆரம்பிக்கிறது.

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
1.877. 707 3221 Toll free
416 431 5000 தமிழ்
416 264 7000 ஹிந்தி
www.wopg.org www.tprf.org

அந்த அமைதியைக் கண்டுகொள்வது மிகவும் எளிமையானதென அவர் கூறுகின்றார். எங்கே அதைத் தேடுவதென்பது தான் கேள்வி. உங்களுக்குத் தாகமாக இருந்தால் தண்ணீர் பருகுங்கள். தண்ணீர், தண்ணீர் தண்ணீர் எனச் செபிக்க வேண்டாம்- அது தாகத்தைத் தீர்க்கப்போவதில்லை. நீங்கள் ஒரு தேனீயைக் கவர வேண்டுமாயின் இனிப்பான தண்ணீரை வெளியே வைக்கலாம். இனிப்பானதொன்றை நீங்கள் அமைதியைக் கவர விரும்பினால் நீங்கள் விழிப்புணர்வு மற்றும் உள்ளுணர்வு என்னும் கவர்ச்சியைக் காட்டவேண்டும். அமைதி ஒவ்வொரு மனிதனின் உள்ளேயும் வதிகின்றது என அவர் கூறுகின்றார். “இவை வெறும் வார்த்தைகள் அல்ல. இதன் பின்னால் நான் இருக்கிறேன் என அவர் மேலும் கூறுகின்றார். உங்களுக்கு அந்த அமைதி தேவையெனின், இந்த வாழ்வில் நீங்கள் அந்த அமைதியை உணர விரும்பினால், நீங்கள் அந்த அமைதியை உணர்வதற்கு என்னால் உதவ முடியும்” எனக் கூறுகிறார். அவர் உரையாற்றும் போது பார்வையாளர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அவர் பதிலளிப்பதுண்டு.

கேள்வி: இன்று ஏன் இந்த உலகில் அமைதியும் நல்லிணக்கமும் இல்லை.?

பிறேம் ராவத்: இந்தப் பிரபஞ்சத்தில் நல்லெண்ணம் உள்ள மக்கள் குறைவாக இருப்பதாக எண்ணுகிறீர்களா? அதற்குக் குறைவில்லை. அப்படியாயின் ஏன் இந்த யுத்தங்கள் நடைபெறுகின்றன? அங்கு ஏன் இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன?. அது எளிமையானது. அங்கு விழிப்புணர்வு இல்லை. நம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனிநபர் பற்றி அறிந்துகொள்ளும் தன்மையில்லை. நமது சகாக்கள் பற்றி அறிந்து கொள்ளும் தன்மையில்லை. ஒரே ஒரு விடயம் பற்றித்தான் விழ்ப்புணர்வு உள்ளது. நாம் அவர்கள் எல்லோரையும் கொல்ல வேண்டும் என மக்கள் கூறுவார்கள் ஏனெனில் மனிதர்களைவிட காரணம் முக்கியமாகிவிட்டது.

கேள்வி: சில சமயங்களில் நான் வேதனைகளிலும் சந்தேகத்திலும் மூழ்கி விடுகிறேன். அப்படிப்பட்ட எதிர்மாறான அடக்கு நிலையிலிருந்துகொண்டு எவ்விதம் என்னால் அமைதியைப் பெறமுடியும்.?

பிறேம் ராவத்: நீங்கள் அமைதியைத் தேடிக் கொண்டிருந்தால் வாழ்த்துக்கள். அமைதி எங்கே உள்ளது.? அது உங்களுக்குள்ளே தான் உள்ளது. அமைதியைத் தேடிக் கண்டு கொள்ளும் செயற்பாடானது அமைதியை உருவாக்க முயற்சிசெய்யும் செயற்பாடல்ல. அமைதியைக் காணும் செயற்பாடானது அதன் வழியில் உள்ள எல்லாவற்றையும் அகற்றுவதாகும். குழப்பம், சந்தேகம்,

**தொடர்ச்சி 12ஆம் பக்கம்**





| TAX FREE MONEY | AGE | FEMALE | | | MALE | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Term 10 | Term 20 | Term 40 | Term 10 | Term 20 | Term 40 |
| $ 500,000 (half million) | 25 | $ 19.25 | $ 27.00 | $ 42.75 | $ 29.70 | $ 37.35 | $ 54.45 |
| | 30 | $ 20.70 | $ 28.35 | $ 47.70 | $ 30.15 | $ 38.70 | $ 75.15 |
| | 35 | $ 25.20 | $ 33.75 | $ 80.10 | $ 30.15 | $ 43.65 | $ 108.0 |
| | 40 | $ 30.60 | $ 44.10 | $ 119.7 | $ 38.70 | $ 57.60 | $ 168.70 |

# ஆஸ்துமாவினால் அவதியா?

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## ASHAM

இன்றைய காலகட்டத்தில் ஆஸ்துமா நோய் மனித சமுதாயத்திற்கு மாபெரும் சவாலாக இருந்து வருகிறது. தற்போதைய சூழ்நிலையில் நாம் காற்று மண்டலத்தில் வாழ்கிறோம் என்பதை விட புகை மண்டலத்தில் வாழ்கிறோம் என்ற அளவிற்கு புகை, தூசு போன்றவற்றால் சுற்றுச்சூழல் மாசுபட்டுள்ளது. குழந்தைகள் முதல் பெரியவர் வரை இந்த நோய் தாக்குகிறது.

ஆஸ்துமா நோய் கிருமிகளால் ஏற்படும் நோயல்ல. மற்றவர்களுக்குத் தொற்றக் கூடிய நோயல்ல. ஒவ்வாமை, நாட்பட்ட நுரையீரல் பலயீனம் போன்றவற்றால் ஏற்படும் ஒரு நோயாகும்.


### பரம்பரையாக வருவது (Genetic)

ஆஸ்துமா நோய் உருவாக பரம்பரை ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. தாய் தந்தை இருவருக்கும் இந்த நோயின் தாக்கம் இருந்தால் பிள்ளைகளைத் தாக்க 70% வாய்ப்பும், இருவரில் ஒருவருக்கு மட்டும் இருந்தால் நோய் தாக்க 30% வாய்ப்பும் உள்ளது.

### ஒவ்வாமையால் வருவது (Allergy)

1. உடலுக்கு அலர்ஜி உண்டாக்கக்கூடிய முட்டை, மீன், கத்தரிக்காய் என்பனவற்றை அதிகம் உண்ணும் போது ஆஸ்துமா நோய் பெரும்பாலும் உருவாகின்றது.

2. மருந்துகள், ஊசி முதலியவற்றின் ஒவ்வாமையினாலும் இந்த நோய் வருகிறது.



3. தூசு, இரசாயன பொருட்கள், அதிக நறுமணம் வீசும் பொருட்கள் என்பனவற்றை முகர்வதாலும் இந்த நோய் எளிதில் தாக்குகிறது.

4. சிலருக்கு உடல் பலயீனமடைந்த நிலையிலிருக்கும் போது இந்த நோயின் தாக்கம் ஏற்படுகிறது.

5. பனி மற்றும் குளிர் காற்றில் அதிக நேரம் இருப்பதால் இந்த நோய் வரலாம்.

6. பருவகால மாற்றத்தால் ஆஸ்துமா நோய் வருகிறது.

ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மூச்சு விட மிகவும் சிரமப்படுவார்கள். தொடர்ந்து மூச்சு வெளிவரும் போது ஒருவித ஒலியும் வரும், இருமல் இருந்து கொண்டேயிருக்கும், சளியை கஷ்டப்பட்டுத் தான் வெளியேற்ற முடியும். அவ்வாறு செய்யும்போது மார்பில் வலி ஏற்படும். அத்துடன் நுரையீரலைச் (Lungs) சுற்றியுள்ள நுண் துளைகளை சளி மூடிக் கொள்வதால் உள்ளே செல்லும். பிராண வாயுவின் அளவு மிக குறைவாக இருப்பதால் இரத்த சுத்திகரிப்பும் இரத்த ஓட்டமும் சீர்குலைகிறது. இதனால் உடலில் சோர்வும், நோய் எதிர்ப்பு சக்தியும் குறைந்து, மூச்சு விடுவதிலும் சிரமம் ஏற்பட்டு நேயாளி மிகவும் துன்பப்பட நேர்கிறது.



### ஆஸ்துமா நோயாளிகளின் உணவு முதலான கட்டுப்பாடுகள்

1. மது மற்றும் புகை பிடிப்பதை நிறுத்த வேண்டும். அத்துடன் தூசு நிறைந்த இடத்தில் வேலை செய்யும் போது தகுந்த பாதுகாப்பு சாதனங்களை அணிய வேண்டும்.

2. ஐஸ்கிறீம், குளிர்பானங்கள் அருந்துவதை முற்றாக நிறுத்த வேண்டும். ஏனெனில் இவற்றிலுள்ள குளிர்தன்மை உடலில் சென்று அதன் வெப்பநிலையை மாற்றுவதால் சளி பிடித்து ஜலதோசம் ஏற்பட்டு நோயை தீவிரப்படுத்தும்.

3. வாழைப்பழம் அதுவும் குறிப்பாக இரவு நேரத்தில் உண்பதை முற்றாக தவிர்க்கவும். இதுவும் சளியை உருவாக்கும் தன்மை கொண்டது. அதுமட்டுமன்றி பழைய சோற்றினை உண்பதையும் தவிர்க்க வேண்டும்.

4. எண்ணெய் பதார்த்தங்களை உண்ணா மலிருப்பதோடு முடிந்தவரை மிதமான சூடு உள்ள ஆகாரங்களையே உண்பது நல்லது.

### ஆஸ்துமா நோயை நிரந்தரமாக தீர்க்கும் யோகா பயிற்சி

பல வழிகளிலும் இன்னலைத் தரக்கூடிய ஆஸ்துமாவை முடிவுக்குக் கொண்டுவர ஒரேவழி நமது முன்னோர்கள் நமக்களித்துச் சென்ற யோகப்பயிற்சியே. இப்பயிற்சியானது நிரந்தர தீர்வைத் தரக்கூடியதும் அனைவரும் எந்த சூழ்நிலையிலும் செய்வதற்குத் தகுந்த எளிய பயிற்சி முறை யாகும். இந்த பயிற்சிகளை ஒரு சிறந்த வழிகாட்டி ஒருவரின் ஆலோசனைப்படி ஆரம்பத்தில் பழகுவதுதான் எந்த தீங்கும் இல்லாது விரைவான பலனை தரக்கூடியது. முதலில் இந்த நோய் உடையவர்கள் எப்போதும் உடலைத் தூய்மையாக வைத்திருப்பது அவசியம்.


### நோய்க்கு முடிவு கட்டும் மூச்சுப்பயிற்சி (பிராணாயாமம்)

ஆஸ்துமா நோயாளிகளுக்கு பொதுவாக மூச்சை இழுப்பதும், அதனை வெளி விடுவதும் சிரமமாக இருக்கும். இதனை இலகுவாக்குவதற்குப் பொருத்தமான கீழ் கண்ட மூச்சுப் பயிற்சி முறைகள் சிறப்பான பலனைத் தரும். கபாலபதி, பஸ்திரிகா என்ற மூச்சுப்பயிற்சிகளை நின்ற நிலையிலேயே 20 முதல் 30 முறையளவு செய்யவும். இவ்வாறு தொடர்ந்து ஆறு சுற்றுகள் செய்துவரும்போது உடலில் உள்ள சளி கணிசமாக ெ வளியேறி சுவாசத்தை உள்ளே இழுத்து வெளிவிடுவதிலுள்ள சிரமத்தைக் குறைக்கின்றது.

இதனைத் தொடர்ந்து செய்துவரும் போது சுவாசம் சீர்செய்யப்பட்டு ஆஸ்துமா நோயிலிருந்து சுகம் பெறுவது உறுதி. எனவே இந்த கபாலபதி பயிற்சி யோகாசன ஆசிரியரின் உதவியுடன் முறைப்படி பழக வேண்டும். தவறாகச் செய்யுமிடத்து இருதயம் பாதிப்பு போன்ற பக்கவிளைவு களும் ஏற்படலாம்.

### ஆஸ்துமா நோயாளிகளுக்கான ஆசனப் பயிற்சிகள்

1. யோகா முத்ரா - மகா முத்ரா
2. விபரீத ஹரணி
3. பாத ஹஸ்தாசனம் 4. ஒட்டக ஆசனம்
5. புஜங்காசனம் 6. நாடிசுத்தி



இவை அனைத்தும் நுரையீரலின் (Lungs) விரிந்து சுருங்கும் திறனை அதிகரிக்கச் செய்வதுடன் உடலிலுள்ள கரியமில வாயுவை வெளியேற்றி அதிக பிராண வாயுவை உடலுக்குள் செலுத்துவதால் சுவாசம் சீராக நடைபெறும்போது ஆஸ்துமா நோய் படிப்படியாக குணமடைகின்றது.





ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# தலை முடி, நகங்களில் குறைபாடு ஏற்படுவது ஏன்?

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

நமது உடலில் உள்ளும், புறமும் குறைபாடு இல்லாத பகுதியைப் பெரும்பாலும் காண முடியாது. ஓரளவு கண்டு கொள்ள முடியும். வெளியில் இருக்கும் உறுப்புக்களில் ஏற்படும் குறைபாடுகளைக் காணும்போது இந்நிலை எப்படி ஏற்படுகின்றது? என்பதை நாம் ஓரளவு அறிந்து கொண்டாலும் முக்கிய காரணங்களை ஆய்வுகள் மூலமும் மருத்துவர்களின் நோய் நிர்ணயத்திற்கு ஏற்ப கண்டுகொள்ள முடியும். எனவே இவற்றைப் பற்றி நாம் ஓரளவு கண்டு கொள்வது முற்கூட்டி சிகிச்சை பெற்று இன்னல் அற்று வாழ்வதற்கு உதவியாக இருக்கும்.

நம்மில் சிலரைப் பார்க்கும் பொழுது தலைமுடி எண்ணெய் பசை அதிகமாக உள்ளது போல் தென்படும். தற்காலத்தில் தலைமயிரை நன்கு படியச் செய்வதற்கு சிலர் பசைத் தன்மை பொருந்திய கிறீம் களைப் பூசிக் கொள்ளுகின்றார்கள். இது ஒருபுறம் இருக்க இயற்கையாக சிலருக்கு எண்ணெய் பசைபோல் இருக்கும் தலை முடியுள்ளவர்களைச் சற்று பார்ப்போம். இந்நிலைப்பட்டோருக்கு மருத்துவ ரீதியாகவோ, அன்றி தற்காலிகமாகவோ நிவர்த்தி பெற வழியுண்டா? என்பதை முதல் நாம் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

இதற்கு நாம் நீராடும் போது தலைக்கு சோப், சம்போ போன்றவற்றைப் பாவிக்கின்றோம். இதனால் பொடுகு, தலைமுடி உதிர்தல் தவிர்க்கப்பட்டால் சந்தோஷப்படுகின்றோம். எனவே இதற்குரிய எண்ணெய் தன்மையை அகற்றக் கூடிய சோப்போ அன்றி சம்போவோ இருக்கின்றன. பார்த்து, கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கு குணம் கிடைக்காவிடில் மருத்து வரைக் கண்டு சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.



இன்னும் சிலரைப் பார்வையிடும் போது முறைப்பாட்டில் தங்களின் முடிமயிர் கொட்டிய வண்ணம் இருப்பதாக கூறுகின்றார்கள். இதற்கு போசாக்கு சத்துள்ள உணவு இல்லாவிடில் ஏற்படலாம். அதற்காக அதிக உயிர்ச்சத்து (Vitamin's) வகைகளை அதிகம் எடுக்கப்படக்கூடாது எனவும் அறியப்படுகின்றது. எனவே ஓரளவு எடுத்து வருவதினால் தாக்கம் அதிகம் ஏற்படாது. குழந்தைகளுக்கு பிறப்பு நோய் காரணமாகவும் ஏற்பட இடம் உண்டு என ஆய்வுகள் கூறுகின்றன. உதிர்ந்த முடி விரைவில் சரி நிலைக்கு வந்து விடும். முற்கூட்டி இதையிட்டு சிந்திக்கத் தேவையில்லை. இப்படி நிலை ஏற்பட்ட குடும்பங்களில் கண்டிருப்பீர்கள்.

நமது தலைப்பகுதியை அடிக்கடி சீப்பினால் வாருவது (இழுப்பது) தவிர்க்கப்படல் வேண்டும். தலைமுடியைச் சாதாரணமாக வாருவதை (இழுப்பதை)க் கை கொண்டால் எண்ணெய் அதாவது தலையின் மண்டைப் பகுதியில் உள்ள பசைத் தன்மையுள்ள எண்ணெய் பரவலாக தலைமுடியையும், மண்டைப் பகுதியையும் சுத்தமாக வைத்திருக்க உதவியாக இருக்கும். உதிர்ந்த மயிர்களை அப்புறப்படுத்தவும் உதவுகின்றது.

ஆனால் அடிக்கடி மண்டைப் பகுதியில் உள்ள முடியை (மயிர்) அழுத்தமாக வாரினால் மண்டைப்பகுதியில் பிளவு ஏற்பட்டு முடிஉதிரவும், காயம் சிலவேளை யில் புண்காயமாக ஏற்பட்டு கிருமிகள் குடி கொள்ள முடியும். எனவே சாதாரணமாக தலை முடியை வார வேண்டும். நீண்ட முடியுள்ளோர் இதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். சிலர் தலைமுடி சிக்கலாக இருக்கின்றது என எண்ணி மண்டைப் பகுதியை நோவும் படி வாரி இழுப்பதுண்டு. எனவே சாதாரணமாக தலை முடியை வாரிக் கொள்ள வேண்டும். மற்றும் வைரமற்ற, மெல்லிய சீப்புகளைக் கொண்டி தலைமுடியை வாருவது நன்று. சிலரைப் பார்க்கும் போது தலையில் மயிர் இன்றி வழுக்கல் நிலையில் இருப்பதை காணக் கூடியதாக உள்ளது. இவர்கள் முதுமை அடைந்தவர்கள் அல்ல. இளம் வயதினை உடையோர் ஆவார். ஆனால் இவர்களுக்கு பரம்பரையாகவும் வரலாம் எனவும் அறிய முடிகின்றது. இந்நிலை யானது Androgen என்ற ஹோமோன் களால் ஏற்படுவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. வயது ஏறி ஓரளவு முதுமைக்கு முன்பும், சிலருக்கு வழுக்கல் நிலை ஏற்படலாம். முதியவரானாலும் தலை முடியின்றி வழுக்கல் நிலை ஏற்படாதவர் களையும் நாம் காணுகின்றோம். இது அவர்களின் போசாக்கு உணவும், உரிய ஹோமோன் விருத்தியும் எனக் கூறலாம். எனவே இளமையில் வழுக்கல் ஏற்பட்டு கவலைப்படுவோர் செயற்கை முறையில் முடியைப் பூரணப்படுத்துவதிலும் பார்க்க Implanting New hair ஆபத்து இல்லாதது எனவும் கூறப்படுகின்றது.

தொடரும்

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.456.9796



Efile
Your Tax Returns



CRA Approved E- Filer
T. Munnainathan BSc (M Eng).
Insurance Advisor & RESP Representative,
Former Engineer Srilanka Railways

Faster Refund
Paperless
Improved Accuracy
Ease of mind
Ease of payment
Call for Appointment
Nathan
416 500 9475
Unit 200 - 4433 Sheppard Ave East.
Brimly & Sheppard
Other Services:
Apply for PR Card, OAS, Citizenship, Passports etc......
RESP, RRSP & Life Insurance

# MARCH SPECIAL

## March Special For Buyers

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

**Also Free Moving**

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

**Get More $$$ For Your House By Calling Me!**

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

(This Deal Start From March 01st to November 30th)



**Lourdson Antonipillai**
(Sales Representative)

**Dir: 416.738.8824**
**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

*Independently Owned & Operated

# சார்பியல் - 43

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

மரத்தில் இருந்து இயல்பாக விழுகின்ற அப்பிள் வெளிநேரப் பரிமாணத்தின் வளைவிற்றான் இயங்குகின்றது. ஆனால் அது இயங்கும் குறும்பாதையினது தூரமானது மிகவும் சிறியதாக உள்ளது. அதனால், அப்பிளின் இயக்கமானது ஒருவளைவில்லாத நேர்ப்பாதையில் நிகழ்வது போன்று தோற்றுகிறது. இது எப்படியெனில், எமது புவியின் மேற்பரப்பு நாங்கள் இருக்கின்ற இடத்தில் தட்டையானது போன்று தெரிகின்றதல்லவா., புவியின் முழு அமைப்புடனும் பார்க்கையில், தட்டை போன்று காணப்படும், நாங்கள் இருக்கும் இடம், உண்மையில் வளைவான புவியின் ஒரு பகுதியாகும். எமக்குத் தட்டை போன்று தோன்றுவது உண்மையில் ஒரு தோற்ற மாயையே.

இன்னமும், நாங்கள் இருக்கின்ற இடத்தில் ஒரு நேர்கோட்டினை வடக்குத் தெற்காக வரையுங்கள். எங்களுக்குப் பார்க்கும்போது அது வளைவேதும் இல்லாத ஒரு நேர்கோடுதான். எங்களது இடத்தை கொஞ்சம் கொஞ்சமாய் பெரியதாக்கிக் கொண்டு எமது நேர்கோட்டினை வடக்குப் பக்கமாக நீட்டிக் கொண்டு போவோம். என்ன தெரியும்? நாங்கள் நீட்டிக் கொண்டு போகும் கோடு, எங்களுக்கு எப்பொழுதும் நேர்கோடு போலத்தான் தெரியும். இப்போது வடமுனைவு வரையில் வந்துவிட்டோம் என்போம். இனி, எங்களது கோட்டினை மொத்தமாகப் புவியிற்கு வெளியில் நின்று பார்த்தால் எப்படியிருக்கும். வளைவான புவியின் மேற்பரப்பில் வரைந்த ஒரு வளைந்த கோடு போலத் தெரியுமல்லவா. ஆக, மிகப் பெரியதான வளைந்த பரப்பில் உள்ள கோட்டின் (அது வளைகோடாகத்தான் இருக்கும்) ஒரு சிறிய துண்டினைப் பார்க்கும்போது அது இரு பரிமாணத்து நேர்கோடு போன்று தெரியும். எமது புவியின் வளைந்த மேற்பரப்பின் கோட்டின் ஒரு துண்டு, நேர்கோடு போலத் தோற்றின், மிகப் பெரிய வெளியில் வளைவில் உள்ள சிறு துண்டுக்கோடு எப்படித் தெரியும்? இதுபோன்று தெரிகின்ற, வெளி நேரப் பரப்பில் உள்ள சின்னஞ் சிறிய வளைந்த கோட்டில்தான் அப்பிள் பழம் இயல்பாக விழுகின்றது. அது விழுகின்ற தூரம் மிகமிகச் சிறியதாக இருப்பதால் அப்பிள் ஒரு பரிமாண நேர்கோட்டில் விழுவது போன்று தெரிகின்றது. அவ்வளவுதான்.

இதேபோன்ற விளைவினாற்றான், புவியினால் உண்டாக்கப்பட்ட வெளியின் வளைவில் நேராக விழுந்து கொண்டிருக்கிற சந்திரன் வட்டப் பாதையில் புவியைச் சுற்றுவது போல இருக்கின்றது. கதிரவனின் சூழல் வெளியில் விழுகிற கோள்கள் கதிரவனைச் சுற்றி வருவது போல இருப்பதுவும் இவ்விதமேதான். இங்கே, நாற்பரிமாணத்தின் இயக்கம் முப்பரிமாணத்தில் எங்களுக்குத் தெரிகின்றது. பொதுவாகக் கூறுவதெனில், எந்தவொரு இயக்கமும் எந்தெந்தப் பரிமாணத்தில் இருந்து பார்க்கப்படுகின்றதோ, அதற்கு ஒத்ததான இயக்கப் பாதையை அது காட்டும். நாற்பரிமாணத்தில் பார்க்கையில் ஒரு விதமான இயக்கமாகவும், முப்பரிமாணத்திற் பார்க்கையில் வேறுவிதமான இயக்கமாகவும், இன்னமும் இருபரிமாண வெளியிற் பார்க்கையில் இன்னொருவிதமான இயக்கமாகவும் தோன்றும். இதனை இன்னமும் கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம். நேர்கோடு ஒன்று இருபரிமாணத்தில் உள்ளது என்பது எங்களுக்குத் தெரியும். ஒரு எறும்பு அக்கோட்டின் வழியில் ஊர்ந்து செல்கிறது எனக் கருதுவோம். எங்களுக்கு அந்த எறும்பின் பாதை மிகத் துல்லியமாகத் தெரியும். யாராவது கேட்டால், அந்த எறும்பு நேர்கோட்டிற் சென்று கொண்டு இருக்கிறது எனக் கூறிவிடுவோம். சரி, இனி அந்த எறும்பு ஏதோ காரணத்தால் எங்களது நேர்கோட்டில் இருந்து விலத்தி இடது புறமாகத் தனது பாதையை மாற்றிக் கொண்டது என்போம். இப்போது எங்களுக்கு எறும்பு எங்கு செல்கிறது எனக் கேட்டால், அந்த எறும்பு எங்களது நேர்கோட்டுக்கு இடது புறமாக ஊர்ந்து கொண்டிருக்கிறது என்று சர்வ சாதாரணமாகக் கூறிவிடுவோம். ஆனால் எங்களில் ஒருவரது பார்வையின் வலிமை ஒரு பரிமாணத்திற்கு, அதிலும் அந்த நேர் கோட்டிற்கே பழக்கப்பட்டு இருந்தால், அந்த எறும்பு எனக்குத் தெரியவில்லை என அவர் கூறுவார். ஏனெனில் அவருக்கு ஒருபரிமாணப் புலன் மட்டுமே இருப்பதனால், அந்த நேர்கோட்டில் இருப்பவை மட்டுமே தெரியும். எங்களது பார்வையும் ஒரு பரிமாணத்திற்கே பழக்கப்பட்டிருந்தால், எங்களுக்கும் அந்த எறும்பு இப்போது எங்கே இருக்கிறது, என்ன செய்கிறது என்பது தெரியாதுதான்.

அடுத்த தடவையும் பரிமாணங்கள் பற்றிப் பார்ப்போம்.



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



# நடந்தது! நடக்கின்றது! நடக்கலாம்!

பொதுவாக தொலைபேசி அழைப்புக்களில் அனாமதேய அழைப்பு (Unknown call) என்று வரும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டியது உண்மையாகத்தான் உள்ளது. நியாயமான, நேர்மையான, இயல்பாகவே இயங்கிவரும் நிறுவனங்கள் தமது நிறுவனத்தின் பெயரிலிருந்தே தொலைபேசி அழைப்புக்களைச் செய்து வருகின்றன. ஆனால் அண்மையில் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு நிறுவனத்தின் பெயரில் இல்லாமல்

**பார்த்தீபன்**



**நான் வாசித்து மகிழ்ந்தது**

வந்தது. (அனாமதேய அழைப்பு) அதில் பேசிய பெண்மணி South Asian குரல்வளம் கொண்டவர். அவர் “நீங்கள் வருமானவரி செய்ததில் தவறு இருக்கிறது. அதற்காக RCMP, உங்களைக் கைது செய்ய பிடிஆணை கொடுத்துள்ளது. இதனால் இக்குறிப்பிட்ட எண்ணுடன் (519.914.5380) தொடர்பு கொள்ளுங்கள்” எனக் கூறியிருந்தார். அதன் பின்னர், குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பேசியபோது மறுமுனையில் South Asian குரல்வளம் கொண்ட ஆண் ஒருவர் ஏற்கனவே சொன்னதையே மீண்டும் கூறியதுடன் மூன்று நாட்களிற்குள் பணம் செலுத்த வேண்டுமெனவும் மிரட்டினார். தாங்கள் அதற்காக சட்டநடவடிக்கை எடுக்க தயாராக இருப்பதாக கூறியதுடன் தொலைபேசி துண்டிக்கப்பட்டு விட்டது.

எனது வருமானவரிக் கணக்கு மிகவும் நேர்த்தியாக அனுபவமிக்க கணக்காளரால் கையாளப்படுகின்றது. அதனால் நான் Canadian Anti Fraud Center உடன் தொடர்பு கொண்டு நடந்த விடயம் பற்றி கூறினேன். இவ்வாறான தொலைபேசி அழைப்பைப்பெற்ற பலர், ஏற்கனவே Canadian Anti Fraud Center இற்கு தகவல் கொடுத்திருந்ததால் என்னுடைய அழைப்பு அவர்களுக்கு புதிய தகவலாக இருக்கவில்லை.

இதே தொலைபேசி அழைப்பு உங்களிற்கோ, உங்களிற்கு தெரிந்தவர்களிற்கோ வரலாம். எச்சரிக்கையாக இருங்கள். இவ்வாறு நடந்தால் பின்வரும் இலக்கத்துடன் 1888 495 8501 தொடர்பு கொண்டு தகவல்களைக் கொடுப்பதால் பலரிற்கு நன்மை அளிக்கும். சிலர் இவ்வாறான தொலைபேசி அழைப்புகளால் பணத்தையும் நிம்மதியையும் இழந்துள்ளனர்.

# உணவே மருந்து - மருந்தே உணவு

**கந்தையா சண்முகம்**
**இளைப்பாறிய அதிபர்**

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும். உலகம் எல்லாம் நலம் பெற வேண்டும் என்ற நோக்கிலே உணவே மருந்து, மருந்தே உணவு என்ற தலைப்பில் எழுதத் தொடங்கினேன். புதிய கண்டுபிடிப்புகள் பலவற்றை மேற்கொள்ளும் மருத்துவர் இதய நோய்க்கு யோகப் பயிற்சி, இயற்கை உணவு இவையே மருந்து என்று வலியுறுத்தி வருகின்றனர். பதற்றமும், பரபரப்பும், வேகமும் நிரம்பியுள்ள இக்கால வாழ்க்கை முறையின் வேகமே பலவிதமான நோய்களுக்கு மூலகாரணமாக இருக்கிறது. சாதாரணமாக மாரடைப்பு, நெஞ்சுவலி, மூச்சுத்திணறல் என்று கூறும் இதய நோய் இன்று பெரிய அளவில் உயிர்களை பலி கொண்டு வருகிறது.



இதயத்துக்கு இரத்தத்தை கொண்டு செல்லும் குழாய்களின் அடைப்பை அறுவைச் சிகிச்சை மூலம் அல்லது மாற்று இதயம் கூட பொருத்தி அதனால் நோயின் தாக்குதலில் இருந்து நிவாரணம் பெற்று வருகிறார்கள். மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சையும் வேண்டாம், மருந்துகளும் வேண்டாம் தாவர இயற்கை உணவு - யோகாப் பயிற்சி, தியானம் இந்த மூன்று வழிகளைக் கையாண்டாலே நோயின் தாக்குதலில் இருந்து விடுபடலாம் என்கிறனர். தினமும் காலை வேளையில் நடக்க வேண்டும். தினசரி அரைமணி நேரம் எடுத்துக் கொள்ளலாம். அடுத்து உடலையும் மனத்தையும் எளிமையாக வைத்துக்கொள்ள உதவும் பயிற்சி முறைகள், ஆராதனைகள், தியானமும் யோகப்பயிற்சிகளும் மேற்கொள்ளலாம். நல்ல சிந்தனைகளும், சுமையில்லாத மனமும் ஆரோக்கிய வாழ்வுக்கு அடிப்படையாம். ஆராதனை என்றால் இறைவனை வழிபடுதல், வேண்டிக்கொள்ளல், இறைவனை நோக்கிய நோன்பு, சுய அர்ப்பணம், இறைவனை அழைத்தல் முதலியனவாம்.

தியானம் என்றால் உணர்வை உள்ளே ஒருமுனைப்படுத்தல், உள்ளே ஆழ்ந்திருத்தல், சமாதி நிலையிக்கு உட்படுதல் என்பவையாகும். தியானம், தவம், ஆராதனை இவையெல்லாம் சிந்தனையின் பாகங்களே! உணர்வின் மாற்றமே யோகத்தின் இலக்கு. யோகமாவது முக்குணங்களையும் ஐம்புலன்களையும் அடக்கி மூலவாயுவை எழுப்புகின்ற இடைபிங்கலை என்னும் நாடிகளை அடைத்து சுழிமுனை வழியைத் திறத்தல். இறைவனது ஒளிவடிவாகிய அருவத்திரு மேனியை பற்றி செய்யப்படும் வழிபாடே யோகமாம் (அகவழிபாடு). சரியை, கிரியை, யோகங்களில் பழகப்பழக புறக்காட்சியாகிய உலகப் பயிற்சியில் பற்று நீங்கி, அகக்காட்சியாகிய இறைவன் திருமேனி வழிபாட்டில் பற்று வளரும். அமெரிக்காவில் ஒரு புகழ் பெற்ற மருத்துவர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இயற்கை உணவு, யோகப்பயிற்சி இவையே இதய நோய்க்கு மருந்து என்று வலியுறுத்தி வருகிறார். இந்த மேதையின் ஆராய்ச்சி முடிவுகளுக்கு தூண்டுகோலாகவும், ஊன்றுகோலாகவும் விளங்குபவர் அமெரிக்காவில் தாமரைக் கோயிலை நிறுவியுள்ள, தவத்திரு சுவாமி சச்சிதானந்தா அவர்கள் தாம்.

பெரிய அளவில் பரவிவரும் நோய் இதயநோய் ஆகும். புகை பிடிப்பதும் மாரடைப்புக்கு ஒரு முக்கிய காரணம் - மறவாதீர்கள். இன்று நாகரிக முதிர்ச்சியால் ஏற்பட்ட பழக்கவழக்கங்கள் காரணமாக வேகம், பதற்றம், கொழுப்புச்சத்து மிக்க உணவு, குடி, புகைபிடித்தல், மனம் கெடுதல் என இன்றைய மனிதவாழ்வு மாசுபட்டு விட்டது. படியுங்கள். நம்முன்னோர்களின் வாழ்க்கை முறைதான் முனிவர்களும், மகான்களும், சான்றோரும், ஞானியரும், நம் தாய் தந்தையரும், வாழ்ந்த வாழ்க்கை. இவையே வரலாற்றில் இடம் பெறத்தக்கவையாம்.

விளம்பரம் பத்திரிகையின் ஆரம்பகால எழுத்தாளர்களில் ஒருவரான திரு. கந்தையா சண்முகம் அவர்களின் மறைவிற்கு எமது நிறுவனமும் கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றது. பெரியவரின் அத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறது.

இவரின் ஞாபகார்த்தமாக அவரின் கட்டுரைகளில் ஒன்று மீண்டும் பிரசுரமாகின்றது.

# மரண அறிவித்தல்



மண்ணின்
08.01.1920

விண்ணில்
26.03.2014

## திரு. கந்யைா சண்முகம்

யாழ். குப்பிழானைப் பிறப்பிடமாகவும், கனடா Ajax ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகம் அவர்கள் 26-03-2014 புதன்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார், காலஞ்சென்ற பவளம் (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், Dr. சதானந்தரூபி (பிரித்தானியா), ராதா, சதானந்தன், Dr. சிவநேசன், ஜீவகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரன் (பிரித்தானியா), சத்தியானந்தன், காலஞ்சென்ற Dr. கேதீஸ்வரி, செல்வதி உஷா, அனுஷா, கனிமொழி ஆகியோரின் மாமனாரும், Dr. மீனாட்சி, பழனி, Dr. விஸ்ணு, கஜன், மீரா, பிரணவன், அபினாஸ், அபர்னா, அபிராமி ஆகியோரின் பேரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு - 905.239.2170
தகவல் - குடும்பத்தினர்

# மயக்கும் மொறோக்கோ - பகுதி 5

**- துறையூரான் -**

திருமணம் முடிந்த அடுத்த நாள் மறக்கேசியிலுள்ள முக்கியமான உல்லாசப் பயணிகள் செல்லும் இடங்களைப் பார்ப்பதற்காகச் சென்றோம். முதலில் மெடினர் என்றழைக்கப்படும் சந்தைக்குச் சென்றோம். இது ஜெமா எல்பினா (Jamacia - El - Fnea) என்றழைக்கப்படுகின்றது. இங்கு பலதரப்பட்ட வியாபார அங்காடிகள் உள்ளன. இங்குதான் பழமையும் புதுமையும் கைகோர்க்கின்றன எனக் கூறலாம். ஆபிரிக்காவின் மிகப் பிரசித்தி பெற்ற அங்காடியாக இது கணிக்கப்படுகிறது. இது 1985 இல் யுனெஸ்கோ நிறுவனத்தால் உலகப்பாரம்பரிய மையமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது காலத்துக்குகாலம் பல மன்னர்களால் புனரமைக்கப்பட்டு வந்துள்ளது. இதன் சுற்றுப்புற மதில்கள் அடி யக்குப் யுசுவ், குறிப்பா யாகுப் அல்- மன்சூர் அரசர்களால் 1147-1158 காலப்பகுதியில் விஸ்தரிக்கப்பட்டன. இதைச் சுற்றியுள்ள மசூதி அரண்மனை, வைத்தியசாலை, தோட்டங்கள் முதலியனவும் புனரமைக்கப்பட்டன. ஆரம்பத்தில் இச்சதுக்கம் சிரைச்சேதங்கள் நடத்தப்படும் பொதுவிடமாக வேறு அரசர்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது. பொதுமக்கள் தீய செயல்களைச் செய்யாமல் தடுப்பதற்காக இவ்வாறான கொடிய தண்டனைகளை அக்கால அரசர்கள் கையாண்டனர். இச் சதுக்கத்துக்குப், பாம்பாட்டிகள், நடனமாடுவோர், வாத்தியக் கருவிகள் வாசிப்போர், மந்திரவாதிகள், குரங்காட்டிகள், பாம்பாட்டிகள், தாவரக்குடிநீர் விதைகள், பட்டைகள் இலைகள் விற்போர், கரணம் போடுவோர், கழைக்கூத்தாடிகள், பல் வைத்தியர், வேடிக்கை காட்டுவோர் எனப் பல்வேறு இனத்தவர்களும் நாட்டவர்களும் ஒன்று கூட இருப்பதைக் காணலாம்.



நாம் சென்ற அன்று உல்லாசப்பயணிகள் பலர் வாடகைக்கார்கள், பஸ்கள், குதிரைவண்டிகள் எனப் பல்வேறு வழிகளில் வந்து சேர்வதைக் காணக்கூடியதாய் இருந்தது. வெள்ளை, கறுப்பு, மஞ்சள், கபிலம், கடும் கறுப்பு, செம்வெள்ளை எனப்பல்வேறு நிறத்தவர்களை அங்கு காணக்கூடியதாய் இருந்தது. பல பாரம்பரியப் பொருள்களான கம்பளம், பட்டு சால்வைகள், தலைத்துண்டுகள், ஆண்பெண் சிறுவர் உடைகள் முதலியன கண்ணைக் கவரும் வண்ணங்களில் விற்கப்பட்டன. இவற்றைத் தவிர தற்கால மின்சாரப் பொருட்கள், கமரா, தொலைபேசி போன்றவையும் விற்பனைக்கிருந்தன. விலைகள் சிலபொருட்களுக்கு மலிவாக இருந்தன. பெரும்பாலும் பேரம் பேசியே பொருட்களை வாங்க வேண்டியிருந்தது. மறக்கேசில் ஏராள-மான உல்லாசப் பயணிகள் வருவதால் ஏராளமான ஹோட்டல்களும் மூலைக்கு மூலை உணவுச் சாலைகளும் காணப்பட்டன. பெரும்பாலான உணவுச் சாலைகளில் புதினாத் தேநீர் தாராளமாகப் பரிமாறப்பட்டது. அங்கு புதினா, கொத்தமல்லி இலை, இஞ்சி போன்றவற்றை தேநீரில் கலந்து குடிக்கும் பழக்கம் காணப்படுகிறது.

மேலும் இங்கு மத்தியதரைக் கடற்சுவாத்தியம் காணப்படுவ-தால் தோடை, எலும்மிச்சை, மா, பலா, ஒலிவ், வாழை ஆகியவற்றின் பழங்களும், உலர் பழங்களும் விற்கப்படுகின்றன. பலவகை வாசனைத் திரவியங்கள், எண்ணெய் வகைகள், மிருகங்களின் தோல்கள் முதலியனவும் விற்கப்படுகின்றன. பெரும்பாலும் உலர் பழங்கள், தானியங்கள், பழவகைகள் யாவும் பெரிய தட்டுக்களில் (Basins) அழகாகக் குவித்துக்கடைகளில் வைக்கப்பட்டிருக்கும். இவற்றைப் பார்க்க மிக அழகாக இருக்கும். பெரும்பாலும் முக்காடு போட்ட பெண்கள் இக்கடைகளில் வியாபாரஞ் செய்வதைக் காணலாம். பெரும்பாலானவர்கள் ஆங்கிலம் பேசுகிறார்கள். எனினும் பிரெஞ்சு பேசுவோர் அதிகமாகக் காணப்படுகின்றனர். பிரெஞ்சுக்காரர் பலர் இங்கு வந்து பெரிய மாளிகைகள் போன்ற வீடுகளில் வாழ்கிறார்கள். இங்குள்ள நல்ல காலநிலையினாலும், பெரிய வளவுகளோடு கூடிய வீடுகளின் விலை குறைவாக இருப்பதனாலும் வெளிநாட்டவர்கள் வந்து வாங்குகிறார்கள். மேலும் இங்கு செய்யப்படும் மரச்சாமான்கள், தோற்சாமான்கள் யாவும் இந்தியக் கலைப்பொருள்கள் போன்ற வடிவமைப்பையும் வண்ணக் கலவைகளையும், கொண்டுள்ளன. இவை யாவும் முகம்மதிய கலைகலாச்சாரங்களைப் பிரதிபலிப்பனவாக உள்ளன.

- தொடரும்



# BRAND NEW CONDO. IN SCARBOROUGH



**Coming Phase II**

**Completion 2016 / 2017**

* Exclusive for Homelife GTA Realty Inc.
* Starting From $234,800
* Only limited time

HOMELIFE HIGHER STANDARDS

**Homelife / GTA Realty Inc.** Brokerage*

**Tel: 416.321.6969**

**5215 Finch Ave, E, #203, Toronto ON**

*Independently Owned & Operated

# மகுடம் 2014

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாக்கிளை தனது இருபது வருட காலசேவையை கொண்டாடும் வண்ணம் நிகழ்த்திய 'மகுடம்-2014' முத்தமிழ் விழா அற்புதமாக அமைந்தது. மார்ச் மாதம் இருபத்திரண்டாம் திகதி ஆர்மீனியன் இளைஞர் மன்றத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. மண்டப நுழை வாசலில் சம்பிரதாய பூர்வமாக முன்னாள் அதிபர் சுடர் மகேந்திரன் தம்பதிகள் குத்து விளக்கினை ஏற்றிவைத்தனர். சங்கத் தலைவர் மாணிக்கம் ஜெகநாதன் பிரதம விருந்தினர் கலாநிதி. இசைஞானி செல்வராசா அவர்களை வரவேற்றார். திருமதி ஜெயலோஜினி பரராஜசிங்கம் மாலை சூட்டி நல்வரவு கூறினார். தேசியக் கொடி, கல்லூரிக்கொடி ஏற்றப்பட்டு தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

கைகளில் சுடரேந்தியவண்ணம் திருமதி. குமுதினி சிறிகாந்தனின் மாணவிகள் 'ஒளி படைத்த கண்ணினாய் வா வா' என்று வரவேற்பு நடனம் ஆடினார்கள். இச்சந்தர்ப் பத்தில் அரங்கமே இருளாகி விளக்குகள் நர்த்தனமாகியது கண்கொள்ளாக்காட்சியாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து நடந்த செல்வி. ரூபினி தெய்வேந்திரனின் மாணவிகளின் நடனம் இரசிகர்களின் மனதைக் கொள்ளை கொண்டது எனலாம். சங்கத்தலைவர் மாணிக்கம் ஜெகநாதனின் தலைமையுரை இரத்தினச்சுருக்கமாக அமைந்தது. கனடா பழைய மாணவர் சங்கம் தாயகத்திலுள்ள கல்லூரி மாணவர்களுக்கு திறமை, தேவை அடிப்படையில் வழங்கிவரும் நூற்றுக்கு மேற்பட்ட புலமைப்பரிசில்களை வழங்க நன்கொடை வாரி வழங்கிய பழைய



சுடர் மகேந்திரன்

மாணவர்க்கு நன்றி கூறினார். ஆரம்பகல்வி முதல் பல்கலைக்கழகம் புகுமுக வகுப்பு வரை கல்வி கற்றவர் பிரதம விருந்தினர் எனப் பாராட்டினார். தனது வாழ்க்கை யிலேயே சந்தித்த ஒரேயொரு எளிமையான பெண் பிரதம விருந்தினர் தான் என்றும் கூறினார். சங்கத்தின் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்த உதவிய செயற்குழு உறுப்பினர்களுக்கு தனது நன்றிகளைக் கூறினார். இதனைத் தொடர்ந்து திருமதி. நந்தினி ஜெகதீஸ்வரனின் மாணவிகளின் நடனநிகழ்ச்சி அவையினரின் பாராட்டைப் பெற்றது.

பிரதம விருந்தினர் கலாநிதி இசைஞானி செல்வராசா அவர்களின் பேச்சு மிகவும் இயல்பாக அமைந்தது. சாதாரணமான பேச்சு நடையில் தங்குதடையின்றி எவ்வித குறிப்புகளுமில்லாமல் பேசிய அவரது மொழிநடை குறிப்பிடத்தக்கதாகும். ஆறாம் ஆண்டுமுதல் எட்டாம் ஆண்டுவரை கற்பித்த தனது கணித ஆசிரியை தனது வாழ்வின் வழிகாட்டி எனத் தனது இதயத்தின் அடியிலிருந்து கூறிய வார்த்தைகள் சபையினரை நெகிழ வைத்தது. இதனைத் தொடர்ந்து நந்தினி ஜெகதீஸ்வரனின் மாணவிகளின் நடனம் இடம்பெற்றது. நடனம் மிகவும் சிறப்பாக அமைந்ததென அவையோர் பேசியது குறிப்பிடத்தக்கதாகும். இராஜ நந்தினி லிங்கனின் மாணவிகளின் நடனம் ஆனந்த நடனம் என்று பாராட்டலாம். திருமதி. குமுதினி சிறிகாந்தனின் மாணவிகள் வழங்கிய நடன நிகழ்ச்சி மிகவும் தரமாக அமைந்தது. திருமதி. ரஜனி சக்திரூபனின் மாணவிகள் தமது நடனத்தால் சபையினரின் பாராட்டுதல்களை அள்ளிச் சென்றனர். சதங்கை நர்த்தனாலய மாணவிகளின் நடனம் வழமைபோல் சிறப்பாக அமைந்தது.

இதன்பின் கௌரவ விருது வழங்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது. திரு. ரவிமோகன், திரு. ராம் பிரசன்னா ஆகிய இருவரும் பாராட்டப்பட்டு கௌரவ விருது வழங்கப் பட்டது பாராட்டத்தக்கதாகும். சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவும் பழைய மாணவர்களை கௌரவிப்பது மிகவும் முக்கியமானதாகும். இதன்பின் இடம்பெற்ற ரூபினி தெய்வேந்திரனின் மாணவிகளின் நடனம் மனதை கொள்ளை கொண்டது. இடை வேளையின் போது வாய்க்கு இனிமையான உணவும் வழங்கப்பட்டது. கணபதி ரவீந்திரனின் 'மத்தாப்பூ' நாடகம் வழமை போல சபையினரைக் கலகலப்பாக்கியது. நன்றியுரை வழங்கிய செயலாளரின் பேச்சு இதயபூர்வமாக விளங்கியது. நாகேஸ்வரனின் நாவன்மை மிகவும் பாராட்டுதற்குரியது எனலாம். நட்சத்திரா இசைக்குழுவினரின் இசையில் சபையே மகிழ்ந்தது. தேவகானம் போல மனதை வருடி மகிழ்ச்சியை வழங்கியது. பழைய மாணவர்சங்கம் வெளியிட்ட 'மகுடம்' சஞ்சிகையைப்பற்றி கூறத்தான் வேண்டும். தரமான கட்டுரைகளுடன் அழகான

தொடர்ச்சி 33ஆம் பக்கம்

உங்கள் வீட்டை உயர்ந்த விலைக்கு விற்பதற்கும்

உங்கள் கனவு இல்லத்தை கண்டுபிடித்து மலிவாக வாங்குவதற்கும்

உங்கள் வீட்டை அல்லது நிலக்கீழ் பகுதியை வாடகைக்கு கொடுக்கவும், வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும்,

நீங்கள் அழைக்கவேண்டிய வீடு விற்பனைப் பிரதிநிதி.

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife Galaxy Real Estate Ltd., BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED



Kuna Kunathasan
Sales Representative
DIR : 416-994-3953 kuna.kunathasan@hotmail.com
BUS: 416-284-5555
FAX: 416-284-5727
880 Ellesmere Road, Suite 204, Toronto, ON. M1P 2W6

# ‘வாழும் தமிழ்’ நூல் கண்காட்சி

தற்செயலாக ஒருநாள் ஒரு புத்தகக் கடையில் ஒரு சீரிய சஞ்சிகையின் பெயர் ஒன்றைக் கூறி எத்தனை பிரதிகள் விற்கின்றீர்கள் எனக் கேட்டேன். அவர் சொன்ன பதில் என்னை அதிர்ச்சியில் ஆழ்த்த வில்லை. குமுதம் எத்தனை போகின்றது என்றேன். அதற்கு அவர் கூறிய பதில் அதிர்ச்சியாகவே இருந்தது. சீரிய சஞ்சிகையை விட குமுதம் இரு பிரதிகளே அதிகமாக விற்கப்படுகின்றது. ஆனாலும் இன்று கனேடிய வாசகர்கள் மத்தியில் ரமணிச்சந்திரனே பிரபல்யம் பெற்ற எழுத்தாளர் என்பதை அங்கு நின்ற சில நிமிடங்களில் அறிந்து கொண்டேன். இப்பொழுதெல்லாம் வீட்டில் சிறுவர்கள் நூல்களை வாசிக்கின்றார்களில்லை என்பது பெரும்பாலான பெற்றோர்களின் குறையாக வுள்ளது. அவ்வகையில் புத்தகங்களை வாசிப்பதே பெரிய விடயமாகவுள்ளது.

நான் சிறுவனாக இருந்தபோது எனது ஆசிரியர் யுகபாலசிங்கம் பாடசாலை அசெம்பிளியில் கூறியது ஞாபகத்திற்கு வருகின்றது. நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள். புத்தகங்களை தொடர்ச்சியாக வாசிக்கும் பொழுது உங்களது மனோநிலை யிலும் பல மாற்றங்களை காணலாம். நல்ல நூல்களை ரொரண்ரோவில் காலம் செல்வம் தொடர்ச்சியாக வாழும் தமிழ் புத்தகக் கண்காட்சியினூடாக அறிமுகப்படுத்தி வருகின்றார். அடுத்த வாரம் நடைபெறவுள்ள மற்றுமொரு புத்தகக் கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்படுகின்ற நூல்களில் சிலவற்றை இங்கு அறிமுகப்படுத்துகின்றேன்.

### திரையும் அரங்கும்: கலைவெளியில் ஒரு பயணம்:

\- அ. யேசுராசா




யேசுராசா அவர்கள் 70களில் இலங்கையில் ஒரு சீரிய இலக்கிய பயணத்திற்கு பெரும் பங்காற்றியவர். அலை என்ற சிற்றிதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராக இருந்து பல காத்திரமான படைப்புக்களும் படைப்பாளி களும் வெளிவர காரணமாகவிருந்தவர். சினிமா நாடகம் என பல வித்தியாசமான உலக படைப்பாளிகளை 70களிலேயே இலங்கையில் அறிமுகப்படுத்தியவர். இவரது சினிமா-நாடக கட்டுரைகளின் தொகுப்பே இது. நாம் கண்டுகொள்ளாத திரைப்படங்களின் நல்ல தன்மையை இவ் நூலில் வெளிப்படுத்தியுள்ளார். பிரெக்ட் மற்றும் பாதல் சர்க்கார் போன்ற நாடகமேதைகளின் படைப்புக்களையும் இந் நூலில் பகுப்பாய்வு செய்துள்ளார்.

**- ரதன் -**

### சிறீதரன் கதைகள்

சிறீதரன் அவர்கள் அலையில் பல சிறுகதைகள் எழுதியவர். தற்பொழுது ஒகாயோ பல்கலைக்கழகத்தில் பேராசிரிய ராக பணிபுரிகின்றார். இவரது சிறுகதைகள் இலண்டன் வாழ். சிறந்த ஓவியர் Krishnarajah இன் சிறந்த ஓவியங்களுடன் வெளிவருகின்றது. சிறுகதை நூல்கள் சிறந்த ஓவியங்களுடன் வெளிவருவது அபூர்வம். ஒவ்வொரு சிறுகதையையும் ஓவியர் ஒவ்வொரு அற்புத ஓவியமாக சிறப்பாக படைத்துள்ளார்.

### தற்கொலைக்கு பறக்கும் பனித்துளி. சில்வியா பிளத்தின் கவிதைகள்.

தொடர்ச்சி 25ஆம் பக்கம்

# குக்கூ - திரை விமர்சனம்

ஆனந்த விகடன் ‘வட்டியும் முதலும்’ கட்டுரைத் தொடர் புகழ் பத்திரிகையாளர் ராஜுமுருகன், திரை இயக்குநராக அவதாரம் எடுத்திருக்கும் படம். முதல் படத்திலேயே பார்வையற்றவர்களின் உலகத்தை மிக இயல்பாகப் பதிவு செய்து திரையிலும் முத்திரை பதித்திருக்கிறார் ராஜுமுருகன்!

கதாநாயகன் ‘தமிழ்’ பார்வையற்ற இளைஞன். ரயில்களில் பொருட்களை விற்றும், மேடைக் கச்சேரிகளில் பாட்டுப் பாடியும் நாட்களை நகர்த்துகிறார். கதாநாயகி ‘சுதந்திரக்கொடி’ பார்வையற்ற அழகான பெண். இவர்கள் இருவருக்கும் இடையேயான முதல் சந்திப்பு தமிழ் சினிமா வழக்கப்படி மோதலில் நிகழ்கிறது. அப்போது, தமிழ் நெற்றியில் காயம் ஏற்படும்படி தாக்கிவிடுகிறார் சுதந்திரக்கொடி. பிறகு தவறை உணர்ந்து, காயத்தைத் தொட்டுத்தடவி சிலுவைக் குறியிட்டுக் குணமடைய வேண்டுகிறார். அப்போது அவர் உச்சரிக்கும் வார்த்தைகள், தமிழுக்கு, தனது பால்ய காலத்தில் ‘அன்னை’ உணர்வினை வழங்கிய சிஸ்டரின் தொடர்ச்சி யாகத் தோன்றுகிறது. காதல் பூக்கிறது. ஆனால் சுதந்திரக்கொடி, அவளுக்குப் பாடத்தைச் சொல்லித் தருவதோடு, நேசமுடனும் அணுகும் ஆணை விரும்புகிறார். பார்வையுள்ள ஒரு ஆணை கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்பது அவர் எண்ணம். அது சாத்திய மில்லை என்ற யதார்த்தம் விரைவில் அவருக்குத் தெரிய வருகிறது. இந்நிலையில் தமிழின் காதலை ஏற்றுக்கொள்கிறார். “நாம கல்யாணம் பண்ணிக்கலாமா” என இயல்பாகக் கேட்டும் விடுகிறார்.


காதலர்களுக்குள் அவ்வப்போது ஊடலும் நிகழ்கிறது. காலடி ஓசையைக் கேட்டே சுதந்திரக்கொடியை அடையாளம் காண்கிறார், தமிழ். ஆனால், சுதந்திரக் கொடிக்கு கொஞ்சம் காது மந்தம் என்பதால் அப்படி ஓசையைக் கொண்டே அடையாளம் காண்பது முடியாமல் இருக்கிறது. எனவே, தமிழ் வருவதைத் தான் உணர்ந்துகொள்ள ஒரு ‘வாசனை’ திரவியம் வாங்கிக் கொடுக்கிறாள். ஆனால், தமிழோ விடுதியில் பலருக்கும் அந்த வாசனை திரவி யத்தை வழங்கிவிடுவதால், சுதந்திரக்கொடி அந்த மணத்தினை நுகரும் ஒவ்வொரு முறையும், தமிழென நினைத்து வெவ்வேறு நபர்களிடம் பேசிப்பேசி ஆர்வமிழந்து வெறுமையுணருகிறாள். இந்நிலையில் வரும் தமிழ், “நமக்கு இந்த நாத்த மருந்தெல்லாம் சரிப்படாது” என மேலும் வெறுபேற்ற காதலர்களுக்குள் சண்டை தொடங்குகிறது. கண் பார்வை இல்லையென்றாலும் அழகாக இருக்கிறார் என்பதால், சுதந்திரக்கொடியை கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்னும் ஆசையுடன் இருக்கிறார், நடுத்தர வயது குடும்ப நண்பரான ‘ஷேர் ஆட்டோ’ ஓட்டுநர். சுதந்திரக்கொடியின் வேலைக்காக எம்.எல்.ஏ.வுக்கு பணம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை வரும்போது அப்பணத்தை தானே கொடுத்து உதவுகிறார். அவர் இப்படியொரு திட்டத்துடன் இருக்கிறார் என்பது தெரிந்ததும், அவசர அவசரமாக சுதந்திரக்கொடி கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்கிறார்கள். சுதந்திரக்கொடியின் அண்ணன் அவனது நண்பனுக்கு அவளை கல்யாணம் செய்துகொடுப்பது என முடிவு செய்து, நிச்சயதார்த்தத் தேதியையும் உறுதி செய்கிறான்.



**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

இத்தடங்கல்களையெல்லாம் கடந்து காதலர் இணைவது மீதிக்கதை. தமிழ் பாத்திரத்தில் ‘அட்டகத்தி’ தினேஷ் நடித்துள்ளார். கண் பார்வையற்றவராக நடிப்பதென்பது சாதாரண விஷயமல்ல. ஆனால், தினேஷ் அச்சவால் களை அனாயசமாக கடந்திருக்கிறார். தன்னுடைய உடல் மொழியால் பல இடங்களில் ரசிக்க வைத்திருக்கிறார். சுதந்திரக்கொடி தாக்கியவுடன் அவர் காட்டும் எதிர்வினை, பிறகு தன்னைத் தனியே அழைத்துச்சென்று நெற்றியில் பட்ட காயத்தைத் தொட்டுப் பார்த்து ஜெபம் செய்யும் காட்சியில் தினேஷ் முகம் காட்டும்

தொடர்ச்சி 24ஆம் பக்கம்


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

'ஆரெண்டாலும் கொஞ்சத் தண்ணி செம்பிலை கொண்டு வாங்கோ!' முனியப்பர் கேட்க, யாரோ ஓடிப் போய், பக்கத்து வீட்டில் செம்பு வாங்கி கோவிற் கிணத்திலை தண்ணி எடுத்துக் கொண்டு வந்தார்கள். செம்பை இடதுகையில் தாங்கிப் பிடித்த முனியப்பர், செம்பை வலது கையால் தொட்டுக்கொண்டு ஏதேதோ மந்திரங்களை மீண்டும் உச்சரித்து வலது உள்ளங்கையில் தண்ணீரை ஊற்றி, மீண்டும் ஏதேதோ முணுமுணத்துவிட்டு, கந்தசாமியின் முகத்திலை தெளித்தார். மூன்று தடவைகள் அவர் அப்படிச் செய்ததும், கந்தசாமி கண்களைத் திறந்தான்.

முனியப்பரின் முகம் கொஞ்சம் பெருமையைக் காட்டியது.

கண்களைத் திறந்தவன், மலங்க மலங்கப் பார்த்தான். பின்னர் வண்டிலின் ஆசனத்தில் நிமிர்ந்து அமர்ந்தான்.

கூட்டத்துள் நின்ற யாரோ ஒருவர், 'முனியப்பர் ஐயர் முழிக்கப்பண்ணிட்டார்' என்று கூறுவதைக் கேட்டு முனியப்பருக்கு பெருமையே வந்து விட்டது.

'தம்பி! ஒண்டுமில்லை. பயப்படாமல் கோயிலுக்கை போய், கோயில் கிணத்திலை தண்ணியள்ளி, தலையிலை வாத்து முழுகு. பிறகு ஈரத்துண்டோடை கோயில் வாசலிலை நிண்டு பிள்ளையாரைக் கும்பிட்டிட்டு வா' என்று உசாராகக் கூறிய முனியப்பர், 'ஆரெண்டாலும் இரண்டு பேர், ராத்திரி மச்சம் தின்னாதவையள் துணைக்குப் போங்கோ' என்று கூறினார்.

'பயப்படாதையுங்கோ, இப்ப ஒண்டுமில்லை' எனக் கூறிக் கந்தசாமியோடு செல்பவர்களுக்கான தைரியத்தையும் கொடுத்தார் முனியப்பர்.

கந்தசாமி இருவரோடு கோயிற் கிணற்றடிக்குப் போனான். நடையில் பெரிதாக வித்தியாசம் ஒண்டுமில்லை.

கூட்டத்துக்குள் இருந்து, 'எனக்குத் தெரியும், முனியப்பர் மாமா வந்திட்டார். இனிப் பயமில்லை எண்டு' எனக் கூறியது முனியப்பரின் காதிலும் விழ, முனியப்பர் நிமிர்ந்து நடந்து வந்தார்.

'அதிலை கிடந்திட்டு காத்தாலை வீட்டை போஎண்டனான், இந்தப் பொடியன் கேக்க மாட்டேனென்டிட்டுது. இப்ப பாரேன் அவலத்தை' விடயம் கேட்டு கோயிலடிக்கு ஓடிவந்த காசியம்மான் பரிதவித்துக் கொண்டிருந்தார்.

'முனியப்பர் என்ன மாதிரி?' காசியம்மான் கேட்க,

'அது.... தெரியாதே, மற்றக்கன்னைதான் விளையாடியிருக்குது. பொடியன் காலை நிலத்திலை வைக்கேல்லைப் போலை. பெரிசாய் ஒண்டும் நடக்கேல்லை எண்டுதான் தெரியுது. எதுக்கும் இராவைக்கு மந்திரிச்சுப் பாத்தால்தான் தெரியும்.' முனியப்பர்.

'அப்ப இப்ப பெடியனை குளிச்சுக் கும்பிட்டிட்டு வீட்டை போகச் சொல்லுறியளே'

'ஓமோம். இப்ப செய்ய வேண்டியதுகளை எல்லாம் செய்திட்டேன். பெரிசாய் ஒண்டுமில்லை. இராவைக்குப் பாத்திட்டு ஒரு மூண்டு நாளுக்கு வேப்பிலை அடிச்சு பூசையும் செய்தால் எல்லாம் சரியாயிடும். முனியின்ரை சில்லறைச் சேட்டைதானே' முனியப்பரிடம் மேதாவித்தனம் தெரிந்தது.

'அப்ப காசியர், நீர் ஒருக்கா நிண்டு கந்தசாமியை வீட்டை கூட்டிக் கொண்டுபோம். இவள் பிள்ளையும் குழந்தையை வீட்டிலை விட்டிட்டு நிக்கிறாள்போலை. நானும் தோட்டத்துக்குப் போகவேணும். நல்லாய்ச் சுணங்கிட்டுது. வெய்யிலேறினால் தண்ணி கட்டேலாது.'

'ஓ..ஓ. நான் கவனிக்கிறேன். நீ நட' என்று வைரவி மாமாவை காசியம்மான் தோட்டத்திற்கு அனுப்பி வைத்தார்.

'அப்ப முனியப்பர், வில்லங்கம் ஒண்டுமில்லை எண்டு சொல்லுறீர்?' காசியம்மான் மீண்டும் கேட்க, 'அதொண்டுமில்லை, இப்ப வீட்டை போனதும் வீட்டைச் சுத்தி திருநீறை தூவிவிட. ஒண்டும் வீட்டுப் பக்கம் வராது. அதுக்கெல்லாம் நான் செய்துவிடுவேன். என்ன தெரியாதே, பெரியவரையும் நேருக்கு நேராய் பாத்திட்டானெல்லே. அந்த அதைப்பு இருக்கும். ஒரு மூண்டு நாலு நாளுக்கு காச்சல் சுடும். பேந்து தன்னாலை ஆறியிடும்..' முனியப்பர் சிரத்தையில்லாதவர் போலக் கூறினார். 'நான் உதுகளைப்போல் எத்தனையைப் பார்த்தனான்' என்பது போல இருந்தது, அவரின் பதில்.

கந்தசாமி கோயில் கிணற்றில் குளித்து, பிள்ளையார் கோவிலின் முன்னால் ஈரத்தோடு வந்து பிள்ளையாரை வணங்கினான். கோயில் வாசலில் இருந்த தட்டில் இருந்து திருநீற்றை எடுத்து, நெற்றியில் பூசினான். வாசலில் விழுந்து பிள்ளையாரை வணங்கி விட்டு திரும்பி வீட்டுக்குச் சென்றான். கூட உதவிக்கு நின்றவர்கள் இரண்டடி விட்டுத்தான் நின்றார்கள்.

காசியம்மான், முனியப்பரையும் கூட்டிக் கொண்டு கந்தசாமியின் வீட்டுக்குப் போனார், மீதிச் சடங்குகளையும் செய்து முடிப்பதற்காக.

நான் தரையில் இருந்தேன். எனக்கு முன் பிரெண்டா அமர்ந்திருந்தார். எங்கள் இருவருக்கும் இடையில் 50 வருடத்துக்கு முன்னர் டேப்பில் பதிவுசெய்யப்பட்டிருந்த கதைசொல்லியின் குரல் கதையை சொன்னது. அவர் சொன்னதை அப்படியே கையெழுத்தில் எழுதிய தாள்கள் பழுப்பாக எழுத்து அழியாமல் எனக்கு முன் ஒன்றரை அடி உயரத்தில் அடுக்கப்பட்டு இருந்தன. பிரெண்டா அண்ணன்மார் கதையை ஆங்கிலத்திலும் தமிழிலும் இரண்டு பாகங்களாக எழுதிய நூல்கள், இதே கதையை படக் கதையாக மாற்றி எழுதிய 16 புத்தகங்கள் ஆகியனவும் என் முன்னே அடுக்கப்பட்டிருந்தன. ஒளிப்படங்களாக மாற்றப்பட்ட 16 படக் கதைகள் ஐபாட்டில் ஓடின. இடது பக்கம் திருப்பினால் சுடுநீரும், வலது பக்கம் திருப்பினால் தண்ணீரும் குழாயில் வருவதுபோல ஐபாட்டில் ஓடும் ஒளிப்படத்தின் கதைமாந்தர்கள் தமிழிலும், வேண்டும்போது ஆங்கிலத்திலும் பேசினர்.

நான் 50 வருடத்திற்கு முந்திய தாள்களையும் எழுத்தையும் தொட்டுப் பார்த்து 'இவை வரவேண்டிய இடத்துக்கு வந்திருக்கின்றன. இவற்றை எப்படியும் பாதுகாத்தாக வேண்டும்' என்றேன். பிரெண்டா 'இந்த தாள்களை தொட்டவர்கள் மூன்றுபேர். இதை எழுதியவர். நான். என் கணவர். இப்போது நீங்கள், நாலாவது ஆள்' என்றார். 'இதையெல்லாம் செய்து முடிப்பதற்கு எத்தனை பணம் செலவழித்தீர்கள்?' அவர் சொன்னார் 'ஒரு மில்லியன் டொலர்.' என்னால் நம்பமுடியவில்லை. பேச்சு நின்றுவிட்டது. எனக்கு முன்னுக்கு உட்கார்ந்திருக்கும் பெண் மானுடவியல் பேராசிரியர் பதவியை 1983ம் ஆண்டு உதறிவிட்டு கடந்த 30 ஆண்டுகளாக எழுத்திலும், ஒலியிலும், ஓவியத்திலும், ஒளியிலும் இந்தக் கதையை நிரந்தரமாக நிறுவியிருக்கிறார். 'எதற்காக வேலையை விட்டீர்கள்?' என்று கேட்டேன்.

'50 வருடத்துக்கு முன்னர் அந்தச் சிறிய கிராமத்தில் வாழ்ந்ததை நான் யோசித்துப் பார்த்தேன். அந்த எளிய மக்கள் காட்டிய அன்பும் ஆதரவும் என்னால் என்றென்றைக்கும் மறக்கமுடியாதவை. அவர்களுடைய கலை 500 வருட பாரம்பரியம் கொண்டது. நான் அவர்களுக்கு திருப்பி என்ன செய்தேன்? என் குற்ற உணர்வு என்னை வதைத்தது. அண்ணன்மார் கதையை எப்படியும் அழியாமல் எதிர்காலச் சந்ததியினருக்கும் கடத்தவேண்டும் என்று தோன்றியது.' 'எப்படி முடிவெடுத்தீர்கள்? திடீரென்றா?'

'திடீரென்றுதான். அந்தக் கிராமத்தில் ஒரு கதை சொல்வார்கள். ஒரு கிழவன் சாக்குப் பையை சுமந்துகொண்டு நடந்தான். கனமாக இருந்தது. திறந்து பார்த்தால் ஒரு கல் இருந்தது. அதை எறிந்துவிட்டு தொடர்ந்தான். மேலும் சிறிது தூரத்தில் மறுபடியும் பாரம் அழுத்தியது. மீண்டும் சாக்கை திறந்து பார்த்தான். இன்னொரு கல். அதையும் எடுத்து வீசிவிட்டு மறுபடியும் நடந்தான். இன்னொரு கல். இன்னொரு கல். இப்படி எறிய எறிய கல் முடியவே இல்லை. கடைசிக் கல்லை எடுத்து வீசிவிட்டு ஒரு மரத்தடியில் ஆறினான். புறப்படும்போது தற்செயலாக சாக்கை திறந்து பார்த்தவன் திடுக்கிட்டான். இன்னொரு கல். அப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது. எத்தனை கல்லை அவன் வீசினாலும் கல் அவனை விடுவதாயில்லை. நான் அண்ணன்மார் கதையை என் மனத்திலிருந்து எவ்வளவுதான் விரட்டினாலும் அது என்னை விடுவதாக இல்லை. அப்பொழுதுதான் முடிவெடுத்தேன் அன்றே பணி விலகும் கடிதத்தை கொடுத்தேன்.'

'இனி என்ன செய்வதாகத் தீர்மானம்?' '500 வருடங்கள் வாய்மொழி மூலம் பரம்பரை பரம்பரையாக ஒரு கிராமத்தில் தொடர்ந்த கதை சினிமா மற்றும் புதுத் தொழில் நுட்பம் வந்ததும் நின்றுவிட்டது. அந்த இரண்டு கதை சொல்லிகளுக்கும் எழுதப் படிக்கத் தெரியாது. இன்று அவர்கள் இல்லை. அவர்களுடைய குரல் என்னிடம் இருக்கிறது. கதையும் இருக்கிறது. இதை உலகம் முழுக்க பரப்பவேண்டும். எண்மிய தொழில் நுட்பத்தால் இன்று இதுவெல்லாம் சாத்தியமாகிவிட்டது. மக்கள் மனதில் இந்த அற்புதமான கதை என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டும்.' 8400 மைல்களுக்கப்பால் உள்ள ஒரு சின்னக் கிராமத்தின் வாய்மொழிக் கலைச் செல்வத்தை உலகமுள்ளவரை பாதுகாக்கவேண்டும் என்பதில் அசைக்கமுடியாத உறுதியுடன் இருந்தார் இந்த ரொறொன்ரோப் பெண்.

20 வயது இளம் பெண்ணாக இவர் மண்குதிரையை பிடித்துக்கொண்டு நின்ற கறுப்பு வெள்ளைப் படத்தை பார்த்தேன். கறுப்பு தலைமுடி. வெள்ளைச் சேலை. பழுப்பு நிற பிளவுஸ். தலைமுடி வாரி இழுத்துப் பின்னி, பொட்டு வைத்துக்கொண்டு சற்றே கீழே பார்த்த கண்களுடன் நிற்கும் பெண். அந்தக் கண்களில் அளவில்லாத ஆர்வமும், துடிப்பும், நம்பிக்கையின் ஒளியும் இருந்தன. எனக்கு முன்னால் இருந்தவரைப் பார்த்தேன். முன்பு சிரிப்பு காணப்பட்ட இடத்திலெல்லாம் இப்போது சுருக்கம் இருந்தது. அங்கங்கே நரைத்துவிட்ட தலைமுடி மேலே இழுத்துக் கட்டப்பட்டிருந்தது. கறுப்பு கால்சட்டை, பழுப்பு மேலங்கி, சாம்பல் நிற கழுத்துச் சால்வை. ஆனால் அந்தக் கண்கள். கண்கள். அவற்றிலிருந்து வெளிப்பட்ட ஒளி மாறவே இல்லை.

Tax Related Services Income Tax & HST

Unfiled returns from 2005
Filing Under Voluntary Disclosure Program (VDP)
Tax Appeals
SR & ED Investment Tax Credits
Individual and Corporate Taxation

Company Incorporations
Business Registration
Business Plans
Emergency Business Loans - upto $ 5 M

GIC - GIA
GIC - The Bank Provides
GIA - Is available with the Insurance Company (agent comes to your house)
The interest rate for the GIA is higher than the GIC and they are both guarenteed
THE INCOME TAX CALCULATION FOR SENIORS IS BETTER FOR THE GIA

Phone: Siva (416) 901-0929 Yoga 416-492-7957
www.sivassolutions.ca

Email: siva@sivassolutions.ca
Sivas Solutions
708-419 Markham Rd Toronto M1J 3E1

# சூரியனற்ற காலங்கள்

"நான் அக்காலங்களில் சூரியனைக் காண வில்லை. எனது ஞாபகத்தில் முகில் கூட்டங்கள் நிரம்பிய ஒளியற்ற பகற்பொழுதே நினைவில் உள்ளது" என சிலியின் இருண்ட காலமான Augusto Pinochet இன் ஆட்சிக் காலத்தை நினைவு கூறுகின்றார் Pablo Larraín. Augusto Pinochet ஆட்சியைக் கைப்பற்றியபோது பப்லோ லரைனுக்கு மூன்று வயது.

17 வருடங்கள் கடுங்கோல் ஆட்சிபுரிந்த மிக மோசமான இராணுவ சர்வாதிகாரி ஒகஸ்ரோ பினோசெட். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வர், சோசலிச கட்சியைச் சேர்ந்தவரும் வைத்தியக் கலாநிதியுமான Salvador Allende. இவர் 1973ம் ஆண்டு ஆவணி 23ம் நாள் ஒகஸ்ரோ பினோசெட் வை புதிய இராணுவ தளபதியாக நியமிக்கின்றார். இது நடைபெற்று ஒரு மாத காலம் முடியமுன்னரே புரட்டாதி 11ம் நாள் 1973ம் ஆண்டு இராணுவ சதி மூலம் ஆட்சியைக் கைப்பற்றுகின்றார் ஒகஸ்ரோ பினோசெட். இதன் பின்னர் அடுத்த 17 ஆண்டுகள் சிலி கடுமையான மனித உரிமை மீறல்களையும் அட்டூழியங்களையும் சந்திக்கின்றது. சுமார் 3200 அரசியல்வாதிகள் கொல்லப்பட்டனர். குழந்தைகள் சிறுவர்கள் பெண்கள் உட்பட 110,000 பேரளவில் சித்திர வதைக்குள்ளாக்கப்பட்டனர். படுகொலை செய்யப்பட்டனர். சிக்காகோ பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றிருந்த சிலி நாட்டு பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைப் பிரகாரம் பல பொருளாதார மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. திறந்த சந்தைப் பொருளாதார முறை அமல்படுத்தப்பட்டது. தொழிற்சங்கங்கள் கட்டுப்படுத்தப்பட்டன. அரச நிறுவனங்கள் தனியார் மயமாக்கப் பட்டன. இவரது ஆட்சிக்கு பக்கபலமாக அமெரிக்க உளவு நிறுவனம் இருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. தொடர்ச்சியான மக்கள் எதிர்ப்பு போன்றவற்றின் விளைவாக 1988ல் ஒகஸ்ரோ பினோசெட் ஒரு சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தினார். இதில் 55.99 வீதமானோர் இவர் ஜனாதிபதியாக தொடர்வதை எதிர்ப்பதாக தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து 1990ல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற Patricio Aylwin இடம் நாட்டைக் கையளித்து விட்டு அதிபர் பதவியைத் துறக்கின்றார். இவர் இத் தேர்தலில் போட்டியிடவுமில்லை. இதன் பின்னரும் 1998ம் ஆண்டுவரை இராணுவத் தளபதியாக தொடர்ந்து பதவி வகிக்கின்றார். இராணுவத் தளபதி பதவியைத் துறந்து சில மாதங்களில் இங்கிலாந்து சென்றபோது இவர் ஆட்சி செய்தபோது செய்த மனித உரிமை மீறல்களுக்காக கைது செய்யப்படுகின்றார். பின்னர் சுகயீனத்தை காரணமாக காட்டி விடுதலை செய்யப்படுகின்றார். 2000ம் ஆண்டில் சிலிக்குத் திரும்பிய இவரை 2004ம் ஆண்டு சிலி நீதிபதி ஒருவர் இவர் மீது வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளலாம். உடல் நலன் நன்றாக உள்ளது என தீர்ப்பளிக்கின்றார். இதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்படுகின்றார். இவர் இறக்கும் பொழுது இவர் மீது 300க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையிலிருந்தன. இன்றுவரை இவரது ஆட்சியில் காணாமல் போனோரில் 3000 பேர் எங்கிருக்கின்றார்கள், என்ன ஆனார்கள் என்பது தெரியாது. இவரது ஆட்சியை ஒத்த ஆட்சியொன்றை மகிந்த இராஜபக்ச நடத்திக் கொண்டிருக்கின்றார்.


இன்றைய சிலி நாட்டு மக்கள் இரு பிரிவி-னராக உள்ளனர். ஒரு பிரிவினர் சிலியின் கொடுங்கோல் இராணுவ அதிபர் ஒகஸ்ரோ பினோசெட் காலத்தில் வாழ்ந்தோர். மற்றைய பகுதியினர் அக்காலத்தில் வாழாதோர். நான் ஒரு அரசியல்வாதியல்ல, ஒரு சமூக போராளியுமல்ல. ஆனால் "நான் அக்கால கட்டத்தில் பிறந்து மக்களின் அவலங்களை கண்கூடாக கண்டு உணர்ந்தவன். எனவே தான் எனது படங்கள் அக்காலகட்டத்தை பிரதிபலிக்கின்றன." என்கிறார் பப்லோ லறைன். இவர் மொத்தமாக நான்கு படங்களை இதுவரை இயக்கியுள்ளார். அவற்றுள் மூன்று படங்கள் ஒகஸ்ரோ பினோ செட்டின் ஆட்சிக் காலத்தை மையமாகக் கொண்டுள்ளன. இது துன்பியலின் மூன்றன் தொகுதியாகும். இதுவரை ஒரு குறிப்பிட்ட ஆட்சியை மையமாகக் கொண்ட மூன்றன் தொகுதிகள் திரைப்படமாகியது வெகு குறைவேயாகும். இப்படங்களை இயக்கியதன் மூலம் பப்லோ லறைன் உலகின் குறிப்பிடத்தக்க அரசியல் திரைப்பட இயக்குனராக கருதப்படுகின்றார்.

"நான் என்னை நோக்கி பல கேள்விகள் கேட்டுக் கொண்டேன். எனது நாட்டிற்கு என்ன நடந்தது? எனக்கு அரசியல் அபிப்பிரா யம் உண்டு. அரசியல் அடையாளமும் உண்டு" என ஒரு பேட்டியில் பப்லோ லறைன் குறிப்பிடுகின்றார். இவரது கருத்தின் வெளிப்பாட்டை இவரது படங்களில் காணலாம்.

மூன்றன் தொகுதியின் முதலாவது படம் ஒகஸ்ரோ பினோசெட்டின் ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தையும், இரண்டாவது படம் 78-79 ஆண்டுகள் ஆட்சிக்காலத்தின் நடுப்பகுதியை யும் மூன்றாவது படம் இறுதிப் பகுதியையும் பதிவுசெய்துள்ளது. இம்மூன்று படங்களுக் குள்ளும் ஒன்றுக்கொன்று ஒரு உரையாடலைக் கொண்டுள்ளது. மூன்று படங்களின் பாத்திரங்களும் அரசியல் சூழல் தங்களை பாதிக்காது என நினைப்பினும் அவர்களை அகத்திலும் புறத்திலும் அதிகாரமும் ஆட்சியுமே இயக்கின. இதனை இவரது மூன்று படங்களிலும் மிகத் தெளிவாகக் காணலாம்.

## Tony Manero

இது இவரது இரண்டாவது படம். ஒகஸ்ரோ பினோசெட்டின் ஆட்சிக் காலத்தின் ஆரம்பப் பகுதியில் நடைபெறுகின்றது. ரொனி மனீரோ என்ற பாத்திரம் Saturday Night Fever 1977ல் வெளிவந்த ஹொலிவூட் திரைப்படம். இது ஒரு இசை நடனப் படம். இது நியு யோர்க் சஞ்சிகையில் நிக் கோஹ்னின் Tribal Rites of the New Saturday Night என்ற ஆக்கத்தை மையமாகக் கொண்டது. இதில் ரொனி மனீரோவாக நடித்திருப்பவர் ஜோன் ரவோல்ரா. அமெரிக்காவில் பெரும் வரவேற்பை பெற்றது இப்படம். டிஸ்கோ இசை பிரபல்யம் பெற இப்படமும் ஒரு காரணமாகவிருந்தது. இப்படத்தில் நடித்தமைக்காக ஜோன் ரவோல்ரா ஒஸ்காரின் சிறந்த நடிகர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டார்.




ஜோன் ரவோல்ராவின் ரொனி மனீரோ பாத்திரத்திற்கு உலகெங்கும் பல லட்சக் கணக்கான ரசிகர்கள். இவர்களில் ஒருவரே பப்லோ லறைனின் கதாநாயகன். ரால் க்கு 52 வயது. உள்ளூர் தொலைக்காட்சி ஒன்றில் நடைபெறும் நடனப் போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்பது ராலின் ஆசை. இவர் தன்னை ஒரு ரொனி மனீரோவாகவே மாற்ற முயற்சிக்கின்றார். இவருக்கு தொடர்ச்சியாக தொந்தரவாக இருக்கும் இவரது காதலி, இவருக்கு மேல் விருப்பம் கொண்ட காதலி யின் மகள், இவர் மேல் நாட்டம் கொண்ட உள்ளூர் நடனகத்தின் முதிய பெண்மணி இவர்கள் அனைவரையும் விட இவருக்கு நடனத்தின் மேல்தான் நாட்டம், காதல் ஏன் வெறி என்று கூடச் சொல்லலாம்.

இச்சூழலைச் சுற்றி ஒகஸ்ரோ பினோசெட்டின் இராணுவம். தப்பித் தவறி அரசியல் கதைப்பினும் தலை பறக்கும். படத்தில் அவ்வப்போது தலைகாட்டும் இராணுவ

தூறல்

**வானரன்**

வாகனங்களும், இராணுவ வாகனங்களைக் கண்டவுடன் மக்கள் ஒளிந்து கொள்ளும் காட்சிகளும் புறச்சூழலின் கொடூரத்தை வெளிப்படுத்துகின்றன.

பப்லோ லறைன் இவ் உலகத்தை உலகிற்கு காட்டியுள்ளார். சோசலிச அரசை வீழ்த்திய அமெரிக்காவும் அதனது உளவுப் படையும் சிலிக்குள் உலகமயமாதல் என்பதன் பெயரில் தங்களது கலாச்சாரத்தை திணித்தார்கள். அதன் விளைவை இப் படத்தினூடாக வெகு இயல்பாக பப்லோ லறைன் படைத்துள்ளார். படத்தின் நாயகன் சிலியின் புதிய கொள்கையினால் பாதிக்கப்பட்டவர். இவரைச் சுற்றி கொடூர அரசையும் உலகமயமாதலையும் இயக்குனர் அமைத்துள்ளார். இல்லை இயல்பானதும் அதுவேதான். இதனால் தான் இயக்குனர் ராலை ஒரு உளவியல் பாதிப்புக்குள்ளான-வராக (psychopathic) படைத்துள்ளார். இது புறச்சூழலின் கொடூரத்தால் ஏற்பட்டது என்பதுதான் இயக்குனரின் வாதமாகவுள்ளது.

ராலின் பாத்திரத்தின் பன்முகத் தன்மையை இயக்குனர் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். ராலுக்குள்ள பாலியல் தேடல்கள், பாலியல் இயலாமை, வெறித்தனமாக ஒருவரது பாணியை பின்பற்றல், சுயத்தை இழத்தல் என ராலின் ஒவ்வொரு முகங்களையும் வெளிப்படுத்தியுள்ளார். இவற்றில் சில குறிப்பாக சுயத்தை இழத்தல், ஒருவரை பின்பற்றல் (அமெரிக்கா) போன்றன ஒகஸ்ரோ பினோசெட்டின் ஆட்சிக்காலத்தல் சிலிக்கு ஏற்பட்டதையும் படம் வெளிவந்த காலத்தில் சிலி அதனை தொடர்வதையும் சுட்டி நிற்கின்றது.

இவரது படங்களில் ஒளி ஒரு பிரதான பாத்திரமாக வெளிப்படும். சூழலின் தன்மையை குணத்தை ஒளி வெளிப்படுத்தும். இப் படத்தின் காட்சிகள் முழுவதும் குறைந்த ஒளியிலும் முகில் கூட்டம் நிறைந்த வெளிச்சம் குறைவான பகல் பொழுது களிலும் படமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக ஒளியை பிரதானமாக சூழலின் தாக்கத்தை வெளிப்படுத்த பயன்படுத்தும் இயக்குனர் களுள் எமக்கு மிகவும் அறிமுகமான பிரசன்னா விதானகே குறிப்பிடத்தக்கவர்.

இப்படத்தில் ராலாக அல்பிரடோ கஸ்ரோ மிகவும் சிறப்பாக தனது நடிப்பை

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

**COMMERCIAL UNIT FOR Lease /SALE**

Main floor / Second floor commercial space for Lease / sale. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough.

**Pl. Call: 416.315.9397**

# குதிரையும் கழுதையும்

குதிரை ஒன்று தனது எஜமானின் குதிரை லாயத்தில் வாழ்ந்து வந்தது. அது ஓட்டப்போட்டிகளுக்காக வளர்க்கப்பட்டது. தினமும் ஓடிப்பழகியவுடன் மறுபடியும் லாயத்தில் திரும்ப கட்டிவைக்கப்படும். இதனால் அது வெளியே செல்வது குறைவு.

ஒரு நாள் அது ஓட்டப்போட்டிக்கு சென்றபோது அதேநேரம் வேறு பண்ணை மிருகக்காட்சி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனால் குதிரை வைக்கப்பட்ட கூண்டிற்கு பக்கத்து கூண்டில் கழுதை ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

ஓட்டப்போட்டியும் பண்ணை மிருகக்காட்சியும் நடைபெற முன்னர் குதிரையும் கழுதையும் தங்களைப்பற்றி பேசத் தொடங்கின.

குதிரை, தான் ஓட்டப்போட்டிகளில் பங்கு பெறுவது பற்றி கூறியது. கழுதை, தான் பண்ணையில் வாழும் வாழ்க்கையை பற்றிக் கூறியது. தான் வயலில் சிலவேளை வேலை செய்வதாகவும் சிலநேரம் பொருட்களை சுமப்பதாகவும் கூறியது.


நானோ ஓய்வில்லாமல் ஓடவேண்டும். வடிவாக ஓடினால் சிலவேளை ஒரு சக்கரைக்கட்டி கிடைக்கும். வெளியே செல்வதும் குறைவு. 5 மணி நேரம் வண்டியில் நெருக்கமாக மற்ற குதிரைகளுடன் இருந்து பிரயாணம் செய்ய வேண்டும்.

குதிரை கூறியது கழுதைக்கு அதிசயமாக இருந்தது. சுகமாக ஓடும் வாழ்க்கையையா கடினம் எனக் குதிரை கூறியது? என்று கழுதைக்கு தோன்றியது. அது 'என்னுடைய வாழ்க்கையை வாழ விரும்புகிறீங்களா?" எனக் குதிரையைக் கேட்டது.

இதெல்லாம் கேட்ட மற்றொரு குதிரை, "இந்தக் கழுதைகளுடன் பேச்சு வேண்டாம்" என்றது. வேறொரு கழுதை "இந்தக் குதிரைகளே இப்படித்தான். சும்மா இருக்கிறவர்களுக்கு எங்களுடைய கஷ்டங்கள் தெரியாது" என்றது. குதிரைக்கும் கழுதைக்கும் அவர்களுக்குள் இருந்த கதையை சண்டையாக பெருப்பிக்க விரும்பவில்லை. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க முடியாமல் இரண்டுமே இருந்தன.

குதிரையோ, "நீங்கள் கஷ்டப்படுவதெல்லாம் சரி, ஆனாலும் நீங்கள் வசதியாக வாழுகிறீர்கள். நாள் முழுவதும் வெளியே இருப்பீர்கள். உணவும் கிடைக்கும். ஆக சுமப்பதுதான் கஷ்டமானவேலை. நாங்கள் ஓடி ஓடி துரத்தப்பட்டுக்கொண்டிருப்போம். சிலருக்கு 'காலும் உடைந்து விடும், இப்படி நடந்தால் இனித்தேவையில்லை என்று கொன்று விடுவார்கள்" என்றது.

இப்படி செல்லுகையில் குதிரைகளது ஓட்டப்போட்டிக்கு நேரம் வந்தது. கழுதைகள் குதிரைகளின் ஓட்டத்தை பார்த்தன. குதிரைகளது ஓட்டப்போட்டி முடிந்த பின்பு கழுதைகள் சிறு பிள்ளைகளை சுமந்து கொண்டு செல்லச் சென்றன. இதை குதிரைகள் பார்த்தன. இதெல்லாம் முடிந்து வீடு திரும்ப முன்னர் இருவரும் மறுபடியும் சந்தித்தன.



"கடைசியில், உன் அபிப்பிராயம் என்ன?" என கழுதை குதிரையைக் கேட்டது.

"எங்கள் இருவருக்கும் பிரச்சினை வெவ்வேறு தான். ஆனால் எங்கள் இருவருக்கும் வரும் பிரச்சினைகள் மனிதர்களால் எமக்கு தரப்பட்டவை. எனவே நாம் சண்டைபிடிப்பதில் பிரயோசனமில்லை" என்றது குதிரை.

"அது சரிதான்" என்றது கழுதை.

**நீதி: இக்கரைக்கு அக்கரை பச்சை**



**ஞா. ஆரணி**
அகவை 15

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# மகுடம்...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

வடிவமைப்புடன் மலர்ந்த மல்லிகை மொட்டு என்றுதான் கூறவேண்டும்.

மகுடம் நிகழ்ச்சிகளை நோக்கும் போது சிலவற்றினை கூறித்தான் ஆகவேண்டும். நூற்றுக்கு மேற்பட்ட மாணவிகளின் திறமைக்கு இடமளித்து ஊக்குவித்தமை பாராட்டப்பட வேண்டும். மாணவிகளின் நிகழ்ச்சிகள் போட்டி நிகழ்ச்சிகள் போல் அமைந்தது என சில இரசிகர்கள் குறிப்பிட்டார்கள். எல்லாமே தொடர்ந்து நடன நிகழ்ச்சிகளாக அமைந்ததை சிலர் விரும்பிவில்லை. நிகழ்ச்சிகளில் யாவும் தரமானவை என்பதை மறுப்பதற்கில்லை. சில நிகழ்ச்சிகளில் சில பாத்திரங்கள் களைப்பை போக்கும் வண்ணம் அன்றைய இரவு அமைந்தது. கொக்குவில் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் தனது சிறப்பான செயற்பாடுகளின் வெளிப்பாடாக நிகழ்த்திய 'மகுடம்' மனம் கவர்ந்த கலைப்படைப்பு என்பது தான் உண்மையாகும். மீண்டும் மகுடம்





பொருத்தமில்லாதது போல் இருந்தாலும் முழுமையாகப் பார்க்கின்றபோது ஒப்பனையும் நடன அமைப்பும் சிறப்பாகவே அமைந்திருந்தன. வாழ்க்கையின் துன்பங்களை மறந்து, வேலைப்பழுவின் குழுவினர் தமது செயல்திறமையை காட்டத்தவறவில்லை.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# Education


## Review Tutorials 14 -6

### ➤ CHEMISTRY 11

An aqueous solution contains $XO_3^{2-}$ ions form a precipitate with aqueous $Ca^{2+}$ ions when 25mL of a solution aqueous ions with a concentration 0.78mol/L is added. The mass of the precipitate formed is 1.96g. Determine the atomic mass of X and indentify the element.

### ➤ CHEMISTRY 12

voltaic cell is constructed from two half-cells as illustrated below.




$Ni^{2+} + 2e \rightarrow Ni$ E° = - 0.24V

$Ag^{+} + e \rightarrow Ag$ E° = + 0.8V

(a) Deduce the equation for the spontaneous reaction occurring in this cell.
(b) Calculate the standard potential for this cell.

### ➤ PHYSICS 12

A solid iron ball of mass 900 kg is used on a building site. The ball is suspended by a rope from a crane. The distance from the point of suspension to the centre of mass of the ball is 15 m.

(a) Calculate the tension in the rope when the ball hangs vertical and stationary.
(b) The ball is pulled back 20° from the vertical and then released.
(i) Calculate the speed of the ball just before impact.
(ii) Calculate the tension in the rope just before impact


(c) If the ball is brought to rest in 0.2 s., determine the maximum force $F_{max}$ exerted by the ball on the wall.

### ➤ IB/ 12 BIOLOGY

(i) Compare the hydrogen–bonding patterns characteristics of the α- helix and β- pleated sheet.
(ii) What type of RNA has the shortest lifetime in cells.
(iii) Describe the differences between mRNA, tRNA and rRNA.

## Answer Key : 14-5

### PHYSICS Gr 12




$F_k = \mu_k . F_N$ ; $F_N = F_g\cos30°$ ; $F_s = F_g\sin30°$

5 kg object moving downwards
5g sin 30 – (0.15) 5gcos30° -T = 5a .........(1)
2 kg object moving upwards along the inclined surface

T- 2g sin 30 – (0.15) 2gcos30° = 2a .........(2)

Solve for T and a

### PHYSICS 12

x and y components of impulses are Jx and Jy

$J_x = P_{f(x)} - P_{i(x)} = m(v_{f(x)} - v_{i(x)})$
$= 0.16 [(60\cos25) - (40)] =$ 15.1 kg.m/s

$J_y = P_{f(y)} - P_{i(y)} = m(v_{f(y)} - v_{i(y)})$
$= 0.16 [(60\sin25) - 0] =$ 4.057 kg.m/s

Magnitude of impulse $J = \sqrt{J_{(x)}^2 + J_{(y)}^2}$ = 15.63kg/m/s

$F = \frac{J}{\Delta t} = \frac{15.63}{0.0012} = 1.3x10^4$ N

angle of impulse , tan ß= 4.057/15.1 = 0.2687; ß= 15°bomber plane...(ans 30 ° to the horizontal)

### CHEMISTRY 12

$\Delta H$ = -10kJ/mol ; $E_a$ = 40kJ/mol

### CHEMISTRY 12

(A) First ionization energies of Li<B< Be
Li- $1S^2 2S^1$ Be- $1S^2 2S^2$ B- $1S^2 2S^2 2p^1$
Atomic radius Li> Be> B; therefore ionization energies increases with the decrease of radius , However , Be > B Removal of an electron from $S^2$ orbital is harder compared to that of $2P^1$

(B) Among the increases of successive ionization energies there is a sharp increase in $6^{th}$ ionization energy. Therefore this element has 5 electrons in the valence orbital. Therefore Group V or Group 15.

(C) (i) $NO_3^-$ (ii) $NO_2^-$ (iii) $SO_4^{2-}$ (iv) $CO_3^{2-}$ (v) $I_3^-$ (vi) $CH_3^+$
(i) trigonal (ii) bent (iii) tetrahedral(iv) trigonal (v) linear (vi) trigonal

### BIOLOGY 12

- Cancer cells rapidly dividing and abnormally reproducing.
- Cell division occurs followed by DNA replication.
- Chemical analogues that mimic the structure of nucleotides will prevent DNA polymerase and therefore the DNA replication will be prevented.
- Thus cancer cells won't be able to reproduce/ further division.

*Answer key 14- 6 - next issue*

Contact: 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE



PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE

AVAILABLE
FOR RENT
Starting from $100.00

Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting, புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய 50 பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு. GTA Square Mall (FINCH & MIDDLEFIELD) தொடர்புகளுக்கு: 416.917.6883

# சூரியனற்ற...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

வெளிப்படுத்தியுள்ளார். நகைச்சுவையாக, கோபக்காரராக, வெறித்தனம் கொண்டவராக, பாவப்பட்டவராக பல்வேறு பரிமா ணங்களை இயல்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

இப்படம் ஒஸ்காரின் சிறந்த பிற மொழிக்கான திரைப்படவிருதின் இறுதிப்பட்டியலில் இடம்பெற்றி ருந்தது. ஆனாலும் சிறந்த பிற மொழிப்படத்துக்கான விருதுக்கு பரிந்துரைக்கப்படும் ஐந்து படங்களுள் ஒன்றாக அமெரிக்காவின் புற அரசியலை விமர்சிப்பதினால் பரிந்துரைக்கப்படவில்லை.

## Post Mortem (பிரேத பரிசோதனை)

இது பப்லோ லறைனின் ஒகஸ்ரோ பினோசெட்டின் ஆட்சிக்காலத்தைப்பற்றிய இரண்டாவது படம். என்னை மிகவும் பாதித்த படம். இப்படத்தை முதலில் பார்த்த பொழுது எனது காலங்களில் நான் மிகவும் அறிந்த அனுபவித்த இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் நினைவுக்கு வந்தது. இப்படம் ஒகஸ்ரோ பினோசெட்டின் கொடூர முகங்களை வெளிப்படுத்த இயக்குனர் கையாண்ட உத்தியாக வெளிப்படுகின்றது. படத்தின் தலைப்பே உள்ளடகத்தை தெரிவிக்கின்றது.




பப்லோ லறைனின் கணினியில் சல்வடோர் அல்லெண்டேயின் பிரேத பரிசோதனைப் பற்றிய முடிவுகளைத் தேடியபோது இப் படத்துக்கான கருவும் தேவையும் தோன்றியதாக ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். இப்படம் சல்வடோர் அல்லெண்டேயின் மரணத்துக்கான கூறுகளை காரணங்களை ஒகஸ்ரோ பினோசெட்டின் ஆட்சிக் காலத்தில் பப்லோ லறைனின் தேடுதலாக அமைந்துள்ளது. புரட்டாதி 11, 1973 சல்வடோர் அல்லெண்டே தனது நாட்டு மக்களுக்கு வானொலி யில் உரையாற்றி முடித்த போது துப்பாக்கி சுடும் சத்தங்கள் கேட்டன. இதனை ஒகஸ்ரோ பினோசெட்டின் ஆதரவாளர்கள் அதிகாரிகள் தன்னைத் தானே சுட்டுக் கொன்ற சூட்டுச் சத்தம் என்றனர். அல்லெண்டே ஆதரவாளர்கள் இராணுவத்தின் துப்பாக்கிச் சத்தம். இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டனர் என்றனர். பிரேத பரிசோதனை தற்கொலை என உறுதிசெய்தது. 2008ல் தடவியல் நிபுண வைத்தியர் லூயிஸ் ரவனாலின் கருத்துப்படி இரண்டு வெவ்வேறு துப்பாக்கிகளில் இருந்து வந்த குண்டுகளே அல்லெண்டேயின் உடலில் காணப்பட்டன. முதலில் பிரேத பரிசோதனை நடத்தியோர் சந்தேகத்திற்கு இடமான பல விடயங்களை கவனத்திலெடுத்து ஆராயவில்லை என மேலும் குற்றஞ்சாட்டியிருந்தார். பப்லோ றைனின் ஆய்வுக்கான காரணங்களை இக்கூற்று மேலும் உறுதிப்படுத்துகின்றது.

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

இப் படத்தில் மரியோ என்ற பிரதான பாத்திரத்தை ஏற்று அல்பிரடோ கஸ்ரோ மிகவும் இயல்பாக நடித்துள்ளார். ராலாக ரொனி மனீரோவில் தோன்றியமைக்கு எதிர்மறையான பாத்திரம். இவர் பிரேத பரிசோதனையகத்தில் தடவியல் உதவ-யாளராக கடமைபுரிந்தார். பிரேத பரிசோதனை வைத்திய நிபுணரின் முடிவுகளை தட்டச்சில் பதிவு செய்வதும் இவரது பணிகளுள் ஒன்று. இவருக்கு இவரது வீட்டின் முன்னால் வசிக்கும் நான்சி மீது நாட்டம். நான்சி ஒரு நடனகத்தில் வேலை பார்த்து விட்டு இப்பொழுது வீட்டில் தனியாக இருக்கின்றார். நான்சி, ஒகஸ்ரோ பினோசெட்டின் அரசுக்கு எதிராக போராடும் இடது சாரிகளுடன் நேரடித் தொடர்புள்ளது. அவர்களது ஒரு ஆதரவாளர்.




பிரேத பரிசோதனையகத்தில் உள்ளோரும் அரசுக்கு எதிரான கருத்தைக் கொண்டுள்ளார்கள். ஒரு நாள் மரியோ வேலைக்கு வரும் பொழுது அங்கு இராணுவத்தினர் கட்டிடத்தினுள் காணப்படு கின்றனர். இவர்களது நடிவடிக்கைகள் மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்படுகின்றன. மற்றொரு நாள் மரியோ, பிரேத பரிசோதனை வைத்தியர், உதவியாளப் பெண் ஆகியோரை இராணுவம் ஒரு மருந்தகத்திற்கு ஏற்றிச் செல்கின்றது. அங்கு இவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்குள் ளான ஒரு உடலை பரிசோதிக்கின்றனர். இராணுவ அதிகாரிகள் இவர்களது நடிவடிக்கைகளை கண்காணித்துக் கொண்டிருக்கின்றனர். வைத்திய நிபுணர் தனது முடிவுகளை தெரிவிக்கின்றார். துப்பாக்கி முனையில் அவர் இது தற்கொலையாக இருக்கலாம் எனத் தெரிவிக்கின்றார். அந்த உடல் சல்வடோர் அல்லெண்டேயினது உடல். மரியோ அல்லண்டே தற்கொலைதான் செய்து விட்டார் என்கின்றார். ஆனால் இவருடன் வேலை பார்க்கும் பெண் இது இராணுவத்தின் கொலை எனத் தெரிவிக்கின்றார். இவர்கள் தங்களுக்குள் வாக்கு வாதப்படலாம். ஆனால் அறைக்கு வெளியே இவர்களால் பேச முடியாது.

இராணுவ அதிகாரி இவர்களுக்கு கூறுகின்றார் "ஒவ்வொரு நாளும் பரிசோத னைக்கு வரும் உடல்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. இதனால் இனி மிகவும் சுருக்கமாக பரிசோதனைகளைச் செய்ய வேண்டும். நீங்கள் செய்ய வேண்டியதெல் லாம் இங்கு கொண்டுவரப்படும் உடல்களில் எத்தனை துப்பாக்கிச் சூடுகள் உள்ளன. எங்கே உள்ளன. அதனை மாத்திரம் பதிவு செய்து விடுங்கள். அதற்கு மேல் எந்த பரிசோதனையும் தேவையில்லை" என்கின்றார்.

மற்றொரு காலை மரியோ வேலைக்குச் சென்றபோது இவருடன் வேலை பார்க்கும் சன்ரா வைத்திய நிபுணரைப் பார்த்து சத்தமிடுகின்றார். இதனை இராணுவ அதிகாரி பார்த்துக் கொண்டு நிற்கின்றார். பரிசோதனை அலுவலகம் முழுவதும் உடல்களால் நிரம்பிக் காணப்படுகின்றது. அப்பெண் உரத்த குரலில் "என்னால் இதனை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. உயிருடன் கூட உடல்கள் இறந்ததாக கொண்டு வரப்படுகின்றன. இப்பொழுதும் இங்கு சில உடல்கள் உயிருடன் உள்ளன. இவர்களைக் காப்பாற்றுங்கள்" எனக் கூச்சலிடுகின்றார். இராணுவ அதிகாரி மிகவும் அமைதியாக சன்ராவை நோக்கி நகர்கின்றார். தனது துப்பாக்கியை வெளியே எடுத்து இனிமேல் அந்தப் பிரச்சினை இருக்காது எனக் கூறி உயிருடன் இருந்த உடல்களை துப்பாக்கியால் சுட்டுக் கொல்கின்றார்.


இப்படம் உண்மைச் சம்பவங்களை மையமாகக் கொண்டிருந்தாலும் இயக்குனர் தனது விமர்சனப்பார்வை ஒன்றையும் இங்கு முன்வைக்கின்றார். பிரேத பரிசோதனை செய்யும் வைத்தியரையோ அல்லது வேறு முன்நிலைப் பாத்திரங்களையோ கதை சொல்லியாக முன்வைக்கவில்லை. பிரேத பரிசோதனை அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒரு சாதாரண அலுவலரின் பார்வையிலேயே திரைக்கதையை அமைத்துள்ளார். யார் இந்த மரியோ? அல்லண்டேயினது உடல் பரிசோதனை முடிந்த பின்னரான அறிக்கையில் மூவர் கையொப்பங்களிருந்தன. இருவர் பிரபல்ய நிபுணர்கள். மூன்றாமவர் மரியோ கோர்நெஜோ. இவர் அங்கு வேலை பார்த்த ஒரு அலுவலர். இவரைத் தேடிச் சென்ற போது அவர் இறந்து விட்டார். அவரது மகனும் இதே வேலை பார்த்துக் கொண்டிருக்கின்றார். இவரது பிரசன்னத்தைப் பற்றி எவருக்கும் கவலை இல்லை. அதே சமயம் இவரைப் பற்றியும் எவருக்கும் அக்கறை இல்லை. ஆனால் இவர் சரித்திர பிரசித்தி பெற்ற முக்கிய படிவத்தில் கையொப்பமிட்டுள்ளார். இயக்குனர் இவரது கண்களூடாக திரைப்படத்தை படைத்துள்ளார்.

தொடரும்...

# இயற்பியல் உலகின் மாபெரும் சாதனை!

## ஈர்ப்பலைகள் இனம் கண்டுகொள்ளப்பட்டன

சென்ற மாதம் இயற்பியல் விஞ்ஞானிகள் தாங்கள் ஈர்ப்பலைகளை (Gravity Waves) இனம் கண்டு கொண்டு விட்டோமென அறிவி த்துள்ளார்கள். கடந்த 20 ஆண்டுகளிலேயே நடந்த மிகப் பெரிய கண்டுபிடிப்பு இதுவென்று கூறும் இவர்கள், 2014ம் ஆண்டிற்கான இயற்பியலின் நோபல் பரிசிசைனப் பெறக் கூடியதான அறிவியற் கண்டுபிடிப்பென இதனைக் கூறி, மார்தட்டிக் கொள்கின்றார்கள். சிலர், கடந்த ஆண்டின் கடவுட் துணிக்கைக் கண்டு பிடிப்பை விடவும் இதனைத்தான் பெரி யதாகக் கூறிக் கொள்கிறார்கள். இத்தகைய உயர்வான இவ்விபரம் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம். 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அயன்ஸ்ரைன் சார்புக் கொள்கை வெளியிட்ட வேளையில், ஈரப்பலை-களைப் பற்றியும் குறிப்பிட்டு இருந்தார். பேரண்டம் முழுவதிலும் இந்த ஈர்ப்பலைகள் பரவிக் கொண்டே இருக்கின்றனவாம். நீரிலே நீரலைகள், நீர்த் துணிக்கைகளின் குழம்பல்களினால் தோன்றிச் செல்கின்றன அல்லவா. அவ்விதமே இந்த ஈர்ப்பலைகளும் பேரண்டத்தின் வெளி-நேரப் பரிமாணத்தில் குழம்பல்களை ஏற்படுத்திக் கொண்டு செல்கின்றனவாம். நீரலைகள் செல்கையில் அவ்வலை இயக்கம் சக்தியை கடத்திக் கொண்டு செல்கின்றது. சுனாமியின் போது பெருமளவு சக்தி ஆழிப்பேரலையால் எடுத்துச் செல்லப்படுவது இப்போது எங்களுக்குத் தெரியும். அதுபோலவே, ஈர்ப்பலைகளும் ஈர்ப்பு சக்தியை கடத்திக் கொண்டு செல்கின்றனவாம்.




◊ கனி ◊

ஈர்ப்பலைகள் நீரலைகளிலும் சற்று வேறானவை. ஏனெனில் ஈர்ப்பலைகள் செல்லும் வெளி நேரம் என்பது நீரைப் போன்றதல்ல. அதனால் ஈர்ப்பலைகளின் இயக்கம் நீரலைகளிலும் நின்று வேறுபடு கின்றது. இவை ஒளியலைகள் போன்ற மின்காந்த அலைகள் போன்றவை. மின்காந்த அலைகள் போன்றே செக்கனுக்கு 3 இலச்சம் மீற்றர் கதியினை உடையன. அலை செல்கிற திசைக்குச் செங்குத்தான அதிர்வுகளில் மின்காந்த அலை செல்வது போல், ஈர்ப்பலை களும் வெளிநேரப் பரிமாணத்தில் ஈர்ப்பலை செல்லும் திசைக்குச் செங்குத்தாகவும், தமக்குள்ளும் செங்குத்தான இரண்டு போக்குகளிலும் (ஒன்று மேல் - கீழ், மற்றது இடம் - வலம் என்னும் வகையில்) நெருக்கல்களையும், ஐதாக்கங்களையும் உண்டாக்கிக் கொண்டு செல்கின்றன. இது எவ்விதம் நிகழ்கின்றது என்பதனையும் தெரிந்து கொள்வோம்.

எங்களது பேரண்ட வெளி, முப்பரிமாணப் புள்ளிகளும் நேரமும் இணைந்த நாலு பரிமாணங்களைக் கொண்டது. இந்த நாற்பரிமாண வெளிநேரத்தின் சிறப்பு என்னவெனில், அதிலுள்ள புள்ளிகள் எல்லாம் நேரத்துடன் இணைந்திருப்பதால் ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்டு இருக்கின்றன. அதனால் அது இழுபடும் தன்மை கொண்டு காணப்படுகிறது. இவ்வெளியின் ஒரு புள்ளியில் சடமோ (பொருளோ) அல்லது சக்தியோ இருக்கும் போது வெளிநேரப் பரிமாணம் பொருளினால் அல்லது சக்தியினால் சுருட்டப்படும். அதனால் வெளிநேரம் அவ்விடத்தில் வளைவுறும் எப்பொருள் அல்லது சக்தி அவ்விடத்தில் நின்றும் அடுத்த இடத்திற்கு மாற்றமாக, அவ்வளைவு அடுத்த புள்ளிக்கு மாற்றலாக, முதற் புள்ளி தனது பழைய நிலைக்கு வந்துவிடும். இது கிட்டத்தட்ட நெருக்கல்களையும் ஐதாக்கல் களையும் அப்புள்ளியில் உண்டாக்குவது

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
CHEMISTRY, PHYSICS, BIOLOGY
FUNCTIONS, ADV. FUNCTIONS
CALCULUS & VECTORS, DATA MGT
SCIENCE, MATH, ENGLISH, FRENCH
Individual & Small Group classes, Individual care
GR 1- 12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
SPECIAL CLASSES FOR
PRE-UNIVERSITY
MCAT EXAM
IB & AP program
SUMMER CLASSES "July- August"
REGULAR CLASSES "Throughout the year"

# அனைவருக்கும் எமது உளம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# நிரு பிராண்ட்




## மேலைத்தேசத்தில் கீழைத்தேசத்து வாசனைகள்

Niru Enterprises Inc
40 Minuk Acres
Scarborough, ON M1E 4Y6
Canada
Tel: 416.750.1976
Fax: 416.750.8779
www.niru.com

நிரு
பிராண்ட்


# இயற்பியல்...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

போன்றது. இது மாறிமாறி அடுத்தடுத்த புள்ளிகளில் உண்டாக, ஈர்ப்பலை தோன்றி முன்னேறிக் கொண்டு போகும்.

இனி, ஒரு இடத்தில் சடுதியாக சக்தி மாற்றம் அல்லது சக்தி இழப்பு அல்லது பொருளழிவு ஏற்பட்டால் அவ்விடத்தில் ஈர்ப்பலைகள் தோன்றுகின்றன என்கிறார்கள் விஞ்ஞானிகள். எடுத்துக் காட்டாக, எங்களது புவி, கதிரவனைச் சுற்றுகையில் கிட்டத்தட் 20 வீதமான சக்தியை இழக்கிறது. அச்சக்தி ஈர்ப்பலைகளாகப் பேரண்ட வெளியில் பரவுகின்றது. இராட்சத சென்னிற விண்மீன்னொன்று சுப்பநோவா வெடிப்புக் குள்ளாகிக் கருந்துளையாக மாறுகையில் பெருளவு சக்தி வெளிவீசப்பட, அங்கும் ஈர்ப்பலைகள் உருவாகுகின்றன. இரண்டு கருந்துளைகள் ஒன்றாக இணையும் போதும் பெருமளவு சக்தி வெளி வீசப்பட, அவ்விடத்திலும் இருந்தும் ஈர்ப்பலைகள் செல்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, 13700 மில்லியன் ஆண்டு முன்னராகப் பிக்பாங்குடன் பேரண்டம் தோன்றிய போதும் ஈர்ப்பலைகள் தோன்றி பேரண்டம் முழுவதும் பரந்து கொண்டே இருக்கின்றன. ஆக, பேரண்டம் முழுவதும் இந்த ஈர்ப்பலைகள் இருக்கின்றன.

பேரண்ட வெளி எங்கிலும் இந்த ஈர்ப்பலைகள் காணப்பட்டாலும், அவற்றை நாங்கள் கண்டுகொள்ள முடியாது என்று ஈர்ப்பலைகளைக் கொள்கை வாயிலாக அம்பலப்படுத்திய அயன்ஸ்ரைன் கூறியிருந்தார். ஏனெனில் அவ்வலைகளின் வீச்சு மிகவும் சிறியதாம். நீரலைகள் எங்கள் கண்களுக்குத் தெரிவது, நீர்த் துணிக்கைகள் மேலும் கீழும் போகையில் ஏற்படும் இடப்பெயர்ச்சியை எங்களால் காணக் கூடியதாக இருப்பதால் ஆகும். ஆனால், ஈர்ப்பலைகள் செல்கையில் இவை ஏற்படுத்தும் இடப்பெயர்ச்சி (இதனை வீச்சம் என்பார்கள்) மிகவும் சிறியதாம். சிறிய தென்றால் சின்னன் பொனன்னல்ல. ஒரு



மீற்றரை மில்லியன்களால் நாலு தடலைகள் வகுத்து (பிரித்து) வருகின்ற விடையை மேலும் பத்தாயிரத்தால் வகுத்தால் எவ்வளவு வருமோ அவ்வளவு சிறியதாக இருக்குமாம், ஈர்ப்பலைகளின் வீச்சம். கணிதத் தீர்வுகளின் மூலமாக இதனைக் கண்டுபிடித்த அயன்ஸ்ரைன் இவ்வளவு சிறிய வீச்சுடைய ஈரப்பலைகளை இனம்காண முடியாது என்று கூறிவிட்டார்.

ஆனால் விஞ்ஞானிகள் சும்மா இருக்கவில்லை. வேறு வழிகளில் ஈர்ப்பலை-களைக் கண்டுபிடிக்க முனைந்து வெற்றியும் அடைந்து விட்டார்கள். அகிலப் பின்புலக் கதிர்வீச்சுகள் என்பவையும் பிக்பாங்குடனேயே தோன்றிய கதிர்வீச்சுகள். மின்காந்த அலைகளாகப் பரவிய இந்த அகிலப் பின்புலக் கதிர்கள் இப்பொழுதும் வலிமை குறைந்த அலைகளாகப் பேரண்டம் முழுவதிலும் செல்கின்றன. இந்த அகிலப் பின்புலக் கதிர்களின் அலை வடிவங்களில், அதாவது மின், காந்தத் துடிப்புகளில் ஈரப்பலைகள் தங்களது கைவரிசையைக் காட்டி அவற்றை மாற்றிவிட்டன. இப்படியாக ஈர்பலைகளால் தம்வடிவில் விகாரமடைந்த அகிலப் பின்புலக் கதிர்களின் அலை-களைத்தான் அந்தக் கில்லாடி விஞ்ஞானிகள் கண்டு பிடித்துக் கொண்டார்கள். எங்களது வளிமண்டலக் குழப்பல்கள் இல்லாத வெளியிலே ஓடித்திரியும் அகிலப் பின்புலக் கதிர்களைத் தேடிப்பிடித்து இந்தச் சாதனையை முடித்திருக்கிறார்கள்.

சரி, இதிலென்ன பெருமை என்கிறீர்களா? பேரண்டம் தோன்றியதும் அதிலிருந்து காலமாற்றத்துடனான பரிணாம மாற்றத்தால் நான் நீங்கள் உட்பட, பேரண்டத்துள் இருந்த அத்தனையும் பிக்பாங்கில் இருந்துதான் என்று இயற்பியல்வாதிகள் கூறுகின்றார்கள். அதனை இக்கண்டு பிடிப்பு உறுதி செய்கிறது என்கிறார்கள். அதாவது எங்கள் பிறப்பின் ஆரம்பத் தடங்களைக் கண்டுபிடித்து விட்டோம் என்று பூரிப்படை கின்றார்கள். அது சரியோ என்னவோ மனிதர்களின் முயற்சி திருவினையாக்கும் என்பதனைக் காட்டியிருக்கிறார்கள். அதனால் எங்களுக்கும் பெருமைதான்.

AMBIHA SILK (Fancy Jewellery)
FINCH & MIDDLEFIELD

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர
Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம்,
மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces
வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top
இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
அழையுங்கள்: 416.297.5261



Seelan Siva Aiyadurai
Real Estate Broker
Direct: 416.451.0271
Email:seelansiva@gmail.com
Web:www.Egtahomes.com

Seelan Siva Real Estate
Buy.Sell.Invest


Uthayan Aiyadurai
Sales Represntaive
Direct: 416.999.3555
Email:aiya14@gmail.com

"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"



Kennedy/401
2 Bedroom 2 washrooms Condominium
Gorgeous Laminate Flooring In Living,
Great Location!!! Tridel Condo



Kennedy/401
1+1 Bedroom One washrooms Condominium
Gorgeous Laminate Flooring In Living,
Luxury Tridel Condo



Finch/Middlefield
Well Established Existing
Convenience/Grocery Store For Over 25 Years
Located In Agincourt With Lotto 649 Machine



Steels/Middlefield Rd
Ideal Location For Professional Or Service Use!
Total 2700 sqft
Can be use as one or two units

HOMELIFE/GTA Realty Inc.
Brokerage*
Bus:(416)321-6969
5215 Finch Ave. E, Suite 203, Toronto, ON M1S-0C2
This is not intended to solicit properties currently listed for sale.
*Independently Owned and Operated
*Some Conditions Apply

நகைச்சுவைத் தொடர் 285

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நிதன்



தெரிந்து கொள்ளுங்கள்!
மலேசிய (ஆகாய) கப்பலை கண்டுபிடித்த பாடில்லை... ஆனால் இலங்கை கடற்படை மதுபானம் கடத்தும் கப்பல்களை நடுக்கடலில் பிடிக்கிறது. --- செய்தி



இப்போ சிறு மாற்றம்: இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படை குளிர்பானம் கொடுத்து கொண்டாடுவதாகச் செய்தி.

கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன் யாருக்காகக் கொடுத்தான்?

ஐ.நா. அறிக்கையும் அயல் நாடுகளின் அசட்டையும்




திருமண வீட்டிற்கு வந்தபின் சாப்பிடும் நேரம் பழைய பகையை நினைத்து சாப்பிடாமல் எழுந்து செல்வதுபோல...

ஐ.நா. சபையில் போர்க்காலம் முதல் இன்றுவரை மனித உரிமை மீறல், கொலை, நில அபகரிப்பு, அது இது என நவநீதம்பிள்ளையின் அறிக்கைக்கு ஆதரவாக இலங்கை மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வாக்கெடுப்பு ஆரம்பிக்க பல நாடுகள் நழுவி விட்டன.



குற்றமற்றவர்கள் முதல் கல்லை எறியுங்கள் என்றபோது ஒருவரும் கல்லை எறியவில்லை. எல்லோரும் குற்றமிழைத்தவர்களே. அதே போலத்தான் பதவிக்காக பலரைக்கொலைசெய்த நாடுகளிலிருந்து வந்தவர்கள், தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட்டவரை நடுச்சாமத்தில் குண்டெறிந்து... நாட்டவர், எப்படி நீதி கேட்பவர்களுக்கு வாக்களிப்பார்கள்? ஆனால் அமெரிக்கா தலையிட்டதால் சிலர் முகம் முறிக்காத நிலையில் வாக்களித்துள்ளனர்.
அடுத்து நடக்கப்போவதென்ன ?



இத்தனை அமளிதுமளிக்குள்ளும் தமிழகத்தேர்தல் சூடுபிடித்துள்ளது.
எப்படி எதிர்க்கட்சிகளைத் திட்டலாம்,
அவரவர் ஆட்சியிலிருக்கும்பொழுது என்னென்ன பிழைகள் விட்டனர் என்ற பட்டியல் மக்களுக்கு இலவசமாக வந்து காதில் விழுகிறது.



கடந்த தேர்தலில் நகைச்சுவை நடிகர் வைகைப்புயல் வடிவேலு கட்சி ஏவலில் எதிரணியைத் தாக்கிப்பேசி தேர்தல் களத்தால் நடிப்புத்தளத்தை இழந்து நிற்கிறார்.

இந்தமுறையும் பல நடிகர்கள் தேர்தல் பிரசாரத்தில் குதித்துள்ளனர்.
விதி யாரை விட்டது?..

வாகனமோட்டியபடி செல்போன் பாவனை பேசுதல், ரெக்ஸ்ற் ஈமெயில் பண்ணுதல் குற்றப்பணம் அதிகரிக்கிறது.

401 பெருந்தெருக்களிலிருந்து வெளியேறும்பொழுது உள்ள றாம்பில் (RAMP) பண உதவி கேட்டு சிலர் (help me please) என எழுதிய அட்டையுடன் நிற்பார்கள். சிலர் முடிந்தளவு செய்வார்கள். ஆனால் பொலீசார் திடீர் வேட்டையில் அந்த இடத்தை தமதாக்கி கொண்டு பல செல்போன் பாவனையாளர்களை பிடித்திருக்கிறார்கள். ஒன்று இரண்டு டொலர் செலவ-டாமல் மிச்சப்படுத்தும் பலருக்கு $280 டொலர் தண்டப்பணம்.


ஊர் விழாக்கள், பொதுநிதி என எந்தவொரு ரிக்கற்றும் எடுக்காதவர்களுக்கு இது பெரிய தொகைதான்.

இறைவன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான். ஆனால் பொலீஸ் றாம் (RAMP) பிலும் இருப்பான். ரபிக் லைற்ரடியிலும் இருப்பான்.

இதுவரையில் நான் ரமில் பேப்பர் படிக்கிறேல்லை, றேடியோ கேட்கிறேல்லை என்று சொன்ன ஐ பொட் அகிலாண்டேஸ்வரி தமிழ்ப் பேப்பர்களை தட்டித்தட்டி வாசித்தா.



ஏதோ புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்த செக்கண்ட்புளோர் செல்லம்மா, "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்" என்றபடி கடைக்கண்ணால் உலகரைப் பார்க்க ஆட்டிலறி அன்னம்மா கடுமையான குரலில் செல்லம்மா அகிலாண்டேஸ்வரியை சொறி அகிலாவை வாசிக்க விடு என்று மனதுக்குள் குதூகலம் பொங்க சொன்னா.



உக்கிரேன் பிரச்சினையில் முகம் எவ்வளவு கடுகடுப்பாக கொடூரமாக ரி.வி.யில் பேட்டி கொடுக்கும் ரஸ்சியாவின் தலைவர் புட்டின் போல முகத்தை வைத்துக்கொண்டு தொடர்ந்து வாசித்தா ஐ பொட் அகிலாண்டேஸ்வரி.



தென் மாகாணத்தில் ஆளும் கட்சிக்கு அதிர்ச்சி
5 ஆசனங்கள் இழப்பு என்ற செய்தியை இழுத்து இழுத்து வாசித்தா. இன்று செய்திகள் வாசிக்கும் பலர் தமிழைப் பயிற்சி பண்ணாமல் இப்படித்தான் தமிழைப் பிச்சு பிச்சு எறிகிறார்கள்.



இதற்கிடையில் ரொரன்ரோவில் வெடிங் சோவிற்கு வந்த திரிசாவை ரெலிவிசனில் பார்த்துவிட்டு தனது காண்ட் பாக்கைத் திறந்து தனது கண்ணாடியை எடுத்து தனது முகத்தையும் திரிசாவின் முகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்த அகிலாண்டேஸ்வரியை
பல தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி இழப்பால் வாடிய சோனியா காந்தியின் முகம் போலானதை உலகர் குழாம் கவனிக்கத்தவறவில்லை.



உலகர் கலண்டரையும் சர்வதேச நேரத்தையும் ஒப்பிட்டு எந்தெந்த நாட்டில் எந்தெந்த நேரம் சித்திரை வருசம் பிறக்குது என கணக்குப்பாத்துக் கொண்டிருந்தார்.




ஏப்பிரல் 1…15..


1 ஏப்பிரல் மறக்கமுடியுமா APRIL FOOL
நானொரு முட்டாளுங்க நல்லாப்படித்தவங்க நாலுபேரு சொன்னாங்க –சந்திரபாபு

1. பங்குனித் திங்கள் பொங்கல்


1. ஈழத்து தமிழறிஞர் சி. கணேசையர் பிறந்த தினம் 1878–1958

2. 1975 சி.என். கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. 553.33 மீற்றர்

4. 1949 இல் 12 நாடுகள் ஐக்கிய அமெரிக்கா தலைமையில் இணைந்து நேட்டோ அமைப்பை உருவாக்கின.




4. பாப்பரசரின் வேண்டுகோளையும் விடுத்து நேட்டோ வான் படைகள் உயிர்த்த ஞயிறு தினத்தன்று முன்னாள் யுகோசிலேவியா மீது குண்டுகளை வீசின.



6. 1896…1ம் ஒலிம்பிக் தினம் ஆரம்பமான தினம்.

7. நாதஸ்வர மேதை காரைக்குறிச்சி அருணாசலம் நினைவு தினம்



12. சனிப்பிரதோசம்

13. குருத்து ஞாயிறு - குருத்தோலை திருவிழா

14. சித்திரை புத்தாண்டு ஜய வருடம்
மானிப்பாய் மருதடி விநாயகர் தேர்



**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at **Scarborough & Stouffville Contact: 647.340.9490 / 416.732.2228**

யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா

**இராப்போசன விருந்து - 2014**

ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமை, மாலை 5:30மணி
***Chandni Grand Banquet***
***3895 McNicoll Ave., Scarborough, ON, M1X 1E7***
***(Near Morningside Ave. & McNicoll Ave.)***
பாட்டு & நடனம் - அக்னி பாடகர் குழு
பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அவர் தம் குடும்பத்தினர் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

416.276.7650 / 905.940.5261 / 416.856.690 / 416.930.9119

# சித்திரை புத்தாண்டு




வருடா வருடம் வரும் ஒரு தினம்
வாழும் உயிர்களுக்கு கெல்லாம் சுபதினம்
சித்திரை முதல் திங்களில் வரும் அத்தினம்
சித்திரை புத்தாண்டு எனப்படும் தினம்

நித்திரை விட்டு காலையில் என்று எழும் எம் இனம்
நித்திய கருமங்கள் செய்யுமுன் அத்தினம்
மருத்து நீர் சிறமேற் தேய்த்து மனம் குளிர
மருவி நீர் ஆடி மகிழ்வினம்

ஆலயம் சென்று அங்கு எம் இனம் தீப
ஆராத்தி செய்து இறைவழிபாடு செய்வினம்
பூசைகள் முடிந்த பின்பு தான் வீடு திரும்பிவந்து
புண்ணிய காரியங்கள் செய்வினம்

புதிய கணக்கு என்று சொல்லி வணிகர்கள்
புதிதாக ஒரு கணக்கை திறப்பினம்
வாடிக்கையாளர்களை வரவழைத்து அங்கு
வரவேற்று விருந்துபசாரம் செய்து மகிழ்வினம்

சிறுவர்கள் பெரியவர்களுக்கெல்லாம் வெற்றிலையில்
சில்லறைகள் வைத்து கைவிசேடம் கொடுத்து மகிழ்வினம்
புனித நீராடி புத்தாடை போர்த்தி பலரும்
புதுப் பொலிவுடன் கொண்டாடும் சித்திரை புத்தாண்டு

- கவிநாதம் - பரந்தாமன்

**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

# கனடா காக்கை



கண்டேன்காக்கை ஒன்றை கனடா நாட்டில்
கருவாட்டு தலையொன்று அதன் காலடியில்
உணவு கிடைத்தால் ஊரைக்கூட்டும் காக்கை
ஊமைபோல் உட்கார்ந்து உட்கொண்டது உணவை

கத்தவில்லை கரையவில்லை கடைக்கண்ணாலும் பார்க்கவில்லை
கருவாட்டு தலையினிலை அதன்கவனம் இருந்தது
கனடாவில் நம்மவர்கள் ஒற்றுமை போல்
கனடா காக்கைகளும் ஒற்றுமை மறந்ததுஏன்?

அன்றொரு ஆடி அமாவாசை நாளில்
அழைத்தேன் காக்கையரை விருந்து வைக்க
கடும் முயற்சியின் பின்வந்தது ஒருகாக்கை
கடைக் கண்ணாலும் பார்க்கவில்லை அவ்விருந்தை
சைவம் பிடிக்கலையா? என்சமையல் சரியில்லையா?

கரைந்தழைக்க கனடாவில் காகம்தான் இல்லையா?
கரைந்து போய்விட்டதா கரைந்தழைக்கும் குணம்?
நாடுவிட்டு நாடுவந்தால் நாலும் போய்விடுமா?
நல்லதொரு பதில்இதற்கு நம்மவரே சொல்லும்.

ஒற்றுமைக்கு உதாரணமாய் உலகறிந்த காக்கையரே
உம்மினத்தில் உலுத்தன் குணம் வந்ததுஏன்?
எம்மினத்தை பார்த்துநீ கற்றுக்கொண்ட பாடமா?
இன்றுடனே விட்டுவிடு இந்த ஈனக்குணத்தை



- மார்க்கம் சந்திரன் -



CENTUM Optima Mortgages Inc.

**Need a Mortgage?**

- Residential and Commercial Mortgage
- 2nd Mortgage
- Purchase & Refinance
- Renewal & Switch
- Home Equity loan



**Gini Annarasa**
Mortgage Broker Lic #M08005550
Cell: 416.830.3241
Email: gini.annarasa@gmail.com

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL



**Vany Jeganmohan**
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca

HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!™

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்



**SASI CHELVARATNAM**
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2
*Independently Owned & Operated

"Let me help you make the right choice"



**SchurenSriskandarajah** B.A
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393



Low Mortgage Rates

**TD Canada Trust**

Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692
1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

Free Real Estate Class - Call: 416.321.6969

**RealEstate / Mortgage / Commercial Investments**

| ROSSLAND | VANHORN & HWY404 | MCCOWAN & DENISON |
|---|---|---|
|  |  |  |
| Bedrooms: 4<br>Washrooms: 3<br>Price: $509,900 | Bedrooms: 4<br>Washrooms: 3<br>Price: $669,888 | Bedrooms: 3<br>Washrooms: 3<br>Price: $499,900 |

| MARKHAM & SHEPPARD | TAUNTON & HWY 115 | SCAR.GO.CLUB& BRIMORTON |
|---|---|---|
|  |  |  |
| Bedrooms: 2<br>Washrooms: 2<br>Price: $279,900 | Gas Station, Motel<br>1 Hour from Toronto<br>Price: $1.4M | Bedrooms: 3<br>Washrooms: 2<br>Price: $539,900 |

MORTGAGE ALLIANCE

RE/MAX Dynasty Realty Inc. Real Estate Brokerage



**A. Anton Jeeva** B.Eng
Hall Of Fame Award Winner
Ranked among the top 1% of all Realtors in the GTA
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage
8 Shadlock St, Unit #7
Markham, ON L3S 3K9

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"

REAL ESTATE List Buy Sell

TOP 5% SALES REPRESENTATIVES IN CANADA

CHAIRMAN'S CLUB AWARD WINNER 2012



HomeLife GTA Realty Inc., Brokerage
**Raj Paramasamy** Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
Guaranteed Result

**Daily News**
**www.tamilvanakkam.com**
**For Advertisement**
**Call 416.282.8059**

**Sales Reps. Welcome**

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)



For All your Real Estate & Investments Needs!

**HomeLife/GTA Realty Inc.** Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED